بسم الله الرحمن الرحيم

"
மார்க்கத்திலிருந்து
நூஹுக்கு எதனை
அவன் உபதேசித்தானோ
அதனையே
உங்களுக்கும் அவன்
மார்க்கமாக்கியுள்ளான்.
(நபியே!) உமக்கு நாம்
வஹீ அறிவித்தோமே
அதுவும், இன்னும்
எதனை இப்ராஹிமுக்கும்,
மூஸாவுக்கும், ஈஸாவுக்கும்
நாம் உபதேசித்தோமோ
அதுவும் என்னவெனில்
"இம்மார்க்கத்தை
நிலை நாட்டுங்கள் ;
இதில் நீங்கள் பிரிந்து
விடாதீர்கள்" என்பதாகும்.
(அல்குர்ஆன் - 42:13)
"


☛ மோடியின் ஊழல் அம்பலம் - 6

☛ கர்கரே கொலை வழக்கில் தீர்ப்பு! - 18

☛ நான் ஏன் ஓர் அமெரிக்கன் அல்ல - 28

☛ பர்மாவில் கண்டுபிடிக்கப்பட்ட கூட்டுப் புதைகுழிகள் முஸ்லிம்களின் பிணங்கள்! - 30

☛ முஸ்லிம்களைக் கொலை செய்யும் பௌவுத்த பெண்கள் - 34

☛ டிரம்பின் ட்வீட்டுக்கு பாகிஸ்தான் பதில் - 38

☛ பிளாக் வாட்டர் பயங்கரவாதம் - 41

☛ மாற்றத்தை நோக்கி... - 52

☛ எது முதலில்? - 54

☛ இஸ்லாமிய வங்கி முறை - 58

☛ தமிழக முதல்வருடன் இஸ்லாமிய அமைப்புத் தலைவர்கள் சந்திப்பு - 60

☛ பெல்லட் குண்டுகளும் கஷ்மீர் மாணவிகளும்...? - 62



மார்ச்-2018

# வைகறை
## வெளிச்சம்

ரஜப்-1439

ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது, M.A., Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



http:/www.facebook.com/vaigarivelicham

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

# தலையங்கம்

## கறுப்பின அடிமைகளின் விடுதலை

**1965 பிப்ரவரி,21 வரலாற்றில்..?**
**மால்கம்-X (எ) மாலிக்குல் ஷாபாஸ் ஷஹீதான நாள்**

**அமெரிக்காவில் வாழும் கறுப்பர்கள், ஆப்பிரிக்காவிலிருந்து கடத்தி வரப்பட்டவர்கள். அங்கே அடிமைச் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டவர்கள். அதனால் அடிமைகளாய் அனைத்து உரிமைகளையும் இழந்தவர்களாய் ஆக்கப்பட்டவர்கள்.**

அமெரிக்காவின் சேரிகள்தாம் அவர்கள் வாழ்வதற்கு ஒதுக்கப்பட்ட இடம். இந்த சேரி களுள் ஒன்றில் 1925 ஆம் ஆண்டில் பிறந்த கறுப்பர்தாம் **மால்கம்-X** என்ற மால்கம் லிட்டில். இவர் பிறந்த 1925களில் அமெரிக் காவில் கறுப்பர்களின் உரிமைகளுக்காகப் போராடி வந்த பேரியக்கம் கறுப்பு தேசிய இயக்கம். இந்த இயக்கம் 'மார்க்கஸ் கார்வி என்பவரால் இயக்கப்பட்டது. இதில் அங்கம் வகித்தவர்தான் **மால்கம்-X** இன் தந்தை. வேகமாக கறுப்பர்களின் விடுதலைக்காகப் போராடினார் என்பதனால் குளு கிளக்ஸ் கிளான் KLU KLUX KLAN என்ற வெள்ளை நிற வெறியர்களால் கொலை செய்யப்பட்டவர் **மால்கம்-X** இன் தந்தை.

இந்த குளு கிளஸ் கிளான் அமைப்பு நம் நாட்டில் இன்று தலைவிரித்தாடும் பாசிச, இனவெறி, வகுப்பு வெறி அமைப்புகளைப் போன்றதொரு கொலைக் கும்பல்.

"இந்த KLU KLUX KLAN என்ற அமைப்பைப் பற்றித் தெரிந்திட படியுங்கள் வைகறை வெளிச்சம் 2015 ஜூலை இதழ் அட்டைப்படக் கட்டுரை.

**மால்கம்-X** என்ற மால்கம் லிட்டில் பள்ளிப் படிப்பில் முதன்மையாக வந்தார். அவருடைய ஆசிரியர் அவரிடம் உன்னுடைய வாழ்க்கை யின் லட்சியம் என்ன எனக் கேட்டபோது அவர் "நான் வழக்கறிஞராக ஆக வேண்டும் என விரும்புகிறேன்" என்றார். இதற்கு ஆசிரியர் கறுப்பர்கள் அப்படியொரு லட்சியத்தை வைத்துக்கொள்ளக் கூடாது, முடியாது. அதனால் நீ ஒரு தச்சுத் தொழில் அல்லது அதுபோன்ற தொழிலில் ஈடுபடுவதை லட்சியமாக வைத்துக்கொள் என்றார்.

விரக்தியுற்ற **மால்கம்-X** திருட்டு, பாலியல் வன்மம் போதைப் பொருள் கடத்தல், விற்பனை போன்றவற்றில் தன்னை ஈடுபடுத் திட வேண்டியதாயிற்று.

அமெரிக்காவில் கறுப்பர்களுக்கு இது போன்ற தொழில்களுக்குத்தான் அதிகமான இடம் விடப்பட்டிருந்தது வெள்ளை நிற வெறியர்களால். ஏனைய எல்லா வழிகளும் அடைக்கப்பட்டே கிடந்தன. இந்நிலையில் வறுமையும் கொடுமையும் தாழாமல், அவரு டைய தாயார் மன அழுத்தங்களுக்கு ஆளான ாள். மன நோயாளியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். அதன்பின் அவள் சுயநினை வுக்கு வரவே இல்லை. இவையெல்லாம் **மால்கம்-X** ஐ விரக்தி வயப்படுத்தியது.

விரக்தியும் வறுமையும் **மால்கம்-X** ஐ வேறொரு விதமான வாழ்க்கைக்குள் பிடித்துத் தள்ளியது. திட்டமிட்டு கொள்ளை அடிப்பதன் பக்கம் திரும்பினார். இதனால் சிறைவாசியா னார். சிறையில் நூல்களை வாசிக்கக் கற்றார்.

சிறைச்சாலையின் அவலங்களினூடேயும், அவர் வாசிப்பை வழக்கமாக ஆக்கிக் கொண்டார். வாசித்தார், வாசித்தார், வாசித்துக் கொண்டே இருந்தார். இந்த வாசிப்போடு இஸ்லாத்தோடும் தொடர்பு கொண்டார், இஸ்லாத்தை ஏற்றார். சிறையிலும், சிறையி லிருந்து வெளிப்பட்டபோதும் இஸ்லாத்தை வேகமாகப் பிரச்சாரம் செய்தார்.

கறுப்பர்களை வெள்ளை நிறத்தவர்களின் அடிமைத் தனத்திலிருந்து தன்னை விடுவித்த

இஸ்லாம் தன்னைச் சார்ந்த சமூகத்தை முழுமையாக விடுதலை செய்யட்டும் என பிரச்சாரம் செய்தார்.

கேசியஸ்கிளே என்ற உலக மகா குத்துச் சண்டை வீரன் முஹம்மத் அலீ போன்ற பலரையும் இஸ்லாத்தில் இணைத்தார். ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றினார். அங்கே வெள்ளை நிறத்தவர்களை வெறுப்பதும், தவறு என்ற முடிவுக்கு வந்தார்.

இஸ்லாம் உலக மக்கள் அனைவரையும் விடுவிக்க வந்த மார்க்கம் என உலகமெல்லாம் சென்று பிரச்சாரம் செய்தார்.

அவரது பிரச்சாரத்தின் வேகத்தையும் அதனால் இஸ்லாம் இகமெங்கும் பரந்து விரிவதையும் தாங்கிட இயலாத அமெரிக்க உளவுத்துறை, குளு கிளஸ் கிளான் ஆகிய அமைப்புகள் சதி செய்து அவரை கொலை செய்தன. அந்த நாள்தான் பிப்ரவரி–21, 1965.

இந்த நாளையும், இந்த மாதத்தையும் அமுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் (தலீத்களின்) விடுதலைக்கு அர்ப்பணித்து உலகமெங்கும் பிரச்சாரங்களை செய்கின்றார்கள். இது பிப்ரவரி 21 முதல் மார்ச் 21 வரை தொடரும். அதனை இங்கே நாமும் மக்கள் மன்றத்தில் கொண்டு சேர்க்கின்றோம்.

இந்த நாளை முன்னிட்டு **மால்கம்-X** என்ற வேர்கள் பதிப்பகத்தின் 80 ரூபாய் விலையுள்ள நூலை 50 ரூபாய்க்குத் தருகின்றோம்.

வாசகர்கள் அதனைப் பரவலாக்கி அமுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு உதவிட வேண்டுகிறோம். முஸ்லிம்கள் இந்த நூலை படிப்பதோடு அதனை அதிக அளவில் வாங்கி அமுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட மக்களுக்கும் வழங்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அமுக்கப்பட்ட. அடிமையாக்கப்பட்ட அனைவரையும் விடுதலை செய்யும் மார்க்கம் இஸ்லாம் மட்டுமே!

**மனிதர்களே!**
**உங்கள் இறைவனுக்குப்**
**பயந்து நடந்து கொள்ளுங்கள்,**
**அவன் உங்கள் யாவரையும்**
**ஒரே ஆத்மாவிலிருந்து**
**படைத்தான், அவரிலிருந்தே**
**அவர் மனைவியையும்**
**படைத்தான்; பின்னர்**
**இவ்விருவரிலிருந்து,**
**அநேக ஆண்களையும்**
**பெண்களையும்**
**(வெளிப்படுத்தி உலகில்)**
**பரவச் செய்தான்; ஆகவே,**
**அல்லாஹ்வுக்கே**
**பயந்து கொள்ளுங்கள்;**
**அவனைக்கொண்டே**
**நீங்கள் ஒருவருக்கொருவர்**
**(தமக்குரிய உரிமைகளைக்)**
**கேட்டுக் கொள்கிறீர்கள்;**
**மேலும் (உங்கள்)**
**இரத்தக் கலப்புடைய**
**உறவினர்களையும்**
**(ஆதரியுங்கள்) -**
**நிச்சயமாக அல்லாஹ்**
**உங்கள் மீது**
**கண்காணிப்பவனாகவே**
**இருக்கின்றான்.**

**- அல்குர்ஆன் - 4:1**



# மோடியின் ஊழல் அம்பலம்

இந்தியா சுதந்திரமடைந்து ஏழு தசாப்தங்கள் கடந்த நிலையில் ஆட்சியை ஆறு தசாப்தங்கள் காங்கிரஸும் மீதமுள்ள ஆண்டுகளை பா.ஜ.க.வும் பிற கட்சிகளும் பங்குபோட்டுள்ளன. அறுபது ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சியில் நடக்காத ஊழல்கள் எல்லாம் ஒன்பது ஆண்டுகால பா.ஜ.க.வினால் நடத்தப்பட்டுள்ளது குறிப்பாக முதலாம் பா.ஜ.க ஆட்சியில் பிரதம மந்திரியாக இருந்தவர் வெள்ளையனிடம் அடிமை சாசனம் எழுதி கொடுத்த திருவாளர் வாஜ்பாய் அவர்கள். அவர் ஆட்சியில் உச்சகட்டமாக போர்முனையில் மரணிக்கும் இராணுவ வீரர்களுக்கு வாங்கிய சவப்பெட்டியில் ஊழல் செய்தார்.

தற்போதைய பா.ஜ.க.ஆட்சியில் பிரதம மந்திரியாக இருப்பவர் அளவிட முடியாத தேச பக்தியையும் அறிந்திட முடியாத கல்வி தகுதியையும் கொண்ட திருவாளர் மோடி அவர்கள் ஆட்சியில் அமர்ந்த நாளில் இருந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வெற்று வாயால் பக்கோடா சுட்டு வருகிறார். இவர் தம் ஆட்சியில் பணமதிப்பிழப்பு என்கின்ற மாபாதக நடவடிக்கையின் போது பகட்டாக முன்மொழிந்த வார்த்தை பணமில்லா டிஜிட்டல் பரிவர்த்தனைகள்.

ஆனால் அது சாத்தியப்படவில்லை அவர் சொன்ன கருப்பு பணமும் நாட்டிற்கு வரவில்லை மாறாக பல்லாயிரம் கோடி மக்கள் பணத்தை கொள்ளையடித்தவர்களை விமானம் ஏற்றிவிட்டு தனது தேச பக்தியை நிரூபித்துள்ளார் மோடி.

7000 கோடி கொள்ளையடித்த லலித் மோடி தப்பிச்சென்ற சுவடு மறைவதற்குள் 9000 கோடியுடன் மல்லையா தப்பித்து சென்றார் தற்போது 11400 கோடி பணத்தை பஞ்சாப் நேஷனல் வங்கியில் லெட்டர் ஆப் அண்டர்டேக்கிங் என்னும் வினோத முறையில் நீரவ் மோடி என்னும் அம்பானியின் உறவினர் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார். பா.ஜ.க அரசு ஒருபுறம் பல்லாயிரம் கோடி கொள்ளையடித்தவர்களை தப்பிக்க

விடுகின்றது மறுபுறம் அரசின் திட்டங்களின் மூலம் பல்லாயிரம் கோடி ரூபாய் ஊழல் செய்து ஊழலின் ஊற்றுக்கண்ணாக மாறி வருகின்றது திருவாளர் மோடி அவர்களின் ஆட்சி.

இவர் தற்போது இந்திய விமான படைக்கு வாங்க போகும் போர் விமானங்களில் பல்லாயிரம் கோடிக்கு ஊழல் புரிய தயாராகி வருகின்றார். அந்த போர் விமானங்கள் தொழில்நுட்ப ரீதியாக பின்தங்கியது என்பதையும் பஞ்சாப் நேசனல் வங்கியில் ஊழல் எவ்வாறு நடந்தது என்பதையும் பின்னால் காண்போம்.

நாட்டின் மிக முக்கியமான இவ்விசயத்தை மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டிய பொறுப்பு மீடியாக்களைச் சாரும். ஆனால் வட இந்திய ஊடகங்களே "பத்மாவதி படம் குறித்தும் இன்னும் பிற பயனற்ற விசயங்களைக் குறித்தும் விவாதம் நடத்தி தமது ராஜவிசுவாசத்தைப் பறைசாற்றின. தமிழக ஊடகங்களோ ஆண்டாள், சோடா பாட்டில், ஜியர், நடிகர்களின் அரசியல் பிரவேசம் என உப்புசப்பிற்கு உதவாத விசயங்களைக் மக்கள் மன்றத்தில் வைத்துக் கொடுக்கப்பட்ட திசை திருப்பும் வேலையை சரிவர செய்து வருகின்றன.

ஆகமொத்தம் மீடியாக்கள் எல்லாம் (மோடி)யாக்கள் ஆகிப்போன நிலையில் ரபேல் ஊழல் குறித்து வந்த ஒருசில செய்திகளும் நான்கு ஐந்து வரிகளைக் கொண்ட ராகுல் காந்தியின் பத்திரிகை சந்திப்பை பிரதிபலிப்பதாக மட்டும் இருந்தது. எனவே ரபேலின் ஆதி முதல் அந்தம் வரை நிகழ்ந்த நிகழப்போகின்ற நிகழ்வுகளையும் பஞ்சாப் நேசனல் வங்கியின் கொள்ளையையும் மக்கள் மன்றத்தில் சமர்பிக்க வேண்டிய கடமையை உணர்ந்து வைகறை வெளிச்சம் தனது மேன்மையான வாசகர்களுக்கு சமர்பிக்கின்றது.

### இந்திய விமானப் படையின் (IAF) வரலாறு.

இந்திய விமானப்படை 1932 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ஆம்தேதி ராயல் பிரித்தானிய விமானப்படைக்கு துணை விமானப் படையாக துவங்கப்பட்டது. நாடு சுதந்திரம் பெற்ற பிறகு நாட்டின் முப்படைகளில் ஒன்றாக உருவாக்கப்பட்டு ஜனாதிபதியை தலைமை தளபதியாக கொண்டு நாட்டின் பாதுகாப்பிற்காக செயலாற்றி வருகின்றது. தற்போது ஒரு லட்சத்து முப்பத்தி ஒன்பதாயிரம் விமானப் படைவீரர்களுடன்சுமார்1720விமானங்களுடன் இந்திய விமானப்படை செயல்படுகின்றது. (Source:https://en.m.wikipedia.org/wiki/indian-air/force)

இந்திய விமானப்படையில் முறையே பயண தேவைகளுக்காக பயிற்சி செய்ய தரை இலக்குகளை தாக்குதல் நடத்த, வான் இலக்குகளை தாக்குதல் நடத்த என நான்கு வகையான விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

1) பயணத் தேவைக்கான விமானங்கள் C-130J, C-17GlobemasterIII, Il-76, An-32, Hs748, Do228, Boing 737, ERI135

2) பயிற்சி போர் விமானங்கள் Hawk MK-132, HJI-16Kirn, Pilatus-C-7MKII

3) வான் இலக்கு போர் விமானங்கள் Su-30 MKI, Mirage 2000, MIG-29, MIG-21, HAL Tejar

4) தரை இலக்குப் போர் விமானங்கள் Jaguar, MIG-27, Harpy. Source : https://en.m.wikipedia.org/wiki/indian-air/force)

இப்படியாக பல்வேறு தொழில் நுட்பங்களுடன் 85 ஆண்டுகளாக தேசத்திற்கு சேவையாற்றி வரும் விமானப்படைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் பல்லாயிரம் கோடி ஊழல் செய்தும், விமானப்படையில் 49% அந்நிய முதலீட்டை கொண்டு வந்தும் நாட்டின் பாதுகாப்பை கேள்வி குறியாக்கியுள்ளது மோடி தலையில் ஆட்சயில் இருக்கும் பா-ஜ.க. அரசு.

### இந்திய விமானப் படைக்கு போர்விமானம் வாங்க வேண்டிய தேவை

இந்திய விமானப்படை கடைசியாக 1996 ஆம் ஆண்டு ரஷ்யாவிடமிருந்து SU-30MKI போர் விமானங்களை 1.46 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு வாங்கியது. 2000ஆம் ஆண்டு முதல் இந்திய விமாமனப்படை போதுமான அளவு நவீன ரக போர் விமானங்கள் இல்லாமல் தவித்து வந்தது. இந்நிலையில் பயன்பாட்டில் இருந்த MIG-21 போர் விமானங்கள் அதிகப்படியான விபத்துக்களை சந்தித்திருந்தது.

இதனை கருத்தில் கொண்டு 2007 ஆம் ஆண்டு 126MMRCA (Medium Multi role Combat Aircraft) விமானம் வாங்கும் பொருட்டு

டெண்டர் (RFP) விடப்பட்டது.

2007 ஆம் ஆண்டு ரஷ்யாவின் மிக்-35, சுவீடன் JAS-39, (SAB), பிரான்ஸ் Rafale (Dassault), அமெரிக்காவின் F-16 Facon (Lockhead Martin), Boeing F/A-18, Super Hornet, Eurofighter Typhoon போன்ற கம்பெனிகள் டெண்டரில் பங்கெடுத்தனர்.

பல கட்ட மதிப்பீட்டின் முடிவில் 2012 ஆம் ஆண்டு குறைந்த விலைப் புள்ளிகள் அளித்த நிறுவனம் என்ற அடிப்படையில் Dassult-இன் ரபேல் முதல்நிலை (LI) ஆகவும், Eurofighter Typhoon இரண்டாம் நிலை (L2) ஆகவும் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் சுமார் 10.2 பில்லியன் அமெரிக்க டாலர் (90,000 கோடி) மதிப்பிலான 126 போர் விமானங்களை Dassault நிறுவனம் சப்ளை செய்ய வேண்டும். அதில் 18 பறக்கும் நிலையில் முழுவதுமாக செய்து தரவேண்டும். மீதம் 108 இந்தியாவில் HAL நிறுவனம் மூலம் டெக்னாலஜி ட்ரான்ஸ்பர் முறையில் செய்ய வேண்டும் போன்ற விதிகளை இந்தியா விதிக்கிறது.

இந்த ஒப்பந்தம் கீழ்க்கண்ட இரண்டு முக்கிய அம்சங்களைக் கொண்டது.

1) டெக்னாலஜி ட்ரான்ஸ்பர் MMRCA போர் விமானம் செய்ய தேவையான அனைத்து தொழில்நுட்பத்தையும் பொதுத்துறை நிறுவனமான HAL நிறுவனத்திடம் அளிக்க வேண்டும். அதன்மூலம் நாமே தேவைப்படும் விமானத்தை உருவாக்கும் திறனை பெறலாம். (இப்போது "Make in India" என்று வெள்ளையடிக்கப்பட்ட திட்டம்.

அப்போது "National Manufactiuring Policy) என்று இருந்தது. ToT (Transfer of Techonology) என்பது எப்படி செய்ய வேண்டும் என்பது மட்டுமல்ல. எதனால் இப்படி செய்ய வேண்டும் என்பதுவும் கூட ஏற்கனவே இருந்த தேசிய உற்பத்திக் கொள்கையில் வரையறுக்கப்பட்டு இருந்தது. இதற்கு புதுவண்ணம் பூசிதான் மோடி மேக் இன் இந்தியா என்று உருமாற்றம் செய்தார்.

2) Offset Clause இந்த ஒப்பந்தத்தின் மூலம் வரும் வருமானத்தில் 50% Dassault நிறுவனம் விமான உதிரி பாகங்கள் தயாரிக்க இந்தியா விலேயே முதலீடு செய்ய வேண்டும்.

Source : (www.newsindianexpress.com/nation/2012/jan/31/frances*-dassault-wins-iaf-figter-deal-335611-html <http://www.newsindianexpress.com/nation/2012/jan/31/frances*-dassult-wins-iaf-figter-deal-335611-html>).

### DASSAULT நிறுவனம் ஒரு பார்வை

1929 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 89 ஆண்டுகளாக செயல்படும் Dassault நிறுவனத்திற்கு இது மிக முக்கியமான ஒப்பந்தம் ஆகும். அதன் சமீபத்திய 26 வருடத்தில் எகிப்து, இந்தியாவைத் தவிர வேறு எந்த நாடும் அதன் போர் விமானங்களை வாங்கவில்லை. மேலும் அதன் நிறுவனர் நிதி மோசடி புகாரில் சிக்கி மிகுந்த பின்னடைவை அந்நிறுவனம் சந்தித்து இருந்தது. இதற்கு முன்பு இந்தியா Dassault நிறுவனத்திடமிருந்து Mirage-2000 ரக போர் விமானங்களை வாங்கியுள்ளது.

நிறுவனத்தின் மீட்சிக்கு தற்போது இந்தியா வாங்கவுள்ள போர் விமானங்களுக்காக போடப்பட்ட ஒப்பந்தமானது கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் அந்நிறுவனத்திற்கு முக்கியமானதாகும். இந்த நிலையில் முதலில் எல்லா விதிகளுக்கும் தலையசைத்த Dassault நிறுவனமானது இந்தியாவின் ரிலையன்ஸ் நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்த பின்பு நமது நிபந்தனைகளை மாற்ற முயற்சி செய்தது. HAL உருவாக்கும் விமானத்திற்கு உத்திரவாதமும் தர மறுக்கின்றது.

(Source : m.aviationweek. com/defonse/france-india-disagree-oven-key-rafale-contract-issue)

தொழில்நுட்ப டிரான்ஸ்பர் ஒப்பந்தத்தை மாற்ற முயற்சித்து ரிலையன்ஸ் அம்பானியின் உதவியால் வெற்றியும் பெற்றுள்ளது.

### ரபேல் காங்கிரஸ் பதுங்கிய காரணம்

மேற்குறிப்பிட்ட இவையெல்லாம் 2012 ஆம் ஆண்டு நடக்கின்றது. அந்த காலம் என்பது காங்கிரஸ் அரசின் மிக மோசமான காலக் கட்டம். 2ஜி ஊழல், காமன்வெல்த் போட்டி ஊழல் என அடுக்கடுக்கான 27 பிரச்சனைகளை சந்தித்தது. அந்த காலக்கட்டத்தில் (LI) வெண்டராக Dassault நிறுவனத்தை அறிவித்ததும்,

தெலுங்கு தேசம் கட்சியின் எம்.பி. மைசூரா ரெட்டி டெண்டரில் முறைகேடு நடந்திருப்ப தாக குற்றச்சாட்டை வைக்கிறார்.

ஆதாரம் : (mirediff.com/news/slide.show/slide-show-1-exclusive-20-billion-doller-refale-deal-wasmainpulrted-say-mp/20120404.htm)

அதன் அடிப்படையில் விசாரணை தொடங் கப்பட்டது, மேலும் ஆட்சி முடிவில் இருக்கும் தருவாயில் மிகப்பெரிய முடிவு எடுக்க வேண் டாம் என்று அப்போதைய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோணி இந்த ஒப்பந்தத்தை நிறுத்தி வைத்தார்.

**ரபேல் பா.ஜ.க.வின் ராட்சஸ ஊழலின் தொடக்கம்**

2014 ஆம் ஆண்டு திருவாளர் மோடி ஆட்சி அமைத்த பின்பு பாதுகாப்புத்துறை, அதுவரை கிடப்பில் போடப்பட்ட ஒப்பந் தத்தை கையில் எடுத்து மிக மும்முரமாக துரிதப்படுத்த துவங்கியது. பிப்-2015 ஆண்டு பெங்களூர் வந்த Dassault தலைமை செயல் அதிகாரி, எரிக் ட்ரேப்பியர் விலையில் எந்த மாற்றமும் இல்லை, ஒப்பந்தத்தின்படி 10.2 பில்லியன் அமெரிக்க டாலர் என்பதை உறுதி செய்தார்.

ஆதாரம் (https://www.thahindubusinessline.com/news/rafale-deal-dassault-says-no-change-in-pricing larticle 6912230ece) Mar-25,

2015 ஆம் அண்டு 126 போர் விமானத்தை HAL உடன் இணைந்து தயாரிப்பதை உறுதி செய்து ஒரு விழாவில் IAF முன்னிலையில் Dassault நிறுவனம் அறிவித்தது.

ஆதாரம் (www.dassault-aviation.tv/the-first-two-india-mirage-2000-iti-delivered-to-indian-outhorities-1171-enhtwil)

Mar-27, 2015 ஆம் ஆண்டு Dassault கம்பெனி சேர்மன் அளித்த பேட்டியில் 126 போர் விமானம் வாங்கும் ஒப்பந்தம் 95% முடி வடைந்தது என கூறுகிறார். ஏப்-2015 இப்படி நிகழ்வுகள் சென்றுக் கொண்டிருக்கும் போது அரசு முறை பயணமாக மோடி பிரான்ஸ் செல்ல திட்டமிடப்படுகிறது. அங்கு வழக்கமாக வெளியுறவுத் துறை செயலாளர் நடத்தும் பத்திரிகையாளர் சந்திப்பில் இந்த ஒப்பந்தம் தொடர்பாக சில கேள்விகள் கேட்கப்படுகிறது. அதற்கு அவர் பதிலளிக்கையில்... "இந்திய பாதுகாப்பு அமைச்சரும், பிரஞ்சு நிறுவனமான Dassault -ற்கும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. அதையும் மோடி யின் பயணத்தையும் ஒருங்கிணைத்து பார்க்க வேண்டாம்" என்று கூறினார்.

ஆதாரம் :- (www.mea.son.in/speeches-statement.htm?dtl/25044/transcript.tofftmedia+briefting+by+foreign+secretary+on+prime+minister+forthcoming+visit+s++of+france+germany+and+comdal+8+april+2015)

அதன்பின் பிரான்ஸ் அதிபரும், மோடியும், மோடியின் பிரான்ஸ் பயண இறுதியில் கூட்ட றிக்கைவிடுகின்றபோது ரபேல் போர் விமானம் ஒப்பந்தம் உறுதி செய்யப்படடதாக கூறுகின் றனர். அதன்படி 81 போர் விமானம் மட்டுமே வாங்குவது, தொழில்நுட்ப டிரான்ஸ்பர் முறையை கை விடுவது என முடிவு செய்யப் பட்டு மற்ற ஏனைய விபரங்கள் பின்னால் அறிவிக்கப்படும் என்று பேட்டியை முடிக்கின் றனர். இந்த அறிவிப்பானது இந்தியாவின் பாது காப்பு நெறிமுறை திட்டத்திற்கு எதிரானதாகும். இராணுவ தளவாடங்கள், போர் விமானங்கள், ஏவுகணைகள். நீர்மூழ்கி கப்பல்கள் போன்ற வற்றை வெளிநாடுகளில் இருந்து வாங்குகையில் மிக முக்கியமான கூறுதொழில்நுட்ப மாறுதல் அம்சம் ஒப்பந்தத்தில் இருந்தால்தான் நமது இராணுவ தளவாட ஆராய்ச்சி நிறுவனங்களின் மூலம் நாமே எதிர்காலத்தில் அவற்றை தயாரிக்க முடியும். ஆகையால் அவசியமான மற்ற விபரங்கள் பின்னால் உறுதி செய்யப்படும் என்று கூட்டறிக்கையில் கூறப்பட்டது.

ஆனால் அதில் தான் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. பழைய ஒப்பந்தப்படி 126 விமானங்களை 90,000 கோடிக்கு வாங்க இருந்ததை கைவிட்டு பின்பு 81 விமானம் என்றாகி தற்போது வெறும் 36 விமானங்கள் 60,000 கோடிக்கு வாங்க முடிவு எட்டப்பட்டது. இதன்படி ஒரு விமானம் 714 கோடிக்கு வாங்கு வதற்கு பதில் 1611 கோடிக்கு வாங்க இருக்கின் றது பா.ஜ.க. அரசு. என்னதான் பிரதமர் என் பவர் நாட்டின் தலைமை அமைச்சர் என்றாலும், பாதுகாப்புத் துறை தொடர்பான முடிவுகளை எடுப்பதில் பாதுகாப்பு அமைச்சரின் பங்கு மிக

முக்கியம். ஏனெனில் நாள்தோறும் முப்படை தளபதிகளோடு நெருக்கமான தொடர்பில் இருக்கும் அவருக்குத்தான் நம் நாட்டின் பாது காப்புக்கு எது தேவை? எது முக்கியம்? என்பது தெளிவாகத் தெரியும்.

ஆனால் ரபேல் ஒப்பந்தம் திருத்தி அமைக் கப்பட்டு கையெழுத்தானபோது அவர் என்ன செய்து கொண்டிருந்தார் தெரியுமா? அவர் கோவாவில் மீன் கடை திறப்பு விழாவில் பங்கெடுத்துக் கொண்டு இருந்தார். Source : (www.navhindtimes.in/parrikar-inaugurates-mobile-fish-stall-at-com-jetty-in-city)

**அம்பானிக்காக ரபேலை தேர்ந்தெடுத்த மோடி**

தொழில்நுட்ப ரீதியாக ரபேல் போர் விமானங்கள் பின்தங்கியதே 2007 டெண்டரில் (LI) Dassault -க்கு அடுத்தபடியாக இரண்டாம் இடம் (L2) வை Eurofighter Typhoon பெற்றி ருந்தது. இது ரபேல் விமானங்களை காட்டிலும் கூடுதல் தொழில்நுட்பங்களை கொண்டதாகும். அதேசமயம் யூரோபைட்டர் நிறுவனம் 20% விலை குறைப்பு செய்யவும் தயாராக இருப்ப தாக இந்திய அரசிற்கு கடிதமும் அனுப்பி இருந்தது. ரபேல் விமானத்தை அதன் தயாரிப்பு நாடான பிரான்சின் விமானப்படை தவிர்த்து எகிப்தின் விமானப்படை மட்டுமே பயன் படுத்துகின்றது.



யூரோபைட்டர் டைபூனை உலகின் முன்னணி விமானப்படைகளான பிரிட்டன், ஜெர்மனி, ஸ்பெயின் உட்பட ஒன்பது நாடுகள் பயன்படுத்துகின்றன. டைபூனை ஒப்பிடுகையில் ரபேலின் வேகமும் மிகக்குறைவு. ரபேல் அதிக பட்சமாக மணிக்கு 1,912 கி.மீ. வேகத்தில் செல லக்கூடியது. டைபூன் மணிக்கு 2,445 கி.மீ. வேகத்தில் செல்லடிக்கூடியது. அதேபோல் டைபூனின் விலை ரபேல் போர் விமானத்தை விட குறைவாகும். Source : (https://wikipedia)

இப்படியாக ஒப்பிட்டளவில் பின்தங்கிய ரபேலின் ஒரு போர் விமானத்தின் விலை 1611 கோடி ஆகும். ஆனால் டைபூனின் விலையோ 1156 கோடி மட்டுமே. விலையிலும், தொழில் நுட்பத்திலும், பயன்பாட்டிலும் ரபேலை விட பன்மடங்கு டைபூன் சிறந்திருந்தாலும் ரபேலை தயாரிக்கும் தஸ்ஸால்த் நிறுவனத்துடன் அம்பானிகளுக்கு இருக்கும் தொடர்பு காரண மாகவே பல ஆயிரம் கோடிகளை அதிக விலை யாகக் கொடுத்து விமானத்தை வாங்கி மக்களின் வரிப்பணத்தை தாரை வார்க்கிறார் கார்ப்பரேட் கைககூலி மோடி.

ஆதாரம் (https//theprintain/2017/12/01/rafale-deal-govt-passed-offcer*-buy-e59-mln-unit-chaaper-eurofighter/ampl)

**விலை உயர்வை நியாயப்படுத்த பா.ஜ.க.அரசு முன்வைக்கும் உப்புசப்புக் காரணங்கள்**

ஒப்பந்தம் கையெழுத்தாக அதிக நாட்கள் எடுத்துக் கொண்டதால் இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது என்று கூறினால் அது முற்றிலும் தவறு. ஏனெனில் ஒப்பந்தத்தில் மிக தெளிவாக பணவீக்க விகிதம் 3.9% என்று நிர்ணயம் செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் கணக்கிட்டால் மூன்று மடங்கு விலை அதிகரிப் பதற்கு வாய்ப்பே இல்லை. UPA அரசு செய்த ஒப்பந்தத்தில் இருந்த தொழில்நுட்பத்தில் புதிய சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதால், இந்த விலை ஏற்றம் என்பது இரண்டாவது காரணம். விலை மாற்றம் என்ற கேள்வியை நீர்த்துபோக செய்வதற்கான வேலைதான் இது. அப்படி என்ன மாற்றம் என்று பார்த்தால் Meteror missile பொருத்தப்படுகிறது. (அதன்விலை 13 கோடி) ஆதாரம் (http://medium. com/war-is-bering/the-best-air-missile-in-the-world-is-in-sweden-33962cbbafa8).

மற்றொரு மாற்றம். Helmet Mounted Display System (HMDS) அதாவது Helmet முன் உள்ள திரையில்தேவையான விபரம் தெரியும். அதன் மூலம் எதிரி விமானத்தை குறிவைத்து லாக்

செய்ய முடியும். இதன் விலை (2.5 கோடி) 0.4 பில்லியன் அமெரிக்க டாலர். ஆக இந்த இரு Upgrade செலவுகளையும், சேர்த்தால் கூட 730 கோடி தான் வருகிறது. எப்படி 1611 ஆனது என்பது அம்பானிக்கும் மோடிக்குமே வெளிச்சம்.

அதிக அளவில் மிகுந்த பொருட்செலவில் ராணுவ தளவாடங்கள் வாங்குகையில், பேச்சுவார்த்தை நடத்தி விலையை நிச்சயமாக குறைக்க முடியும். ஆனால் விலை குறைந்தால் நஷ்டம் ஏற்பட்டு அம்பானி வீட்டில் ஒருக்கால் அடுப்பு எறியாது என்பதால் விலை குறைப்பில் ஏழை அம்பானியின் நண்பர் மோடி ஈடுபடவில்லை போலும்.

**"ஊழலுக்காக தொடங்கப்பட்ட அம்பானி, அதானியின் கம்பெனிகள்"**

முதலில் எல்லாவற்றிற்கும் சம்மதம் தெரிவித்த நிறுவனம் திடீர் என முறுக்கிக் கொள்ள காரணம் என்ன? LI அந்தஸ்து பெற்ற இரண்டே வாரத்தில் எதேச்சையாக Dassault நிறுவனம், முகேஷ் அம்பானியுடன் கைகோர்க்கிறது. ஆதாரம் (https://m.rediff.com/news/report/reliance-enter-defene-manufacture-with-rafale-maker-2012021.htm) அதன் பின்புதான் Dassault RFP-யில் ஒரு விதியையும் மாற்ற முயல்கிறது.

குறிப்பாக எப்படியாவது HAL நிறுவனத்தை ஓரம் கட்டும் வேலையைப் பார்க்கிறது. முகேஷ் அம்பானி வந்தபின் அனில் அம்பானி வராமல் இருப்பாரா என்ன? அவர் ரிலையன்ஸ் டிபென்ஸ் என்ற நிறுவனத்தை தொடங்குகிறார். அவர் அந்நிறுவனத்தை தொடங்கியது 28-03-2015 சரியாக மோடி பிரான்ஸ் நாட்டிற்கு செல்லும் 3 வாரம் முன்பு.

அக்.2014 பாதுகாப்பு துறையில் நேரடி அந்நிய முதலீட்டை 49% சதவீதமாக உயர்த்துகிறது அரசு அதன் அடிப்படையில் (51:49) சதவீத முறைப்படி Dassault நிறுவனத்துடன் அனில் அம்பானி கூட்டணி அமைக்கிறார்.

பிரான்ஸ் ஒப்பந்தத்தின் 29 பின் Offset Clause அடிப்படையில் விமான உதிரி பாகம் செய்யும் ஒப்பந்தம் அவர் கைகளுக்கு செல்கிறது. HMDS தயாரிப்பது இஸ்ரேலை சேர்ந்த Elbit என்ற நிறுவனம். அந்நிறுவனம் மார்ச் 2016 ஆம் ஆண்டு Aero Defence System என்ற இந்தியாவை சேர்ந்த ஒரு நிறுவனத்துடன் மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் HMDS இந்தியாவில் தயாரிக்க ஒப்பந்தம் கையெழுத்திடுகிறது. அந்த Aero defence Systems நிறுவனம் நம் அதானி குழுமத்தினுடையது. ஆதாரம். (https://www.adani.com/media/media-release/media-details?title=adani-forays-into-defencesigns-IOA-with-elbit-istar-and-alpadesign-technologies-pvt-ltd) மோடி பிரான்சிலிருந்து வந்து சரியாக இரண்டு மாதத்தில் அதானி இந்த கம்பெனியை துவங்குகிறார். ஊழலை புரிவதற்காக திட்டங்களை தீட்டி கம்பெனிகளை தொடங்கி கன கட்சிதமாக தனது தேச பக்தியை நிரூபித்துள்ளார் திருவாளர் மோடி.

**ரபேலால் பதவி சுகமடைந்த சுப்ரமணிய சுவாமி:-**

ரபேல் திட்டத்திற்கு முதலில் சுப்ரமணிய சுவாமி பலத்த எதிர்ப்பு தெரிவித்து பிரதமருக்கு கடிதம் எழுதுகிறார் அதில் ரபேல் விமானம் தரமற்றது அதனை வாங்க முடிவு செய்தால் பொது நல வழக்கு தொடருவேன் என்று பேட்டியும் கொடுக்கிறார். 2016 ஆம் ஆண்டு அவருக்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவி அளிக்கப்பட்டவுடன் இந்த பிரச்சனையை கைவிடுகிறார். அதன் பிறகு, தீவிர தேசபக்தரான சுவாமி இது குறித்து வாயே திறக்கவில்லை.

**கார்ப்பரேட் சேவகர் மோடி**

இந்திய விமானப்படைக்கு 126 விமானங்கள் வாங்குவதற்கு கையெழுத்தான ஒப்பந்தத்தை மோடி கைவிட்டதற்குக் காரணம் சுவாரசியமானது. அம்பானிகளின் நிறுவனங்கள் தஸ்ஸால்ட் நிறுவனத்துடன் நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்திருப்பதை போல, டாடா குழுமம் எப்-16 ரக போர் விமானங்களைத் தயாரிக்கும் அமெரிக்காவைச் சேர்ந்த லாக்ஹீட் மார்டின் நிறுவனத்துடனும், அதானி குழுமம் கிரிப்பென் ரக போர் விமானங்களைத் தயாரிக்கும் இன்னொரு அமெரிக்க நிறுவனமா சாப் உடனும் கூட்டுத் தயாரிப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ளன.

தஸ்ஸால்ட் நிறுவனத்திடம் 126-க்குப் பதிலாக 36 போர் விமானங்களை வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்திருக்கும் மோடி அரசு மீதி

விமானங்களை டாடாவும் அதானியும் கூட்டுச் சேர்ந்துள்ள அமெரிக்க நிறுவனங்களிலிருந்து வாங்கும் முடிவை எடுத்திருக்கிறது. அவ்விரு நிறுவனங்களுக்குப் புதிய போர் விமானங்களை வாங்குவதற்கு தகவல் கோரும் ஆவணங்களை (RFP-Request for Price) அனுப்பி வைத்துள்ளது இந்திய அரசு. ஆதாரம் (https://economictimes.indiatimes.com/news/defence/india.air-force-fighter-jet-contests-to-heatup-in-2019-executives/articleshow/6285+476(MS)

ஆக விமானப்படைக்குத் தேவையான 126 விமானங்களை பிரான்சு மற்றும் அமெரிக்க கம்பெனிகளுக்கும், அம்பானி, அதானி மற்றும் டாடா குழுமங்களுக்கும் பங்கு வைத்திருக்கிறார் மோடி. வேறு முதலாளிகள் யாரேனும் தேசப் பாதுகாப்பில் தங்களுடைய பங்களிப்பைச் செலுத்த விரும்புவார்களாயின் அவர்களுக்குரிய பங்கையும் வழங்குவதன் மூலம் தனது ஜனநாயக விசுவாச தேபக்தி மாண்பினை நிரூபிப்பார்.

**ரபேல்-இந்தியா இழந்தது என்ன?**

1) 126 விமானம் 90,000 கோடி வாங்குவதற்கு பதில் 36 விமானம் மட்டுமே 60,000 கோடிக்கு வாங்க இருக்கிறோம். இதில் Offset Clause விதிப்படி மொத்த வருவாயில் (58,000 கோடி) 50% 22,000 கோடி அனில் அம்பானிக்கு செல்கிறது.

ஆதாரம் (www.huffingtonpostin/2016/10/03/anil-ambanis-reliance-groupawarded-contract-worth-22000-cror-a-21485079)

2) முடிவு செய்து வைத்த பட்ஜெட்டின் பெரும் பகுதியை வெறும் 36 விமானங்கள் வாங்க செலவிடப்பட்டுள்ளது. விமானப் படைக்கு பெரும் பின்னடைவை தரும் என ஓய்வு பெற்ற தளபதிகள் கருத்து தெருவித்திருக்கின்றனர். பாகிஸ்தான், சீனா உடனான இரண்டு முனை போர் ஏற்படும்போது இந்த விமானங்களின் எண்ணிக்கை மிக குறைவு என்று நாட்டின் பாதுகாப்பு குறித்து கவலை தெரிவிக்கின்றார். ஆதாரம் : (https://youtu.be/plftj2i7qdy)

3) தொழில்நுட்ப மாற்ற முறைப்படி பொதுத்துறை நிறுவனமான HAL நிறுவனத்திற்கு வரவிருந்த அத்தனை பயன்களும் இனி தனியார் நிறுவனமான அம்பானி நிறுவனத்திற்கு செல்லும்.

4) 108 விமானங்கள் HAL நிறுவனம் தயாரிக்க இருந்தது. இது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் உருவாகும் ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்பு முற்றிலும் பறிபோயுள்ளது. இப்படியாக திட்டங்களை தீட்டி பல்லாயிரம் கோடி ரூபாய் ஊழலை செய்துள்ள பா.ஜ.க. அரசு ஊழல்கள் குறித்து எழும் எல்லா கேள்விகளுக்கும் தேசபக்தி சாயம் பூசி பதிலளிக்க மறுக்கின்றது. விலை உயர்வு குறித்து வெளியிட தேவையில்லை என்கிறார் பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமன். காரணம் சொல்லாமல் விலை ஏற்றம் செய்ய இதுவொன்றும் அவர் செய்யும் ஊறுகாய் வியாபாரம் இல்லை. மக்களின் வரிப்பணம் கொண்டு மக்களின் பாதுகாப்பிற்காக செலவிடப்படும் தொகையை வெளிப்படுத்




துவது என்பது நாட்டின் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கும் செயல் ஒன்றும் இல்லை.

**பஞ்சாப் நேசனல் வங்கி - நிதி மோசடி செய்த நீரவ் மோடி யார் ?**

நீரவ் மோடி என்பவர் ஒரு வைர வியாபாரி. அவரது மனைவி ஏமி, சகோதரர் நீஷல் மோடி மற்றும் இவர்களது மாமா மேகூல் சோக்சி ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து டையமண்ட் ஆர் யு.எஸ், சோலார் எக்ஸ்போர்ட்ஸ் மற்றும் ஸ்டெல்லார் டையமண்ட்ஸ் ஆகிய நிறுவனங்களை நடத்தி வந்தனர்.

இவை தவிர பையர்ஸ்டார் டையமெண்ட்ஸ் என்னும் நிறுவனம் ஒன்றைச் சொந்த முறையில் துவங்கி நடத்தி வந்த நீரவ் மோடி, தில்லி,








மும்பை, நியூயார்க், ஹாங்காங் உள்ளிட்டு இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 16 பெரு நகரங்களில் வைரக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் ஷோரூம்களை நடத்தி வருகிறார். நீரவ் மோடியின் மாமா மெகூல் சோக்சி கீதாஞ் சலி குழுமம் எனும் பெயரில் வைர வியாபாரம் செய்து வருகிறார். நீரவ் மோடியின் இளைய சகோதரர் நீஷல் மோடி அம்பானி சகோதரர் களின் சகோதரி மகளைத் திருமணம் முடித்துள் ளார் நீரவ் மோடி மற்றும் அவரது உறவினர்கள் என எல்லோரும் சேர்ந்து 90 நிறுவனங்களில் பங்குதாரர்களாக உள்ளனர்.

**நீரவ் மோடியின் நிதி மோசடி**

மும்பையில் உள்ள பஞ்சாப் நேஷனல் வங்கி ஊழியர்கள் கோகுல்நாத் ஷெட்டி மற்றும் மனோஜ் ஹனுமந்த் காரத் என்பவர்கள் “ லெட்டர் ஆஃப் அண்டர்டேக்கிங்” (LoU) என்னும் வெளிநாடுகளில் இருந்து பெரும் குறுகிய காலக் கடனை போலியான ஆவணங் கள் மூலமும், வங்கியின் கவனத்திற்கு வராமலும் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு வழங்கியதற்காக அந்நிறுவனத்தின் பங்குதாரர்களான நீரவ் மோடி, நிஷால் மோடி, அமில் நீரவ் மோடி, மெகுல் சோக்ஸி மற்றும் வங்கி ஊழியர்கள் ஆகியோர் மீது வழக்கு தொடருமாறு சிபிஐ-யிடம் பஞ்சாப் நேஷனல் வங்கி புகார் அளித்தது.

இது தொடர்பாக நீரவ் மோடி மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரின் மீதும் மத்திய அமலாக்கப் பிரிவு மோசடி வழக்கை பதிவு செய்துள்ளது.

ஆதாரம்:* (<https://thewire.in/224314/explained-punjab-national-banks-1-8-billion-fraud/>)

முதற்கட்டமாக வெளியான செய்திகளின் படி சுமார் 11 ஆயிரம் கோடி அளவுக்கு வங்கி உத்திரவாதப் பத்திரங்களை வைத்து மோசடி செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியான நிலையில், தற்போது மோசடியின் பரிமாணம் அதற்கும் கூடுதலாக இருக்கும் என்கிற தகவல்கள் வெளியாகி வருகின்றன.

கடந்த ஆண்டு மார்ச் காலப்பகுதி வரை பல்வேறு வங்கிகள் நீரவ் மோடி மற்றும் அவரது தொழிற் கூட்டாளிகளுக்கு வழங்கி யிருந்த கடன் உத்திரவாதப் பத்திரங்களின் மதிப்பு மட்டும் சுமார் 17,632 கோடி எனவும், அதற்குப் பிந்தைய காலகட்டத்தில் வழங்கப் பட்ட பத்திரங்களின் மதிப்பையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் 19 ஆயிரம் கோடிக்கும் அதிகமான தொகை மோசடி செய்யப்பட்டிருக் கலாம் எனவும் வருமான வரித்துறை ராய்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு அளித்த செய்திக் குறிப்பில் இருந்து தெரிய வருகின்றது.

வெளிநாடுகளில் இருந்து நீரவ் மோடி நகைகளை இறக்குமதி செய்வதற்கு கடன் வாங்க முனைந்த போது, இந்த வங்கிகள்தான் அவருக்கு உத்திரவாத பத்திரத்தை அளித்திருக் கின்றன. இந்த உத்திரவாத சான்றுகள் எவையும் இந்திய வங்கிகளின் மைய ஆவணப்பதிவுகளின் பதிவு செய்யப்படாமல் தந்திரமாக நேரடியாக வெளிநாட்டில் இருக்கும் இந்திய வங்கிகளுக்குச் சென்றிருக்கின்றன.

இது தவிர மேற்படி ஆசாமிகளுக்குச் சொந்தமான நிறுவனங்கள் செய்த மொத்த வர்த்தகத்தின் மதிப்பை விட அவர்கள் தமது வாடிக்கையாளர்களுக்கு (நகை, வைரம் வாங்கியதற்காக) அளித்த ரசீதுகளின் மதிப்பு அதிகமாக இருப்பதும் தெரியவந்துள்ளது. இதுவிசயமாக முறையான விசாரணைகள் நடக்கும் பட்சத்தில் பல பத்தாயிரம் கோடிகள் கொள்ளையடிக்கப்பட்டது அம்பலமாகும் வாய்ப்பு உள்ளது. அதாவது போலியான சொத்து மதிப்புகள், வர்த்தக நடவடிக்கைகள், இறுதிக் கணக்குகளை நீரவ் மோடி குரூப் தயாரித்துள்ளது.

நீரவ் மோடியின் ஊழல் காங்கிரசின் கடந்த ஆட்சிக்காலத்தின் போதே துவங்கி விட்டதெ னவும் தமது அரசே அதைக் கண்டுபிடித்ததென வும் பாரதிய ஜனதா எழுதிய திரைக்கதையை மத்திய குற்றப் புலனாய்வுத் துறை பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையே கிழித்துப் போட்டது.

சுமார் 11,400 கோடி அளவுக்கான மோசடிகள் 2017 - 18 காலகட்டத்திலே நடந்ததாக மேற்படி முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், மோசடிப் புகார்கள் பிரதமர் அலுவலகத்திற்கு தெரியப் படுத்தப்பட்ட நிலையில், குற்றவாளி நாட்டை விட்டுக் கம்பி நீட்டிய நிலையில் டாவோசில் பிரதமர் கூட்டிய தொழிலதிபர்கள் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட நீரவ் மோடி எப்படிக் கலந்து கொண்டார் என்கிற கேள்விக்கு பாரதிய ஜனதா தரப்பில் இருந்து எந்த விளக்ககமும் இதுவரை அளிக்கப்படவில்லை.



இதற்கிடையே, ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தின் செய்தியாளர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மத்திய ரிசர்வ் வங்கி யிடமிருந்து கோரிப் பெற்றுள்ள தகவல்கள் மேலும் அதிர்ச்சி அளிப்பவையாக உள்ளன. இதன்படி கடந்த ஆண்டு (2017) மார்ச் மாதம் வரையிலான காலப்பகுதியில் தேசிய வங்கி களில் மட்டும் சுமார் 8,670 வங்கி மோசடிப் புகார்கள் பதிவாகியுள்ளதாகவும் இதன் மொத்த மதிப்பு சுமார் 61,260 கோடியாக இருக்கும் எனவும் தெரிய வந்துள்ளது.

21 வங்கிகளின் விவரங்கள் கேட்கப்பட்டு அதற்கு 15 வங்கிகளிடம் இருந்து மட்டும் கிடைத்த பதில்களின் மூலம் மட்டும் இந்த மோசடி விவரங்கள் அம்பலமாகியுள்ளது. மற்ற தேசிய வங்கிகள், தனியார் வங்கித் துறை மற்றும் தனியார் நிதி நிறுவனங்கள் என கணக்குப் போட்டால் சூறையாடப்பட்ட மக்களின் சேமிப்பு பணத்தின் அளவு சில பல லட்சம் கோடிகளாக இருக்கும் என்பதை அனுமானிக்க முடிகிறது.

ஆதாரம்:- ( https://newsclick.in/indian-banks-loan-fraud-rs61000-crore-last-5-years)

**நீரவ் மோடி பயன்படுத்தி கொண்ட வங்கி விதிமுறைகளில் உள்ள ஓட்டைகள்?**

வங்கிகளுக்குள் உத்திரவாதப் பத்திரங்கள் பரிமாற்றம் நடப்பது தொடர்பான விவரங்கள் SWIFT (Society for worldwide Interbank financial telecommunications) என்கிற முறையில் மேற் கொள்ளப்படும். வங்கியின் பொதுவான பணப் பரிவர்த்தனைகள் மைய வங்கிப் பரிவர்த்தனை முறையின் (Core Banking system) கீழ் மென் பொருட்களாலும் இணையத்தின் வழி இணைக் கப்பட்ட கணிணிகளாலும் செயல்படுத்தப்படு கின்றது. பெரும்பாலான வங்கிகள் ஸ்விப்ட் முறையிலான பணப்பரிவர்த்தனைகளை மைய வங்கிப் பரிவர்த்தனை முறையோடு இணைத் துள்ளனர் - பஞ்சாப் தேசிய வங்கியில் அவ்வாறு இணைக்கப்படவில்லை.

இதை அறிந்து கொண்ட நீரவ் மோடி கும்பல், பஞ்சாப் தேசிய வங்கியின் நடை முறைகளில் இருந்த ஓட்டைகளை திறமையாகப் பயன்படுத்திக் கொண்டது. பொதுவாக சிவிப்ட் முறையில் நடக்கும் பரிவர்த்தனைகள் நான்கு அதிகாரிகளின் கட்டுப்பாட்டின் கீழ் நடைபெறும்.

பரிவர்த்தனையைத் துவங்கி வைப்பவர் (Maker) : ஒரு பரிவர்த்தனை நடப்பதற்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் கோரிக்கை மனுவைப் பெற்று அதனைத் துவங்குபவர்.

பரிவர்த்தனையை சோதிப்பவர் (Checker) : இவர் ஸ்விப்ட் முறையிலான பரிவர்த்தனைக்கு வந்துள்ள கோரிக்கையை சோதித்து அனுமதிப் பவர்.

பரிவர்த்தனையை அங்கீகரிப்பவர் (Authorizer) : இவர் ஸ்விப்ட் முறையில் நடக்கும் பரிவர்த்தனைக்கு ஒப்புதல் அளிப்பவர்

தகவல் பெறுபவர் (receiver) : வெளிநாட்டில் உள்ள வங்கிகள் தமக்கு வந்து சேர்ந்த கோரிக் கைகள் குறித்தும் அவற்றின் பண மதிப்பு குறித்தும் ஸ்விப்ட் முறையில் (ஸ்விப்டுக்கான பிரத்யேக இணையத் தொடர்பின் வழியாக) அனுப்பும் தகவல்களைப் பெறுகிறவர். பொது வாக இவ்வாறு தகவல் பெறுபவரின் கணினி உயர் பாதுகாப்பு வளையத்தினுள் (High Security Zone) இருக்கும். ஸ்விப்ட் வலைப்பின்னல்



யஷ்வந்த் சின்கா

தவிர பிற இணைய இணைப்புகள் இந்த கணினிக்கு மறுக்கப்பட்டிருக்கும்.

நீரவ் மோடி, இந்த பரிவர்த்தனையைக் கையாளும் அதிகாரிகளை லஞ்சம் கொடுத்து வளைத்துள்ளார். மேலும், வங்கிகள் வழங்கும் உத்திரவாதப் பத்திரங்களுக்கு இணையான வைப்புத் தொகையையும் அவர் செலுத்தாமல் ஏமாற்றியுள்ளார். அடுத்து ஒவ்வொரு குறிப் பிட்ட கெடு காலத்திற்குப் பின்னும் முந்தைய தொகையை அடைப்பதற்கு பதில் அதை விட அதிக மதிப்பு கொண்ட உத்திரவாதப் பத்திரங் களை வாங்கி அவற்றைப் பணமாக மாற்றி யுள்ளார்.

**நிரவ் மோடி ஊழல் விவகாரம்; அருண் ஜேட்லிக்கு யஷ்வந்த் சின்ஹாவின் 10 கேள்விகள்**

பஞ்சாப் நேஷனல் வங்கி, நிரவ் மோடி மோசடி விவகாரம் நம் நாட்டு வங்கிகள் அமைப்பின் நிலையை பறைசாற்றுவதாக உள்ளது என்று கூறியுள்ள முன்னாள் மத்திய நிதி அமைச்சர் யஷ்வந்த் சின்ஹா, பிரதமர்

## Details of LOUs

| LOU issued on | Name of the Domestic Importers | Amt of LOU (in USD) | Financing Bank | Name of the Overseas Exporter | Due Date |
|---|---|---|---|---|---|
| 9.2.2017 | Diamond R US | 4415791.96 | Allahabad Bank, HK | AURA GEM COMPANY LIMITED, SINO TRADERS LIMITED, TRI COLOUR GEMS FZE | 25.1.2018 |
| 9.2.2017 | Solar Export | 4335319.38 | Allahabad Bank, HK | AURA GEM COMPANY LIMITED, SUNSSHINE GEMS LIMITED, TRI COLOUR GEMS FZE | 25.1.2018 |
| 10.2.2017 | Diamond R US | 5942017.70 | Allahabad Bank, HK | SINO TRADERS LIMITED, AURA GEM COMPANY LIMITED, UNITY TRADING FZE | 25.1.2018 |
| 10.2.2017 | Solar Export | 5843161.93 | Allahabad Bank, HK | AURA GEM COMPANY LIMITED, SUNSSHINE GEMS LIMITED, PACIFIC DIAMONDS FZE | 25.1.2018 |
| 10.2.2017 | Stellar Diamond | 6093321.10 | Allahabad Bank, HK | SINO TRADERS LIMITED, SUNSHINE GEMS LIMITED, PACIFIC DIAMONDS FZE | 25.1.2018 |
| 14.2.2017 | Diamond R US | 5856885.00 | Axis Bank, HK | SINO TRADERS LIMITED, AURA GEM COMPANY LIMITED | 25.1.2018 |
| 14.2.2017 | Solar Export | 5862251.03 | Axis Bank, HK | UNITY TRADING FZE, AUROAGEM COMPANY LIMITED, SUNSHINE GEMS LIMITED | 25.1.2018 |
| 14.2.2017 | Stellar Diamond | 5877064.00 | Axis Bank, HK | SINO TRADERS LIMITED, SUNSHINE GEMS LIMITED | 25.1.2018 |

மோடி அரசின் ‘ஒளிரும்’ பிம்பத்தையும் சாய்த்துள்ளது என்று சாடியுள்ளார்.

வங்கிகளின் செயல்பாடுகள் குறித்து மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விதமாக அருண் ஜேட்லியோ, பிரதமர் மோடியோ எதுவும் கூறாமல் இருப்பதையடுத்து காங்கிரஸ், பாஜக ஒருவர் மீது ஒருவர் சேற்றை வாரி இரைப்பதுதான் நடந்து வருகிறது.

ஆளும் பாஜக 2011-ல் இந்த ஊழல் ஆரம் பித்தது என்றும் தற்போது தாங்கள் அதனை வெளிக்கொண்டு வந்திருப்பதாகவும் கூற காங்கிரஸ் கட்சியோ முக்கிய ஊழல் 2017-ல் தான் நடந்துள்ளது என்று பாஜக மீது பழியைத் தூக்கிப் போட்டுள்ளது.

இது குறித்து யஷ்வந்த் சின்ஹா ஆங்கில ஊடகம் ஒன்றில் எழுதியுள்ள பத்தியில் கூறும்போது, ஹர்ஷத் மேத்தா பங்குச் சந்தை ஊழல், கேத்தன் பரேக் ஊழல் தொடர்பாக குற்றச்சாட்டு எழுந்த போது கேத்தன் பரேக் விவகாரத்தில் அப்போது நிதியமைச்சராக இருந்த நானும், ஹர்ஷத் மேத்தா ஊழலில் மன்மோகன் சிங்கும் இணை நாடாளுமன்ற கமிட்டி விசாரணையின் போது நேரடியாக ஆஜரானோம் என்றார்.

இந்நிலையில் அவர் 10 முக்கியக் கேள்வி களை வரிசைப்படுத்தியுள்ளார்:

1) 2011-ல் நிரவ் மோடி ஊழல் தொடங்கி யது என்றால் ஆண்டுவாரியாக எவ்வளவு வங்கி ஏற்புக் கடிதங்கள் (LoU) அளிக்கப்பட் டுள்ளன? மேலும் தெளிவுபெற, மே 2014-ஐ பிரிக்கும் கோடாக பாவிக்க வேண்டும். ஆகவே மே, 2014 வரை எவ்வளவு ஏற்புக் கடிதங்கள் அளிக் கப்பட்டுள்ளன, அதன் பிறகு எவ்வளவு ஏற்புக் கடிதங்கள் அளிக்கப்பட்டுள்ளன என்பதைப் பார்க்க வேண்டும்.

2) ஒவ்வொரு வங்கி ஏற்புக் கடிதங்களிலும் உள்ள தொகை.

3) ஏற்புக்கடிதம் செல்லுபடியாகும் காலக் கட்டம், உதாரணமாக 90 நாட்களா, 180 நாட்களா, 365 நாட்களா அல்லது அதற்கும் கூடுதல் நாட்கள் செல்லுபடியாவதா?

4) பஞ்சாப் நேஷனல் வங்கி இன்னொரு வங்கிக் கிளைக்கு அளித்த தொகைக்கான உத்தரவாதம்தான் வங்கி ஏற்புக் கடிதம் எனும் எல்.ஒ.யு. எனும்பட்சத்தில் அயல்நாட்டு இன்னொரு வங்கிக் கிளையில் இந்த எல்.ஓ. யூவுக்கு எதிராக எவ்வளவு தொகை எடுக்கப் பட்டுள்ளது?

*5)* எத்தனை சந்தர்ப்பங்களில் சொல்லப்படும் ஊழல்வாதி எல்.ஓ.யூ தொகையை பஞ்சாப் நேஷனல் வங்கிக்குச் செலுத்தியுள்ளார்? அதே போல் எவ்வளவு எல்.ஓ.யூக்கள் செல்லாததாகி யுள்ளது?

*6)* அயல்நாட்டு வங்கிக் கிளை குறிப்பிட்ட காலத்துக்குள் தொகையைப் பெறவில்லை என்றால் அந்த வங்கிக் கிளை பஞ்சாப் நேஷனல் வங்கியின் கவனத்துக்கு இதைக் கொண்டு வந்துள்ளதா? உரியதொகையைப் பெறுவதற்கு பி.என்.பி வங்கியின் உத்தரவாதம் எத்தனை சந்தர்ப்பங்களில் கோரப்பட்டுள்ளது?

*7)* இவையனைத்தும் அன்னியச் செலா வணிப் பரிவர்த்தனைகள் எனும்போது இந்த நடவடிக்கைகள் எப்படி ரிசர்வ் வங்கியின் கவனத்திலிருந்து தப்பியது?

*8) 200* போலி நிறுவனங்களை நிரவ் மோடி உருவாக்கி இவை மூலம் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இப்படியிருக்க பணமதிப்பு நீக்கத்துக்குப் பிறகு அனைத்து போலி நிறுவனங்களும் மூடப் பட்டுவிட்டதாக எந்த அடிப்படையில் உயரிய முன்னுரிமை கோரலை அரசு செய்து வருகிறது?

*9)* நிரவ் மோடியிடமிருந்து பறிமுதல் செய்த சொத்துக்கள் விவரங்களை விசாரணை முகமைகள் 'விரைவாக' வெளியிடுகின்றன, ஆளும் கட்சியும் இந்த முறைகேட்டில் ஊழல் செய்யப்பட்ட அத்தனை தொகையையும் திரும்பப் பெறுவோம் என்று கூறிவருகிறது. விசாரணை முகமைகள் பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களின் மதிப்பை இவ்வளவு விரைவாகக் கணக்கிட முடிகிறது என்றால், நான் இதே கேள்விகளில் கேட்டுள்ள சாதாரண தகவலை ஏன் அளிக்க முடியவில்லை?

*10)* இந்த ஒட்டு மொத்த ஊழலினால் எழுந்துள்ள குழப்பத்தில் பயனடைவது யார்? இந்த ஊழல் செய்தியின் காலம் அடுத்த பெரிய செய்தி வரும்வரைதான் என்பதை நாம் மறக்க வேண்டாம். அதன் பிறகு விஜய் மல்லையா போல் நிரவ் மோடியும் வரலாறாகி விடுவார் அல்லவா? ஆதாரம்:- (<https://www.ndtv.com/opinion/10-questions-for-arun-jaitley-on-nirav-modi-scam-1813252>)

இதில் எந்த கேள்விக்கும் மத்திய நிதி அமைச்சர் பதில் அளிக்க போவது இல்லை என்பது அனைவரும் அறிந்ததே பொதுவாக எந்த தவறு நடந்தாலும் அதற்கு காங்கிரஸ் கட்சியை குற்றம்சாட்டுவதும்இல்லையென்றால் தேச பக்தி என்னும் பெயரில் அதை மறைப்பதும் பா.ஜ.க அரசின் வழமையாகி விட்டது.

இதுநாள் வரை லலித் மோடி, மல்லையா, நிரவ் மோடி என மூன்று நபர்கள் அடித்த கொள்ளை மட்டும் 27400 கோடி. இம்மூன்று நபர்களும் தப்பித்து சென்றது 56இன்ச் ஆட்சி யில் தான். இவர்களுக்கு மட்டும் தாம் கைது செய்யப்பட போகிறோம் என்பது எப்படி முன்பே தெரிகின்றது. எப்படி இவர்கள் மட்டும் வழக்கு பதியப்படும் முன் வெளிநாடுகளுக்கு தப்பி செல்கின்றனர் என்பது தேச பக்தர் மோடிக்கே வெளிச்சம். ஆட்சி கட்டிலில் அமர் வதற்கு பொய்யையும் புரட்டையும் கலவரங்களையும் மூலதனமாக கொண்டு அமர்ந்தவர்கள் ஆட்சியில் சாமியார்களுக்கும் முதலாளித்துவ பெருச்சாளிகளுக்கும் கொண்டாட்டம் தான்.

பெருமுதலளிகளுக்காக எந்தவித சிரமமும் இல்லாமல் கடன் தொகையை வாரி கொடுத்து நட்டப்படும் இந்த வங்கிகள் தான் சாமானி யர்களின் 5000-10000 கடனுக்கு இழுத்தடிக்கும். பெருமுதலாளிகளோ கடனை வாங்கி விட்டு நாட்டை விட்டு சென்று விடுகின்றனர் அவர் களிடம் இருந்து பணத்தை பெறுவதற்கு அரசு எந்தவிதமான நடவடிக்கையையும் எடுபதில்லை ஆனால் சாமானியர்களுக்கு மட்டும் சட்டம் தன் கடமையை சரிவர செய்யும்.

மக்களின் வரிப்பணம் முழுவதும் அதிகார வர்கமும் முதலாளிகளுக்கும் தான் பயனளிப் பதாக உள்ளதையும் ஊழல் அரசின் அத்தனை நிலைகளிலும் புரையோடி போய் இருப்பதை நம்மால் காணமுடிகின்றது இந்நிலை தொடர்ந் தால் மக்கள் வாழத்தகுதியற்ற தேசமாக இந்த இந்திய தேசம் மாறிவிடும் அந்நிலை வராமல் தடுக்க மக்கள் மீது அக்கறையற்ற முதலாளித்துவ பாசிச பா.ஜ.க அரச தூக்கிவீசப்பட வேண்டும்.

**- ஹாரிஸ் முஹம்மது**



# கர்கரே கொலை வழக்கில் தீர்ப்பு!

கர்கரேயை கொலை செய்தது யார்? என்பதைக் கண்டுபிடிக்க நீதிமன்றங்களில் நீதிதேடிய இராதா காந்த் யாதவ், பிப்ரவரி-7, 2018 அன்று காலமானார், ஓரிரு மாதங்களுக்கு முன் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் வீழ்ந்தார். அவர் இறப்பதற்கு முன் அதாவது 24-01-2018 அன்று தொடர்ந்த வழக்கில் மும்பை உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பையும் தந்தது. அனைத்தையும் இங்கே இடம்பெறச் செய்கின்றோம்.

**யார் இந்த இராதா காந்த் யாதவ்**

*1934* ஆம் ஆண்டு பீகாரிலுள்ள Madepura Village மாதேபுரா என்ற கிராமத்தில் பிறந்தவர். விவசாயம்தான் இவரின் குடும்பத் தொழில். தனது ஆரம்பக் கல்வியை அந்தக் கிராமத்திலுள்ள பள்ளிக்கூடத்திலேயே கற்றார். அங்கேயே பட்டப்படிப்பையும் முடித்தார். அத்தோடு படிப்பதை நிறுத்திக்கொண்டார். காரணம் கேட்டபோது இந்த படிப்புகள் நமது சொந்த வாழ்க்கைக்கும் பயன்படவில்லை. நமது பொது வாழ்க்கைக்கும் பயன்படவில்லை எனக் குறிப்பிட்டார்.

நாட்டின் விடுதலையில் அவரது குடும்பம் அக்கறை உள்ளதாகவே தொடக்க காலந் தொட்ட இருந்துவந்தது. காந்தியின் தலைமையில் நடந்த விடுதலைப் போராட்டத்தினால் இந்தக் குடும்பம் பெரிதும் கவரப்பட்டது. அதில் குடும்பம் மொத்தமாகத் தன்னை இணைத்துக் கொண்டது.

விடுதலையடைந்த இந்தியாவில் இந்தக் குடும்பத்தினர் “சோசியலிசம்” என்ற கொள்கையின்பால் ஈர்க்கப்பட்டார்கள். இராதாகாந்த் யாதவும் சோசியலிசத்தை ஏற்றார். அரசுக்கே அனைத்தும் சொந்தம் எல்லாவற்றையும் தொழில்கள் உட்பட அனைத்தையும் அரசே நடத்தவேண்டும் என்ற கொள்கையை ஏற்றார்.

லோஹியா - என்பவர் நடத்திய சோசியலிஸ்ட்டு கட்சி என்ற கட்சியின் முழுநேர ஊழியராக அதிகார வர்க்கத்தினர் அவிழ்த்து

## இராதா காந்த் யாதவ் மரணம்

விடும் அநியாயங்களுக்கு எதிராகத் தொடர்ந்து போராடி வந்தார்.

### நெருக்கடி நிலை

இந்நிலையில் 1976 ஆம் ஆண்டு இந்தியாவில் நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தினார் அன்றைய பிரதமர் இந்திராகாந்தி. இந்த நெருக்கடி நிலைப் பிரகடனத்தை எதிர்த்தார் இராதா காந்த் யாதவ். இதனால் சிறைப் பிடிக்கப்பட்டார். 19 மாதங்கள் தொடர்ந்து சிறையில் இருந்தார்.

### சட்ட மன்றத்தில்

அடுத்து தேர்தல்கள் 1977-இல் வந்தன. அதில் முதல் முறையாக சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். 1995 வரை தொடர்ந்து மூன்று முறை சட்ட மன்ற உறுப்பினராக மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்துக்களையும், முஸ்லிம்களையும் பிரித்து பிணங்களையும் குவித்து அரசியல் பிழைக்கும் இந்துத்துவ தீவிரவாதத்தை எதிர்ப்பது உள்ளிட்ட செயல்களைக் கொண்ட அமைப்பொன்றை தொடங்கி அதற்கு தலைவராகவுமிருந்தார். அந்த அமைப்பின் பெயர் சப்த் கிராந்த் வாகினி பிகார்.

### 26/11 தாக்குதல்

இந்நிலையில்தான் 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் மும்பைத் தாக்குதல் நடைபெற்றது. அதில் வீரமகன், நேர்மையான, திறமையான, மராட்டிய காவல் துறை அதிகாரி ஹேமந்த் கர்கரே கொலை செய்யப்பட்டதையும் கவனித்தே வந்தார்.

வீரமகன் ஹேமந்த் கர்கரே கொலை செய்யப்பட்டது. அவர் நாட்டில் நடந்த பல்வேறு குண்டு வெடிப்புகளுக்கும் காரணம், அபிநவ்பாரத், ஆர்.எஸ்.எஸ். போன்ற சங்கப்பரிவாரத்தினரே என்பதைக் கண்டுபிடித்ததே என உறுதியாக நம்பினார் இராதாகாந்த் யாதவ்.

இந்நிலையில் தான் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் எழுதிய "கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம்" என்ற நூல் வெளியே வந்தது. (Who Killed Karakare? The Real Face of Terrorism in India)

இந்த நூல் 2009 ஆம் ஆண்டு வெளிவந்தது. அதனை மூன்று முறை திரும்பத் திரும்பப் படித்தார். இந்த நூல் கர்கரேயைக் கொலை செய்ததில் ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறைக்கும் முக்கியப் பங்குண்டு என்பதைத் தெளிவு படுத்தியது.

நூலைப் படித்து முடித்தவுடன் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்களைத் தொடர்புகொண்டார். தான் கர்கரேவுக்கு நீதிகேட்டு நீதிமன்றம் செல்லத் தயாராக இருப்பதாகக் கூறினார்.

நம் நாட்டை பாதுகாத்திட வேண்டிய உளவுத்துறையே நாட்டை பாதுகாக்க பணி செய்த அபூர்வ மனிதரை கொலை செய்ததை அவரால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை.

இராதாகாந்த் யாதவின் வாக்குறுதிகள் வெறும் வாய்வீச்சாய் இருக்கவில்லை. மாறாக அவற்றிற்கு செயல்வடிவமும் தந்தார்.

### உச்ச நீதிமன்றத்தில் வழக்கு

கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு ஒரு பொதுநல வழக்கை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அந்தப் பொதுநல வழக்கில் மும்பைத் தாக்குதலின் போது வீரமகன் கர்கரே கொலை செய்யப்பட்ட பகுதியில் பல புதிர்கள் இருக்கின்றன. அவர் திட்டமிட்டே கொலை செய்யப்பட்டிருக்கின்றார். அவர் கொலை செய்யப்பட்டதற்குக் காரணம் இந்தியாவில் தீவிரவாத செயல்களைச் செய்து கொண்டிருப்பவர்கள் சங்கப்பரிவாரத்தினர்தாம். அவர்கள் தாம் இந்தியா தீவிரவாதத்தின் உண்மை முகம் என்றெல்லாம் கூறி கர்கரேயைக் கொலை செய்யப்பட்டது குறித்து மறு விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என கோரி இருந்தார்.

மொத்த மும்பைத் தாக்குதலின் பின்னணியிலும் அபிநவ்பாரத் என்ற இந்துத்துவ தீவிரவாத அமைப்பும் "IB" Intelligence Bureau" என்ற மத்திய உளவுத்துறையும் இருக்கின்றது. அதையும் முழு மறு ஆய்வுக்கு (Re-Investigation) க்கு உச்ச நீதிமன்றம் ஆணையிட வேண்டும் எனக் கோரினார்.

அத்தோடு (Who Killed Karakare? The Real Face of Terrorism in India) என்ற நூலையும் உடன் இணைத்திருந்தார்.

இஃதல்லாமல் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள், தான் எழுதிய கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூலை உச்ச நீதிமன்ற நீதிபதிகள், உயர் நீதிமன்ற நீதிபதிகள் இப்படி அனை வருக்கும் அனுப்பி வைத்தார்கள்.

### உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்

இந்த நூலையும், இந்த நூலை அடிப்படை யாகக் கொண்டு தொடுக்கப்பட்ட வழக்கையும் படித்த உச்ச நீதிமன்றம் இந்த வழக்கை சம்மந்தப்பட்ட உயர்நீதிமன்றங்களுக்கு எடுத்துச் செல்லும் படியும், எந்த உயர்நீதிமன்றமும், உச்ச நீதிமன்றம் இந்த வழக்கை எடுக்கவில்லை என்பதைக் காரணங்காட்டி, இந்த வழக்கை விசாரணைக்கு எடுக்க மறுக்கக்கூடாது என்பதை யும் தெளிவுபடுத்தி வழக்கை "Dismissed as withdrawn" வழக்கை பின்வாங்கியதால் தள்ளுபடி செய்யப்பட்டது எனக்கூறு திரும்பத்தந்தது உச்சநீதிமன்றம்.



### மும்பை உயர்நீதி மன்றத்தில் வழக்கு?

உச்ச நீதிமன்றத்தின் ஆணையை அடிப்படை யாகக் கொண்டு மும்பை உயர்நீதி மன்றத்தில் "Criminal Public Interest Litigation" குற்றவியல் பொதுநல வழக்காக CR. Pil 24/2012 பதிவு செய்தார்.

மும்பை நீதிமன்றத்தில் வழக்கு வித்தியாச மான பல திருப்பங்களைச் சந்தித்தது.

மும்பை நீதிமன்றம், எடுத்த எடுப்பிலேயே இந்த வழக்கை தள்ளுபடி செய்திட வேண்டும் என மத்திய உளவுத்துறையும், அப்போது மத்திய அரசின் உள்துறை அமைச்சராகவுமிருந்த நமது ப.சிதம்பரம் அவர்கள் விரும்பினாலும் அது நடக்கவில்லை. வழக்கில் வைக்கப்பட்ட விவாதங்கள் வலுவாக இருந்தமையால் நீதிபதிகள் வழக்கை ஏற்றுக்கொண்டார்கள்.

மும்பை நீதிமன்றத்தில் அரசு தரப்பில் வைக்கப்பட்ட வாதத்தில் எடுத்த எடுப்பிலேயே இப்படிக் குறிப்பிட்டார்கள்.

"எஸ்.எம்.முஷ்ரிஃப் என்பவர் ஒரு நூலை எழுதி இருக்கின்றார். இந்த நூலை அதிகமாக விற்பனை செய்வதற்கு மலிவான உத்தி ஒன்றைக் கண்டுபிடித்திருக்கின்றார். அதுதான் இந்த வழக்கு 400-க்கும் மேற்பட்ட பக்கங்களைப் படித்து வழக்கும் விசாரணை யும் நடத்துவது நீதி மன்றத்தின் வேலை இல்லை. அதனால் இந்த வழக்கை உடனேயே (தள்ளுபடி) டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்றார்.

ஆனால் நீதிமன்றத்தின் பார்வை வேறாக இருந்தது. நீதிபதிகள் கர்கரேயைக் கொலை செய்தது யார் என்ற நூலைப் படித்திருந்தார்கள்.

இதுவும் நீதிமன்றத்தில் நடந்த நிகழ்வுகளும் வரலாற்றில் தடம்பதித்தவை அதனை இங்கே தருகின்றோம்.

### மும்பை நீதிமன்றத்தின் விசாரணையும் அதிர்ச்சியும்

நீதிமன்றத்திலே வழக்கு, தனது நூலில்தான் தொகுத்துத் தந்தவையெல் லாம் உண்மை என வாதிக்க வேண்டிய பொறுப்பு எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள்மீது விழுகின்றது.

வழக்கு யாருக்கெதிராக என்றால் இந்த நாட்டில் ஒரு சர்வாதிகார நிருவாகத்தை நடத்திக் கொண்டிருக்கும் மத்திய உளவுத்துறை அதன் இயக்கத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்த

பயங்கரவாத அமைப்புகள் ஆகியவற்றிக் கெதிராக. இவற்றையெல்லாம் எதிர்த்தவர்களை அதிக நாட்கள் வாழ்ந்திட விட்டதில்லை. இந்துத்துவா வாதிகள் என்பது வரலாறு.

சனாதனத்தைச் சந்தடியில்லாமல் செயல் படுத்திக் கொண்டிருக்கும் கும்பலே இவர்கள். இந்தக் குரூர குணம் கொண்ட அமைப்புகளுக் கெதிரான சண்டை எங்கே நடக்கின்றது என்றால் “சித்பவன்” பூமி எனவும் காந்தியைக் காவு கொண்டவர்களின் பூமி எனவும் கூறப்படும் இந்து பாசிசத் தலைமுறையின் பூமியாம் மராட் டிய மாநிலத்தில் அச்சமில்லாமல் அதனை தொடர்ந்து கொண்டிருக்கின்றார். எஸ்.எம். முஷ்ரிஃப் இராதா காந்த் யாதவ் உள்ளிட்டோர்.

மத்திய உளவுத்துறைக்கெதிராகவும் சங்கப் பரிவார பயங்கரவாதிகளுக்கெதிராகவும் யாரேனும் தங்கள் சுண்டு விரலை நீட்டினால் அதில் ஒரு நூலை யாத்தால் அந்த நூல் தடை செய்யப்படும், எழுதியவர் மீது இல்லாத பொல்லாத வழக்குகளெல்லாம் பாயும். கைது காரகிருகம் என்றெல்லாம்தான் நீதி மன்ற நடவடிக்கையே இருக்கும்.

ஆனால் இவற்றிற்கெல்லாம் மாறாக எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் தான் இராதா காந்த் யாதவர் வழி நீதிமன்றம் செல்கின்றார். நீதிமன்றம் இந்த வழக்குக் குறித்து சொன்னவை வரலாற்று ஆவணங்கள். அவை வைகறை-யின் வழி தமிழ்கூறும் நல்லுள்ளங்களை வெளிச்சப் படுத்த வேண்டும் என்பதற்காக இங்கே தருகின்றோம்.

இந்த வரிகள் நாளைய இந்திய வரலாற்றுத் திருப்பத்தின் முக்கிய சாட்சியங்களாக அமையப்போவதால் இன்னும் அதிகமான முக்கியத்துவத்தைப் பெறுகின்றன.

**எஸ்.எம்.முஷ்ரிஃப்-க்கு சம்மன்**

உச்ச நீதிமன்றம் உச்சரித்த குரலின் வழி “இந்தியாவில் நடந்த உள்நாட்டுச் சதிகள் குறித்த வழக்கு” மும்பை நீதிமன்றத்தின் நீதிபதி பி.எச். மார்லபள்ளி, நீதிபதி யூ.டி.சால்வி என்ற நீதிபதிகளின் முன் வருகின்றது. வழக்கையும் நூலையும் ஒன்றாகப் படித்த நீதிபதிகள் கூறுகின்றார்கள்.

கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகம் என்ற நூலை எழுதியவரை அழைத்து வாருங்கள் அவரிடம் விளக்கம் கேட்க வேண்டும் என்கின்றார்கள் நீதிபதிகள்.

எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களுக்கு “சம்மன்” வருகின்றது. *1-12-2010*-இல் நீதிமன்றம் வர வேண்டுமென, நீதிமன்றம் வருகின்றார் தனது நூல் குறித்து விளக்கம் தருகின்றார்.

எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களின் விளக்கத்தை கேட்ட நீதிபதி, அரசு வழக்கறிஞர் அவருக்குப் பக்கத் துணையாக வந்து நின்ற காவல்துறை அதிகாரிகள் இவர்களைப் பார்த்து இப்படிக் கூறுகின்றார்.

“If a government officer makes a statement, not just publicity but also in print, then it needs to be probed. Had the government found the contents of the book friviolous, it would have banned the book. You have not done it. May be you don’t have the courage. Have you filed a FIR against him (Mushrif)” Marliapalle said. If the government felt the contents of the book were wrong then they would take action against Mushrif.

However, If there is a prima facie material then it needs to be investigated”

“அதாவது, அரசு அதிகாரி ஒருவர், ஓர் அறிக்கையை வெளிப்படையாக வெளியிடுகின் றார் என்றால் அதனை புலன் விசாரணைக்கு உட்படுத்தியாக வேண்டும். அந்த நூலில் உள் ளவை அவதூறுகளாக இருந்திருக்குமே யானால் அரசு அந்த நூலைத் தடை செய்திருக்கும். நீங்கள் அதைச் செய்யவில்லை, ஒரு வேளை அதற்கான நெஞ்சுரம் உங்களுக்கில்லாமல் இருந்திருக்க லாம். நீங்கள் அவர் (முஷ்ரிஃப்) மீது முதல் தகவல் அறிக்கையாவது தாக்கல் செய்திருக்கின்றீர்களா? அரசாங்கம் நூலில் கூறப்பட்டுள்ளவை தவறு என உணர்ந்தால் அவர்கள் முஷ்ரிஃப் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அதில் பார்த்தவுடனேயே தெளிவு பெறும் அளவில் எதிர் தகவல்களிருந்தால் அவற்றை ஆய்வுக்கு உள்ளாக்கிட வேண்டும்.” ஆதாரம் : ஹிந்துஸ்தான் டைம்ஸ்-*21-11-2011*

“Juctice Marlapalle added then.

அதாவது, நீதிபதி மார்லாபள்ளி அவர்கள் மேலும் சொன்னார்கள் MTDC இன் தலைவர்

பூஷான் கேக் ராணி கர்கரேயைக் கொலை செய்தவர்களில் ஒருவர் மராத்தி மொழியில் பேசினார் என்பதை உறுதி செய்கின்றார். ஒரு தீவிரவாதி மராத்தியில் பேசுகின்றான் என்றால் நிச்சயமாக அவன் பாகிஸ்தானைச் சார்ந்தவனாக இருக்க மாட்டான். (ஆதாரம் : இந்தியன் எக்ஸ்பிரஸ் மும்பை நியூஸ்லைன் 2-12-2010)

The court asked why calls were not probed until Karkare was killed

அதாவது "கர்கரேயைக் கொலை செய்யும் வரை, தொலைபேசி அழைப்புகளை ஏன் ஆய்வு செய்யவில்லை" என நீதிமன்றம் கேட்டது.

The ATS started surviellance of the calls made by terrorist at Hotel Taj, Trident Oberoi and Nariman House only after Karkare was killed? Why is it so? till then was the attack not so important?

Souce : Indian Express Mumbai - Newsine 2-12-2010)

தீவிரவாதிகளின் தொலைபேசி, கைப்பேசி அழைப்புகளை கர்கரேயைக் கொலை செய்த பின்தான் தீவிரவாத தடுப்புப்படை கண்காணிக்கத் தொடங்கியது, அதுவும் ஹோட்டல் தாஜ், கிரிடெண்ட், ஒபரேய், நரிமான் ஹவுஸ் ஆகிய வற்றைத் தாக்கியபின்தான் தீவிரவாதிகளின் தொலைபேசி அழைப்புகளைக் கண்காணிக்கத் தொடங்கியது. இது ஏன்? கர்கரேயைக் கொலை செய்யும் வரை தீவிரவாதிகளின் தாக்குதல் அவ்வளவு முக்கியமானதில்லையா?

ஆதாரம் : இந்தியன் எக்ஸ்பிரஸ், மும்பை நியூஸ்லைன் 2-12-2010

Justice Marlapalle said the fact that 16 CCTV Cameras at the CST main platform was not functioning raises the questions if had they been tampered with before the attach.

"நீதிபதி மார்லபள்ளி மேலும் சொன்னார் : மும்பை சி.எஸ்.டி. ரெயில் நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த 16 தொலைக்காட்சி பதிவு பெட்டிகள் வேலை செய்யவில்லை என்பது, இந்த மும்பைத் தாக்குதலுக்கு முன் அவற்றை வேலை செய்யாமல் முடக்கிவிட்டார்களா? என்ற கேள்வியை எழுப்புகின்றது.

Why were the inputs received by the IB as early as november 19, 2008 not shared with the state and the western naval command. If the Pradhan



**நீதிபதி மார்லாபள்ளி**

Committee was not given the intelligence when sought for what is the use of the committee's report? some accountabily has to be there.

"நவம்பர் 19, 2008லேயே கிடைத்த தகவல்களை ஏன் IB மாநில அரசோடும் மேற்கு கப்பல் படையோடும் பரிமாறிக் கொள்ளவில்லை? பிரதான் கமிட்டி இந்தக் தகவல்களைக் கேட்ட போதும் கொடுக்கவில்லை என்றால் அந்தக் கமிட்டியின் அறிக்கையால் என்ன பலன்? இதில் நிருவாகத்தை நடத்துவோர் யாரேனும் ஒருவருக்குப் பதில் சொல்லிட வேண்டும் என்ற நிலை இருக்க வேண்டும்.

"Police had under survilence around 35 SIM Cards and the preliminary probe showed, the subscribers had casually said they had lost the cards. so we need to know whether there was a system failure in the state at the time of the attack".

"காவல்துறையின் கண்காணிப்பின் கீழ் 35 சிம்கார்டுகள் இருந்தன, அந்த சிம்கார்டுகளுக்குச் சொந்தக்காரர்கள் மிகவும் லாவகமாக அந்த சிம்காடுகள் காணாமல் போய்விட்டன எனக் கூறி இருக்கின்றார்கள். இதில் ஏதோ நமது நிருவாகமே. தாக்குதலுக்கு முன் நிலைகுலைந்து போய்விட்டதா என்பதை நாம் அறிந்திட வேண்டும்"

இப்படியெல்லாம் நீதிபதிகள் ஆதங்கத்தைக் கொட்டியபோது அரசு தரப்பில் ஆஜரான

பாண்டுரங்கபால் என்பவர் சொன்ன பதில்

"IB receives intelligence inputs on a daily basis and most of them are false so we don't act on them.

மத்திய உளவுத்துறைக்கு தகவல்கள் நித்தமும் வந்து கொண்டிருக்கின்றன. அதில் பெரும்பாலானவை தவறானவை. அதனால் நாங்கள் அவற்றின்படி நடவடிக்கை எடுப்பதில்லை.

Source : The Indian Express, Mumbai Newsline, 2-12-2010

**நீதிபதிகள் மேலும் சொன்னார்கள்**

"35 சிம்கார்டுகளில் 3 சிம்கார்டுகள் மராட்டிய மாநிலத்தையே சார்ந்தவை, இரண்டு சத்தாரா மாவட்டத்தைச் சார்ந்தவை ஒன்று ராய்கார்டு மாவட்டத்தை சார்ந்தது. அவற்றின் சொந்தக்காரர்கள் நாங்கள் அவற்றைத் தொலைத்து விட்டோம் எனக்கூறி இருக்கின்றார்கள். காவல்துறை அதோடு நிறுத்திக் கொண்டது. ஏன் மேற்கொண்டு ஆய்வுகளை நடத்திடவில்லை? Source : Hindustan Times 2-12-2010

இதே செய்தியை டைம்ஸ் ஆஃப் இந்தியா என்ற ஆங்கிலப் பத்திரிகையும் பல ஹிந்தி பத்திரிகைகளும் மற்றும் மராட்டிய பத்திரிகைகளும் வெளியிட்டிருந்தன.

நீதிமன்றம் இப்போது வழக்கை ஜூலை 2011-க்கு தள்ளிப்போட்டுவிட்டது.

**நீதிபதிகளின் கைகளிலிருந்து வழக்கை பறிக்க சதி**

இங்கே நோக்கம் இப்போது இந்த வழக்கை விசாரித்துக் கொண்டிருக்கும் நீதிபதிகளின் கைகளிலிருந்து மாற்றி விடுவதேயாகும்.

வழக்கை இந்த நீதிபதிகளின் கைகளிலிருந்து மாற்றிடக் கூடாது. காரணம் இந்த நீதிபதிகள் இருவரும் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் எழுதிய "கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம்" என்ற நூலைப் படித்துவிட்டார்கள். இனி இந்த வழக்கை கையிலெடுப்பவர்கள் புத்தகத்தைப் பார்ப்பார்கள் என எதிர்பார்ப்பதற்கில்லை. வேறு நீதிபதிகளின் கைகளுக்குச் சென்றால் வலுவிழக்கும் என எதிர்பார்க்கின்றார்கள் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களும், இராதாகாந்த் யாதவ் அவர்களும் எனினும் நீதிக்கான நமது போர் தொடங்கும்..

**நமது பத்திரிகைகளிடம் நாம் நடத்திய விசாரணை**

எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் எழுதிய நூல் நீதிமன்றம் சென்றது நீதிமன்றம் பல நியாயமான கேள்விகளை எழுப்பியது. அரசு தரப்பில் ஆணித்தரமான பதில்கள் எதுவுமில்லை.

இதையெல்லாம் மும்பையிலுள்ள பத்திரிகைகள் நன்றாகவே வெளியிட்டுள்ளன. ஆனால் மும்பைக்கு வெளியே இந்தச் செய்திகள் எந்த நிலையிலும் வெளி வந்திடவில்லை. இஃது அதிர்ச்சியையும் ஆச்சர்யத்தையும் தருவது.

மும்பையில் இந்தச் செய்திகளை வெளியிட்ட தேசிய பத்திரிகைகள் கூட தங்கள் பத்திரிகையின் இதரப் பதிப்புகளில் அதாவது மும்பைக்கு வெளியே உள்ள பதிப்புகளில் இதனை வெளியிடவில்லை.

பத்திரிகை துறையைச் சார்ந்த நண்பர் ஒருவரிடம் கேட்டோம். அவர் தங்கள் பத்திரிகையைச் சார்ந்த மும்பை சகாக்களிடம் கேட்டார். அதற்கு அவர்கள் இது மும்பைச் செய்திதான், அதனால் மும்பைப் பதிப்பில் மட்டும் வெளியிட்டால் போதும் என்பதுதான் மேலிடத்து ஆணை. அதனால் செய்தியை உங்களுக்கு மதுரை உள்ளிட்ட இதரப் பதிப்புகளுக்கு அனுப்பவில்லை எனச் சொல்லிவிட்டார்.

மும்பைத் தாக்குதல் உலகமெல்லாம் பரபரப்பை ஏற்படுத்தும் செய்தி என்பதை சூதுமதியினர் மட்டுந்தான் மறைப்பார்கள். மறுப்பார்கள். "வீரமகன்" ஹேமந்த் கர்கரேயின் கொலை நாடாளும் மன்றத்தையே உலுக்கிய ஒரு செய்தி ஹேமந்த் கர்கரே எங்கே வைத்துக் கொலை செய்யப்பட்டார் என்பது குறித்து நாடாளுமன்றத்திலேயே ஓர் அறிக்கையை தாக்கல் செய்தார்.

அமெரிக்காவிலிருந்தெல்லாம் இங்கே வந்தார்கள். பல கபளீகரங்களை நிகழ்த்தினார்கள். அதன்பிறகும் இந்தச் செய்தி அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனாலும் இந்த வழக்கும் விபரமும் மும்பையோடு மட்டும் சம்பந்தப்பட்டது. அதனால் இந்தப் பதிப்புகளில் செய்தியைத் தர மாட்டோம்




எனச் சொல்வது என்ன பத்திரிகை தர்மம்.

நமது பத்திரிகைகளை நாம் இப்படித்தான் புரிந்துகொள்ளவேண்டும். கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற உண்மை வெளியே வந்து விடக்கூடாது என்பதில் மத்திய உளவுத் துறையும் சங்கப்பரிவார கும்பல்களுந்தான் அக்கறையுடனிருக்கின்றன என்றில்லை. மாறாக நமது பத்திரிகைகளும் அதில் மிகவும் கவனமாக இருக்கின்றன. அது பற்றி செய்திகளை தொடர்ந்து இருட்டடிப்புச் செய்து வருகின்றன.

கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூலை ஆராய்ச்சி செய்த ஜெர்மனி நாட்டைச் சார்ந்த ஆய்வாளர் "ILIAS DAVIDSON" இவையெல்லாம் மிகப்பெரிய துரோகம் எனக் கூறுகின்றார்.

கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூலை இன்றளவும் பொதுவான பத்திரிகைகள் அவ்வளவாகக் கண்டுகொள்ளவில்லை என்ற உண்மையை நாம் மறந்திடக் கூடாது. இது முழுப் பூசணியைச் சோற்றில் மறைப்பதாகும்.

அதேநேரத்தில் பொய்யாக எந்த ஆதாரமுமில்லாமல் வானத்திலிருந்து வந்த தகவல் எனக் கூறி கைது செய்யப்படும் அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் பற்றிய குரூரமான சித்தரிப்புகள் முதல் பக்கத்தில் இடம் பெற இதுவரை தவறியதில்லை.

ஒரு முதற்பக்க செய்தியோடு மட்டும் நிறுத்திவிட மாட்டார்கள், உள் பக்கங்களில் வேறு வேறு தலைப்புகளில் வெளியிடுவார்கள். அத்தனையும் பொய்கள், வதந்திகள். ஆனாலும் மக்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிடுவார்கள்.

நமது தொலைக்காட்சிகள், விவாதங்கள் கருத்துக் கணிப்பு என்றெல்லாம் அந்தச் செய்தியை மிகைப்படுத்தி மொத்த முஸ்லிம் சமுதாயத்தையும் இஸ்லாத்தையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தும்.

இவையெல்லாம் கர்கரேயைக் கொலை செய்த விவகாரத்தில் வெளிச்சத்திற்கு வந்து கொண்டிருக்கும் உண்மைகளுக்கு செய்யப்படவில்லை, அந்தச் செய்திகளெல்லாம் மொத்தமாக இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன.

"கர்கரேயைக் கொலை செய்தவர்களில் ஒருவர் மராத்தி மொழியில் பேசினார். அதனால் அவர் நிச்சயமாக பாகிஸ்தானியாக இருக்க முடியாது" என்ற நீதிபதியின் சொற்களில் பொதிந்திருக்கும் ஆபத்தும் ஆழமும் அதிர்ச்சியும் இவர்களை சீண்டிடவில்லை. வியப்பில் ஆழ்த்திடவில்லை. எவ்வளவு அசிங்கமாக ஊடகங்களை ஓட்டுகின்றார்கள் நம்மவர்கள்.

நீதிபதிகளின் இந்த வரிகளும், "கர்கரேயைக் கொலை செய்த பின்னர்தான் மும்பை தாக்குதல் மொத்த நிருவாகத்திற்கும் முக்கியமாகப் பட்டதா?" என்ற வினாவும் ஒரு நேர்மையான அதிகாரியை (ஹேமந்த் கர்கரேயை) கொலை செய்வதற்கு எத்துணை பெரிய சதிகளை மொத்த நிருவாகமும் செய்திருக்கின்றது என்பது இந்த நாட்டில் எந்த ஊடகத்திற்கும் முக்கியமாகத் தெரியவில்லை ஏன்?

**நீதிபதியின் கேள்வியும் - பதிலும்**

மும்பை நீதிமன்றத்தில் நீதிபதி பி.எச். மார்லாபள்ளி அவர்கள் ஒரு வினாவை எழுப்பி இருக்கின்றார். அது "இந்த நூலில் அதாவது எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் எழுதிய நூலில்




பொய்கள் - இருந்திருந்தால் அவதூறுகள் இருந் திருந்தால் நீங்கள் அதை தடை செய்திருப்பீர்கள். அதில் உண்மைகள் பளிச்சிடுவதால் நீங்கள் அதை மறு புலனாய்வுக்கு உட்படுத்த வேண்டும்"

உண்மையில் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் எழுதிய நூலில் பொய்யும் புரட்டுமே எஞ்சி இருந்தது என வைத்துக்கொள்வோம் பத்திரிகை களும், மின்னணு ஊடகங்களும் என்ன செய்திருக்கும்?

தினமும், அந்த நூலில் இடம் பெற்ற பொய் களை விரித்து விசாலமாக்கி எழுதியிருக்கும். நூல், இந்தியாவுக்கு எதிரானது பாகிஸ்தான் உளவுத்துறையின் உருவாக்கம், உள்நாட்டுப் பாது காப்பிற்கு பங்கமானது. நூலை எழுதியவரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும் என்றெல்லாம் அரசை நிர்பந் தித்திருப்பார்கள்.

நம் நாட்டில் நடப்பிலிருக்கும் "பொடா வான" UAPA என்ற "சட்டத்திற்குப் புறம்பான நடத்தைகளின் தடுப்புச் சட்டம்" என்ற சட்டத்தை நூலை எழுதியவர் மீது ஏவ வேண்டும் என எகிறி குதித்திருப்பார்கள்.

தொலைக்காட்சிகள், இந்தத் தண்டனைகள் போதுமா? இன்னும் கொஞ்சம் வேண்டுமா? என விவாதித்து மக்கள் கருத்துக்களை கேட்டிருக்கும். பரபரப்புகளை உருவாக்கி இருக்கும்.

பின்னர் மக்கள் கருத்தின் முடிவாக முஷ்ரிஃப் அவர்களை ஆயுள் உள்ளவரை சிறையில் வைத் திட வேண்டும் என தீர்ப்பு எழுதி இருக்கும்.

ஆனால் மும்பைத் தாக்குதல், நாட்டில், நம்மவர்களே செய்த மிகப்பெரிய துரோகம் என்பதை மும்பை நீதிமன்ற நீதிபதிகள் தெளிவாகச் சுட்டிக் காட்டிய பின்னரும், மீடியாக்கள் என்ற ஊடகங்கள் கண்டுகொள்ளவில்லை.

இந்த கபளீகரங்களெல்லாம் மும்பை நீதி மன்றம் தெளிவாக சுட்டிக்காட்டிய பின்னரும் சாட்சியங்களுக்குப் பின்னரும் மீடியாவில் காண முடியவில்லையே ஏன்?

அப்படியானால் இந்த ஊடகங்கள் ஹேமந்த் கர்கரேயைக் கொலை செய்ததில் தவறில்லை எனக் கருதுகின்றனவா?

**ஊடகங்கள் மறைத்த மற்றொரு செய்தி**

கர்கரேயின் கொலையிலும், நாட்டில் நடந்த பல்வேறு குண்டு வெடிப்புகளிலும் மத்திய உளவுத்துறையின் கைகளிலிருக்கின்றன என எஸ்.எம்.முஷ்ரிஃப் திட்டவட்டமாக கூறுகின்றார்.

இந்தச் செய்தியை கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூலில் சான்றுகளுடன் நிறுவுகின்றார். நூல் பல்வேறு மொழிகளிலும் வெளிவந்துள்ளது. தமிழகத்தில் 28 இடங்களில் இது குறித்த விளக்க கூட்டங்களை நடத்தி இருக்கின்றோம். மராட்டிய மாநிலமும் பல்வேறு அறிமுக விழாக்களைக் கண்டது. மராட்டி யத்தில் இந்நூல் விழாவை நடத்திய கோவிந்த பன்சாரே என்ற இடது சாரி தலைவர் சுட்டு படுகொலை செய்யப்பட்டார். மொத்தத்தில் இந்த சலசலப்புக்கள், கலகலப்புக்கள் எல்லாம் பெரும் சலனத்தை ஏற்படுத்தி இருக்கின்றன.

**உளவுத்துறையின் அதிர்வு மாற்றம்**

மத்திய உளவுத்துறையைச் சார்ந்த 30 மூத்த அதிகாரிகள் இடமாற்றம், பணிமாற்றம்



இராதாகாந்த் யாதவ்

செய்யப்பட்டுள்ளார்கள். மத்திய உளவுத் துறையின் வரலாற்றில் இப்படி ஒரு நிகழ்வு நடந்ததில்லை என்று மூத்த அலுவலர்கள் கூறுகின்றார்கள்.

இந்தச் செய்தியை டைம்ஸ் ஆஃப் இந்தியா ஆங்கிலப் பத்திரிகை பெங்களூர் பதிப்பில் **6-3-2011 8-ஆம்** பக்கத்தில் சிறு செய்தியாக வெளியிட்டுள்ளது.

ஏனைய பத்திரிகைகளின் பார்வையில் இது படவில்லை. காரணம் அவர்கள் இந்த உளவுத் துறையின் செய்திகளை உண்மை எனக் கருதி பக்கம், பக்கமாக எழுதி குவித்திருக்கின்றார்கள். இந்தச் செய்திக்கு முக்கியத்துவம் தந்தால் அவர்களின் செய்தி ஆதாரங்கள் ஒட்டுமொத்தமாக அடிபட்டுவிடும்.

எது எப்படியானாலும், நாம் இந்தியாவை நம்மிடம் சம்பளம் வாங்கிடும் உளவுத்துறையின் சதிகளிலிருந்து காப்பாற்றிட அதிகாரிகளை இடமாற்றம் செய்தால் மட்டும் போதாது. அவர்களைப் பணி நீக்கம் செய்ய வேண்டும். கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்திட வேண்டும்.

### வழக்கில் திடீர் திருப்பங்கள்

நீதிபதி மார்லாபள்ளி அவர்கள் இராதாகாந்த் யாதவ் அவர்கள், தொடுத்த வழக்கை முழுமையாகப் படித்துவிட்டார் என்பதையும், இராதாகாந்த் யாதவ் அவர்கள் தொடுத்த வழக்கில் முக்கிய ஆவணத் தொகுப்பான "கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகம்" என்ற நூலையும் படித்துவிட்டார் என்பதையும் அவர் நீதிமன்றத்தில் தெளிவுபடுத்திய கருத்துக்களிலிருந்து நாம் நன்றாக அறிந்துகொள்ளலாம். இந்த நிலையில் நாமும் இந்த வழக்கில் நம்மால் ஆனவற்றைச் செய்தோம். இதைக்கண்டு அஞ்சினார்கள். மும்பைத் தாக்குதலின் சூத்திரதாரிகள் அவர்கள் எப்படியேனும் நீதிமன்றம் அதற்கு மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவிடாமல் தடுத்திட வேண்டும் என முடிவு செய்தார்கள். தடுத்தே விட்டார்கள் என்றே சொல்ல வேண்டும்.

இராதாகாந்த் யாதவ் வழக்கை நடத்திய எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள், நியமிக்கும் வழக்கறிஞர்களை மிரட்டி அவர்களை நீதிமன்றம் வரவிடாமல் தடுத்துக் கொண்டே இருந்தார்கள்.

பின்னர் இந்த வழக்கில் ஆர்வம் காட்டிய நீதிபதி மார்லாபள்ளி அவர்களிடமிருந்து இதர பெஞ்சுகளுக்கு மாற்றினார்கள்.

சட்டப்படியும், நீதிமன்றத்தின் நிர்வாக நெறிகளின்படியும் ஒரு வழக்கை ஒரு நீதிபதி விசாரித்துக் கொண்டிருக்கும்போது அந்த வழக்கை இன்னொரு நீதிபதியின் பெஞ்சுக்கு மாற்றக்கூடாது. இப்படியொரு உத்தரவை **1994-1998** க்கு இடைப்பட்ட காலக்கட்டங்களில் அவர்களில் நீதியரசர் V.R. கிருஷ்ணய்யர் அவர்கள் பிறப்பித்திருந்தார்கள்.

இந்த உத்தரவை எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களும் இராதாகாந்த் யாதவ் அவர்களும் தேடி எடுத்து, நீதிமன்றத்தின் பார்வைக்குக் கொண்டு வந்தார்கள். ஆனால் அது பலனின்றி போய் விட்டது.

மார்லாபள்ளியின் பெஞ்சுக்கு அதாவது அவருடைய பெஞ்சுக்கு அந்த வழக்கு மீண்டும் வரவே இல்லை.

இத்தனையும் நடந்துகொண்டிருக்கும் போது வழக்கை பதிவு செய்த 2012 ஆம் ஆண்டு மும்பை நீதிமன்றம், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் அதாவது மும்பை தாக்குதல் நடந்த மராட்டிய மாநில அரசுக்கும் நோட்டீஸ்

அனுப்பியது. அந்த நோட்டீசுக்கு நான்கு வாரங்களுக்குள் பதில் சொல்லிட வேண்டும் என உத்தரவிட்டது. ஆனால் இன்றுவரை மத்திய அரசோ, மாநில அரசோ பதில் அனுப்பவில்லை.

மராட்டிய அரசின் சார்பில் ஒரு காவல்துறை அதிகாரி "உப்புச்சப்பின்றி" ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்தார்.

ஆனாலும் நீதிமன்ற நடவடிக்கைகளைக் கண்டு மும்பைத் தாக்குதலை ஏற்பாடு செய்தவர்கள், கர்கரேயைக் கொலை செய்தவர்கள் எல்லாம் பதறினர்.

மொத்த தாக்குதலுக்கான பழியையும் அஜ்மல் கசாப் என்ற புள்ளப்பூச்சியை அவசர, அவசரமாக **22-11-2012** ஆம் ஆண்டு காலை **7.30** மணிக்கு இரகசியமாகத் தூக்கிலே போட்டு மொத்த வழக்கையும் மூடினார்கள். (இதுகுறித்து பல அரிய தகவல்கள் - நமது முயற்சி ஆகியவற்றை அறிந்திட படியுங்கள் கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? என்ற நூல், வேர்கள் பதிப்பகம்)

ஆனால் இராதாகாந்த் யாதவ் அவர்களும் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களும் நாமும் முயற்சிகளை முடக்கிப் போட்டிடவில்லை. மனம் தளர்ந்திடவில்லை.

மும்பை நீதிமன்றத்தில் முயற்சிகளைத் தொடர்ந்தோம். மும்பை நீதிமன்றம் ஒரு கட்டத்தில் ஒரு முழு விசாரணையை மேற்கொள்ள உத்தரவிட்டது.

பின்னர் அன்று நீதிமன்றமே நடக்கவில்லை என்று கூறிவிட்டார்கள். அதற்கான அன்று நீதிமன்றம் நடந்ததையும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதையும் இன்றளவும் கண்டுபிடிக்க முடியவில்லை. இப்படி மும்பை தாக்குதலை நடத்தியவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை வழிமறித்துக் கொண்டே இருந்தார்கள்.

வழக்கில் எந்த வழக்கறிஞரை வைத்தாலும் அவர்கள் அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அதிகார வர்க்கத்தினரால் அந்த உத்தரவுகளை செயல்படுத்தாதது குறித்து நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்த போது, அதனால் அவர்கள் அந்த வழக்கறிஞர்கள் முன்னறிவிப்பில்லாமல் வழக்கிலிருந்து வெளியேறினார்கள்.

இதனால் மனமுடைந்த இராதாகாந்த் யாதவ் நிலையை விளக்கி மும்பை உயர்நீதிமன்றத்திற்கு கடிதம் ஒன்றை எழுதினார். அந்தக் கடிதத்தில்

"வழக்கறிஞர்கள் மிரட்டப்படுவதாலும் அந்த மிரட்டலுக்குப் பயந்த வழக்கறிஞர்கள் திடுதிப்பென வழக்கிலிருந்து பின் வாங்கிக் கொள்வதாலும் நான் திசையற்று நிற்கின்றேன். அத்துடன் நானும் பயணம் செய்திட இயலாமல் ஆகிவிட்டேன். அதனால் வழக்கை நான் தந்துள்ள ஆதாரங்களின் அடிப்படையில் முடித்துக்கொள்ளலாம் எனக்கூறி இருந்தார். (அவர் படுக்கையில் கிடந்தார் என்பது குறிப்பிடத்தக்கது)

இதன்பின் நீதிமன்றம் இரண்டு "ஆமாம் சாமி" வழக்கறிஞர்களை நியமித்தது. அவர்களின் பெயர்கள் M.S.மோகித், S.R.பன்சாரே இவர்கள் வழக்கை மூடிவிட வேண்டும் என வாதிட்டார்கள்.

ஆகவே நீதிபதிகள் வழக்கை தள்ளுபடி செய்கின்றோம் எனக்கூறாமல் இந்த வழக்கில் நாங்கள் எந்த உத்தரவையும் பிறப்பிக்க விரும்பவில்லை. இந்த வழக்கை இத்தோடு நிறைவு செய்கின்றோம் என கூறிவிட்டார்கள். அன்று வரை மத்திய அரசுக்கு அனுப்பிய நோட்டீசுக்கு பதில் வரவில்லை. இப்படிக்கூறிய உத்தரவு **24-1-2018** ல் வந்தது. இந்திய நீதியை நம்பியவர் நீதி பெறாமலே கையறு நிலையில் இராதாகாந்த் யாதவ் அவர்கள் **7-2-2018** அன்று மரணமடைந்தார்.

இந்த வழக்கில் இனி உச்சநீதிமன்றம்தான் மீதி அங்கேயும் மோதிப்பார்த்து விடுவது என முடிவு செய்துள்ளோம். அங்காவது நீதி கிடைக்குமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

- இன்ஷா அல்லாஹ்

- MGM

1) கர்கரேயைக் கொலை செய்தது யார்?
2) 26/11 நீதித்துறையும் மயங்கியது ஏன்?
3) கசாம்-ஐ இரகசியமாக தூக்கிட்டது ஏன்?
4) புரோகித்-இன் லேப்டாப்பில் இருந்தது என்ன?
5) சுவாமி அசீமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம்?

வாசகர்கள் இந்த நூல்களை வாங்கிப் படிப்பதுடன் சகோதர சமுதாயத்தவர்களுக்கும் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.



# நான் ஏன் ஓர் அமெரிக்கன் அல்ல..?

**அமெரிக்காவின் நிறவெறிக் கொடுமைகளுக்கு எதிராக இஸ்லாத்தை முன் வைத்துப் போராடி தன் உயிரைத் தந்த மாவீரனின் வாழ்க்கை வரலாறு.**

### அமெரிக்காவின் நிறவெறி கொள்கைகளுக்கு எதிராக அவர் வைத்த முழக்கங்கள்

நான் அமெரிக்காவிலிருந்து வருகின்றேன். ஆனால் நானொரு அமெரிக்கன் அல்ல.

நான் அடிமைகளின் வாரிசு. வெள்ளை நிற வெறியர்களால் கொடுமைகளுக்கு ஆளாக்கப் பட்டவன். அமெரிக்கா சுதந்திர உலகின் முன்னோடி எனக் கூறிக்கொள்கின்து.

ஆனால் அங்கே ஒரு கறுப்பன் வீதியிலே உலவ முடியாது. அவன் சுதந்திரமாக நின்று ஒரு 'கப்' தேனீர் அருந்த முடியாது. இது என்ன சுதந்திரம்? என்பனவற்றை அமெரிக்காவை மோகிப்பவர்கள் அறிந்திட வேண்டும் என அவாவுறுவோர் அறிவீனர்களே!

நானும் என்னோடு வாழும் 2.5 (இரண்டறை) கோடி கறுப்பர்களும் அமெரிக்க ஜனநாயகத்தின் பலிகடாக்கள். அமெரிக்க நயவஞ்சகத்தின் அடிமைகள். உலகுக்கே நாங்கள்தாம் வழி காட்டிகள் எனக் கூறிடும் யோக்கியதை அமெரிக்கர்களுக்கு அறவே கிடையாது.

நாங்கள் அமெரிக்கா அடிமை சந்தை யின் விற்பனை பொருள்களாக அடிமைச் சரக்கு கப்பலில் கடத்தி வரப்பட்டவர்கள். உல்லாசக் கப்பல்களான "குவின்மேரி" கப்பலிலோ "மேபிளோவர்" கப்பலிலோ வந்தவர்களல்ல.

நாங்கள் (கறுப்பர்கள்) அமெரிக்க மண்ணை மிதிக்கும்போது கைகளிலும், கால்களிலும் இரும்புச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட நிலையில் இருந்தோம். இன்னும் அந்தப் பிணைப்புகள் அறுபடவில்லை, நாங்கள் (கறுப்பர்கள்) அமெரிக்கா வந்திறங்கிய விற்பனை சரக்குகள்.

உலகநாடுகளைதனது அடிமை நாடுகள் என்ற அகந்தையோடு அணுகும் நாடு அமெரிக்கா. 1864 களிலே பிரிட்டன், ஜெர்மனி, போர்த்துகீஸ் ஆகிய நாடுகள் உலகில் சில பகுதிகளை காலணி நாடுகளாக அடிமை நாடுகளாக வைத்திருந்தன. ஆனால் இன்று உலக நாடுகள் அனைத்தையும் தனது காலணி நாடுகளாக நடத்தி வருகின்றது அமெரிக்கா.

உலகிலேயே அமெரிக்காவில் மட்டும்தான் அடிமைகள். அதாவது உரிமைகள் மறுக்கப்பட்டவர்கள் அதிகமாக வாழுகின்றார்கள். வடக்கு ஆப்பிரிக்காவில் ஒரு கோடியே 10 லட்சம் மக்கள் – கறுப்பர்கள் அடிமைகளாக வாழுகின்றார்கள். அங்கோலாவில் 50 லட்சம் மக்கள் மட்டுமே – கறுப்பர்கள் அடிமைகளாக வாழுகின்றார்கள். ஆனால் அமெரிக்காவில் மட்டும் தான் 2.5 கோடி மக்கள் அடிமைகளாக வாழுகின்றார்கள்.

செவ்விந்தியர்களைக் கொலை செய்துவிட்டு அபகரித்த பூமியில்தான் அமெரிக்கர்கள் வாழுகின்றார்கள். ஆப்பிரிக்காவிலிருந்து கடத்தி வரப்பட்ட கறுப்பர்களின் உழைப்பால் தான் அமெரிக்கர்கள் உயர்ந்தார்கள்.

உலக நாடுகளின் கனிமங்களைக் கொள்ளையடித்துத்தான் அமெரிக்கா செழித்துக் கிடக்கின்றது. இவர்கள் நவீன ஆதிக்க வெறியர்கள்.

நான் என்னை விடுவித்துக் கொண்டவன். நான் இந்த விடுதலைக்காக ஏற்றுக்கொண்ட மார்க்கம். என்னை சூரியனின் கீழ் உலகில் எங்கே வேண்டுமானாலும், நான் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். யாருக்கும் எந்த நிலையிலும் அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டாம் எனப் பிரகடனப்படுத்துகின்றது. ஆனால் நான் நல்லவனாகவும், நல்லனவற்றையே நாடுபவனாகவும், நல்லவற்றனவை செய்பவனாகவும் இருக்க வேண்டும் என்கின்றது.




இங்கே "கனா"வில் குழுமி இருக்கும் அனைவருக்கும் அல்லாஹ் புரட்சிகர சிந்தனைகளையும், நல்ல ஆரோக்கியத்தையும் தருவானாக.

"WHY I AM NOT AN AMERICAN" ஏன் நான் ஒரு அமெரிக்கன் அல்ல? என்ற தலைப்பில் "கனா"வில் நடந்த உலக கறுப்பர்கள் விடுதலை நாளில் **மால்கம்-X** ஆற்றிய உரையிலிருந்து எடுக்கப்பட்டது.


**வைகறை வெளிச்சம்**

**இதழில்**

**விளம்பரம் செய்து**

**பயனடையுங்கள்**




# பர்மாவில் கண்டுபிடிக்கப்பட்ட கூட்டுப் புதைகுழிகள்

# முஸ்லிம்களின் பிணங்கள்!



"கிரிக்கெட்" விளையாட தயாரானர்கள், மியான்மரின் புத்த இளவல்கள். வேகப் பந்தொன்றை (பவுன்சர்) வீசினார் ஒருவர்.

எதிரணியைச் சார்ந்தவர், தன் கையிலிருந்த மட்டையில் பந்தை அடிக்கத் தயாரானார், பந்து மட்டையில் படவில்லை, தரையில் பட்டு எகிறியது. பந்து தரையில் பட்ட இடத்திலிருந்து சில கைவிரல்கள் – துண்டாடப் பட்டவை தென்பட்டன.

**விளையாட்டு விபரீதமானது...**

*மியான்மரில் கூட்டுப் புதைகள் இருக்கின் றன. அவை ஒன்றிரண்டல்ல பல எனப் பேசிக் கொண்டிருந்தவர்களின் பார்வைக்குச் சென்றது. பின்னர் அந்த கிரிக்கெட் மைதானத்தின் கீழிருந்தது ஒரு கூட்டுப் புதைகுழி என்பது தெளிவானது.*

இந்த இடம் ரோகிங்யா முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழ்ந்த இடம். அதன் பெயர் Gu Dar Pyn - குடார் பைன் என்பதாகும்.

மியான்மர் அரசாங்கம் இந்த இடத்தில் இருந்தது கூட்டுப் புதைகுழி அல்ல என்றது. பின்னர் சர்வதேச குழுக்கள் அந்த இடத்தைப் பார்வையிட்டன. அவை அழுத்தமான கூட்டுப் புதைகுழிதான் என்றன. அதை அகழந்தெடுக் கப்பட வேண்டும் என அழுத்தங்களைத் தந்தது. வெறும் பத்துபேர் மட்டுமே அங்கே புதைக் கப்பட்டிருந்தார்கள் என்றது.

பின்னர் அவை அகழ்ந்தெடுக்கப்பட்டபோது 75 முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டு புதைக் கப்பட்டிருந்தார்கள் என்பது கண்டுபிடிக்கப் பட்டது.

இப்படி அடுத்தடுத்து 5 கூட்டுப் புதை குழிகள் கண்டெடுக்கப்பட்டன. அசோசியேடட் பிரஸ் (Associaed Press) என்ற செய்தி நிறுவனம் டிஜிட்டல் குளோப் என்ற சேட்லைட் - விண் வெளிகோள் வழியாக கிடைத்த பதிவுகளின் அடிப்படையில் இந்த உண்மையை ஊர்ஜிதம் செய்துள்ளது. (Satellite Images Obtained for from Digitalglobe)

இதையே மியான்மரிலிருந்து பங்களாதேஷில் அடைக்கலம் புகுந்துள்ள அந்த கிராமத்தில் உயிர் பிழைத்து, தப்பி ஓடிய இரண்டு இளைஞர் களில் ஒருவரான நூர் காதிர் என்பவர் உறுதி செய்துள்ளார். இதனை தி இந்து ஆங்கில நாளிதழ் பதிவு செய்துள்ளது. The Hindu, Feb-2, 2018

நூர் காதிர் இந்து பத்திரிகை நிருபர்களிடம் இதை இப்படிச் சென்னார்...

நாங்கள், என்னைத் தவிர இன்னும் 14 பேர். அத்தனைபேரும் ரோகிங்யா முஸ்லிம்கள் "குடார் பைன்" என்ற கிராமத்தில் கால்பந்து விளையாட ஒன்று கூடினோம். யார், யார், எந்தெந்த அணியில் இடம் பெறுவது என்பதைத் தெரிவு செய்து கொண்டிருந்தோம்.

தீடிரென துப்பாக்கிக் குண்டுகள், எங்கள் மீது பாய்ந்திட தொடங்கின. நாங்கள் சற்றும் இதை எதிர்பார்க்கவில்லை. மொத்தமாக அந்தக் கிராமத்தில் வாழ்ந்தவர்களின் நூர் காதிரும், இன்னும் இருவரும் மட்டுமே உயிர் பிழைத்தார்கள். இவர்கள் தப்பித்துக் காட்டுப் பகுதிக்குள் நுழைந்து விட்டார்கள்.

கொலையைச் செய்த இராணுவத்தினர் ஐந்து புதை குழிகளைத் தோண்டி அந்தக் கிரா மத்தைச் சார்ந்த அந்த 400 கிராமத்தவர்களையும் புதைத்துவிட்டார். பின்னர் அந்தப்புதை குழி களுக்குப் பக்கத்தில் வந்த நூர் காதிர் இரண்டு புதை குழிகளில் தனது விளையாட்டுத் தோழர் களில் ஆறுபேரை அடையாளம் காட்டினார். அவர்கள் அணிந்திருந்த சட்டையின் "காலர்" மட்டுமே அடையாளம்.

இப்போது கண்டுபிடிக்கப்பட்ட ஐந்து கூட்டுப் புதைகுழிகளில் இதற்கு முன்னால் கண்டுபிடிக்கப்பட்ட கூட்டுப் புதைகுழிகளில் கணக்கில் வராது.

இராணுவத்தினர், இந்த "கூடார் பைன்" கிராமத்து மக்களை ஒன்றாக அழைத்து வந்து, துப்பாக்கி குண்டுகளால் கொலை செய்து, புதைத் துள்ளார்கள். புதைப்பதற்கு முன்பு "ஆசிட்" என்ற இரசாயன திரவத்தை ஊற்றி இருக்கின்றார்கள். இதனால் அந்தப் பிணங்கள் விரைவில் மக்கி மண்ணோடு மண்ணாக கலந்துவிடும். இரசாயன பொருட்கள் அந்த மக்களை கொலை செய்யவும், புதைக்கவும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதையும், அசோசியேடெட் பிரஸ் என்ற செய்தி நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

இந்தக் கொலைகள் எப்போது நடத்தப்பட் டன? கொலை செய்யப்பட்டவர்கள் எப்போது கூட்டாகப் புதைகப்பட்டார்கள் என்பனவற்றை அந்தப் புதைகுழிகளிலிருந்து எடுக்கப்பட்ட செல்போன்கள் என்ற கைப்பேசியிலிருந்து கண்டுபிடித்தார்கள். "Time Stamped Cell Phone Videos"

இவற்றை இந்தப் படுகொலைகளிலிருந்து தப்பியவர்கள், காடுகளில் பதுங்கி, பதுங்கி பங்களாதேஷ் அகதிகள் முகாம்களுக்கு வந்திருந் தார்கள். இந்தப் பத்து நாட்களாகவும் அவர்கள் இலைகளையும், தழைகளையும்மே உண்டு வாழ்ந்தார்கள். இப்படியே 10 முதல் 15 மைல் களைக் கடந்து வந்திருக்கின்றார்கள்.

(TH. 2/2/2018)




### மியான்மர் ஆட்சியாளரின் மறுப்பு

மியான்மரின் ஆட்சித் தலைவராக ஆங் சான் சுஹி என்ற பெண்மணிதான் இருக்கின்றார். இவர் கடந்தகால மனித உரிமை போராளி. மியான்மரில் நடக்கும் இராணுவ ஆட்சி ஒழிக்கப்பட்டு மக்களாட்சி மலர்ந்திட உழைத்தவர். 20 ஆண்டுகள் சிறையிலிருந்தவர். இந்தச் செயல்களுக்காகப் பல சர்வதேச விருதுகளைப் பெற்றவர்.

ஆட்சியில் அமர்ந்தவுடன் இனப்படுகொலைகளின் தலைவியாக ஆனவர். இவருக்கு வழங்கப் பெற்ற பல சர்வதேச என்ற விருதுகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

இவருடைய இப்போதைய தனித் தன்மைகளுள் ஒன்று இன்றளவும் மியான்மரில் கூட்டுப் புதைகுழிகள் என்றொன்று இல்லை என வாதித்து வருவது. ஆனால் இந்த நிலைப்பாட்டில் இவர் அதிக நாட்கள் நிற்க முடியவில்லை. காரணம் சர்வதேச செய்தி நிறுவனங்களான அசோசியேடெட் பிரஸ் “Associated, ரியூட்டர் Reuters போன்றவை பல கூட்டுப் புதைகுழிகளைக் கண்டெடுத்து உலகுக்கு அறிவித்தபின் அவற்றை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. அதனால் அவற்றை ஒத்துக்கொண்டார்.

அகழ்ந்தெடுக்கப்பட்ட கூட்டுப் புதைகுழிகளுக்கு, புது அர்த்தங்களைக் கற்பித்தார். புதைக்கப்பட்டிருப்பவையெல்லாம் தீவிரவாதிகளின் பிணங்கள் என்றார். இப்போது ஊடகங்கள் இவர் சொல்வதெல்லாம் பொய், அந்தக் கூட்டுப் புதைகுழிகளில் புதைக்கப்பட்டிருப்பவர்கள் அப்பாவி முஸ்லிம்கள், அவற்றில் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என முஸ்லிம் சமுதாயத்தின் அனைத்து தரப்பாரும் உண்டு என்பதை நிரூபித்துள்ளன.

மியான்மரின் ஆட்சித் தலைவர் ஆங் சான் சுஹி-இன் வரலாற்றுப் பின்னணியை வைகறை வெளிச்சம் டிசம்பர்-2017 இதழில் முழுமையாகத் தந்துள்ளோம். வாசகர்கள் அதனைப் படிக்கும் படி கேட்டுக் கொள்கிறோம்.

### மியான்மர் ஆட்சித் தலைவர் ஆங் சான் சுஹி-யும் பத்திரிகை சுதந்திரமும்

மேலே நாம் கோடிற்றுக் காட்டிய கூட்டுப் புதைகுழிகள், அதாவது முஸ்லிம்களைக் கொன்று கூட்டாகப் புதைத்தவர்கள் மியான்மரின் இராணுவமும், புத்த பிட்சுகளுமே!

இதனால் அவற்றை மறைப்பதை தன்னுடைய தலையாயக் கடமை எனக் கருதுகின்றார் அந்த நாட்டின் ஆட்சித் தலைவி ஆங் சான் சுஹி. அதனால் கூட்டுப் புதைகுழிகள் இல்லை என்றே வாதிக்கின்றார். ஆனால், அங்குள்ள கூட்டுப் புதைகுழிகளைக் கண்டெடுத்து உலகுக்கு அறிவித்துக் கொண்டிருப்பவர்கள், பத்திரிகையாளர்கள் தாம் இதனையும் நாம் மேலேக் குறிப்பிட்டோம்.

இதில் ரியூட்டர் என்ற செய்தி நிறுவனமும்

அசோசியேடெட் பிரஸ் என்ற செய்தி நிறுவனமும் ஆற்றிய பணி அலாதி.

இப்போது இந்த ரியூட்டர்கள் செய்தி நிறுவனத்தைச் சார்ந்த இரண்டு பத்திரிகையாளர் களை கைது செய்திருக்கின்றார்கள். மியான்மர் இராணுவத்தினர், அவர்களின் பெயர்கள் வாலோனி Wa Lone (31), கி சோ ஊ Kyaw Soe oo (27) இவர்கள் இருவரும் இரகசிய ஆவணங் களைக் கடத்தியதாகவும் அரசு இரகசிய பாது காப்பு சட்டத்தை மீறியதாகவும் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

ஆனால் இருவரும் தங்கள் செய்திக் கட்டு ரைகளை எழுதிட பயன்படுத்திய தகவல்கள் இரகசியமானவை அல்ல. அவை கூட்டுப் புதை குழிகளாய் உலகெங்கும் பவனிவரும் ஆவணங் கள்தாம். எஞ்சியவை எல்லாம் கம்யூட்டர்களி டம் கிடைப்பவைதான்.

இதனை விளக்கிச் சொன்னபிறகும் அத்தாட்சிகளுடன் நிரூபித்த பின்பும் இந்த இரண்டு பத்திரிகையாளர்களுக்கும் பிணைகூட கிடைக்கவில்லை.

**பத்திரிகையாளர்கள் கண்டுபிடித்த சதி:**

ஆகஸ்ட் 25, 2017 முதல் ரோகிங்யா முஸ்லிம்களைக் குறித்து பல இனப்படுகொலை கள் நடத்தப்பட்டன. உலக மக்கள் அனைவரும் இந்தப் படுகொலைகள் தாமாகத் தோன்றியவை என்றே எண்ணினார்கள்.

இந்தப் படுகொலைகள் ஏன் நடந்தன என்பதற்கு மியான்மர் அரசு ஒரு காரணத்தைச் சொன்னது. இதையே இன்றளவும் உலக மக்கள் அனைவரும் நம்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

அரசு சொன்ன அந்தக் காரணம், மியான் மரில் சில முஸ்லிம் தீவிரவாதிகள் முதலில் தாக்குதலை நடத்தினார்கள், அதற்குப் பதிலடி யாகவே இந்தக் கலவரங்கள் நடந்தன என்பதே!

உண்மை அதுவல்ல, ஏற்கெனவே மியான்மர் இராணுவத்தினர் ரைக்கான் பகுதியில் வாழும் ரோகிங்யா முஸ்லிம்களைக் கூட்டாகக் கொலை செய்திருக்கின்றார்கள். கூட்டுப் புதைகுழிகள் என்பவை நமது கஷ்மீரை வஞ்சிக்கும் அளவுக்கு அல்லது கஷ்மீரின் அளவுக்கு பல்கிப் பெருகி இருக்கின்றன.

இப்படிக் கூட்டாகக் கொலை செய்வதற்குக் காரணம், ரக்கையின் பகுதியிலிருந்து முற்றாகத் துடைத் தெறிந்துவிட்டு, அந்த இடத்தில் பௌவுத்தர்களை குடியமர்த்த வேண்டும் என்பதே இலக்கு. இதில் சீனாவும் பெரிய அளவில் உதவி செய்கின்றது.

இப்படி அவர்கள் உருவாக்கிய கூட்டுப் புதைகுழிகளை யாருக்கும் தெரியாமல் மறைத்து வைத்திருந்தார்கள். அதை பல்வேறு உத்திகளின் வழியாக ஊடகங்கள் தெரிந்துகொண்டன. அவற்றை வெளிப்படுத்தின. (இவையெல்லாம் ஆகஸ்ட்-25, 2017 தாக்குதலுக்கு முன்னர் நடந்தவை) இனியும் மறைத்து வைத்திட இயலாது என்ற நிலை வந்தபோது முஸ்லிம் தீவிரவாதம் என்ற புரளியைக் கிளப்பி பழைய கொலைகளை மறைக்கவும் புதிய கொலை களைச் செய்யவும் திட்டமிட்டே ஆகஸ்ட் -25, 2017 அன்று இனப்படுகொலை நடத்தினார்கள். இவற்றையெல்லாம், அம்பலப்படுத்திய பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

ஆகஸ்ட்-25, 2017 முன்னரே ஐக்கிய நாடுகள் சபையின் கிளை அமைப்பான World Food Programe (WFP) தயார் செய்த குழந்தை கொலைகள் பற்றிய அறிக்கையை மியான்மர் அரசு வெளியிட வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டதைக் குறிப்பிட்டிருந்தோம். (பார்க்க வைகறை வெளிச்சம், டிசம்பர்-2017)

அதேபோல் ரோகிங்யா முஸ்லிம் பெண்கள் கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப்படுகின் றார்கள். மியான்மர் இராணுவம் கற்பழிப்பதை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துகின்றது என்பதை அறிந்து, ஓர் கள ஆய்வுக்கு மியான்மர் வர தயாராக இருந்தது. (UK) யூனைடெட் கிங்டம் என்ற ஆங்கில நாடு, அவர்களையும் தடுத்து வந்தது. மியான்மர் அரசு (இதையும் வைகறை வெளிச்சம் டிசம்பர்-2017 இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

ஆக பல படுகொலைகள், கற்பழிப்புகள், கூட்டுப் புதைகுழிகள், இவற்றை மறைக்க மியான்மர் இராணுவத்தின் திட்டமிட்ட சதியே ஆகஸ்ட்-25, 2017 கலவரங்கள்.

(Source : 1) The Hindu Eng. 2/2/2018, 2) Subrang Communications News Letter)

# முஸ்லிம்களைக் கொலை செய்யும் பௌவுத்த பெண்கள்



மியான்மர் (எ) பர்மாவில் நிலவும் அரசியல் சூழ்நிலைகளைப் பற்றி வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கு நிரம்பவே சொல்லி இருக்கின் றோம். மியான்மரின் மொத்த வரலாற்றையும் வைகறை வெளிச்சம் முந்தைய இதழில் தந்திருக் கின்றோம்.

இப்போது இங்கே தேவையான ஒரு விஷயத்தை மட்டுமே உங்களுக்குச் சொல்லு கின்றோம்.

அது, மியான்மர் என்ற பர்மா இராணுவ ஆட்சியிலிருந்து ஜனநாயக முறைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது. அதன் ஒரு பகுதியாக 2015-இல் நடந்த தேர்தலில் தான், இப்போது ஆட்சியில் அமர்ந்திருக்கும் ஆங் சான் சூஹி தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் இராணுவம் முழுமையாக இவரிடம் முழுமையாக எல்லா அதிகாரத்தையும் ஒப்படைக்கவில்லை. உள் நாட்டுப் பாதுகாப்பு போன்ற முக்கிய பதவி களை இராணுவமே கையில் வைத்திருக்கின்றது.

**நிவாரணம் வழங்கும், நிவாரணங்களை நம்பியே**

ஆட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங் சான் சூஹி-ஐ பிரதமர் என்றோ, குடியரசு தலைவர் என்றோ அழைப்பதில்லை. மாறாக ஆட்சியில் பங்காளி என பொருள்படும் (கவுன்ஸ்டலர்) என்றே அழைக்கின்றார்கள்.

**பௌவுத்த தேசியம்**

இந்நிலையில் பௌவுத்த தேசியம் என் றொன்றை பவுத்தர்கள் வளர்த்து வருகின்றார்கள். முழுமையாக இராணுவ ஆட்சி அகற்றப் படும்போது, ஆட்சி தங்கள் கைகளில் இருந்திட வேண்டும் என விரும்புகின்றார்கள். இதற்கு பௌவுத்த தேசிய இயக்கம் என்று பெயர், "Bhuddist National Movement" என்று பெயர்.

இந்த இயக்கத்தில் பெண்கள் அதிகமாக ஆர்வம் காட்டி வருகின்றார்கள்.

இந்த இயக்கத்தின் வளர்சிக்கு முஸ்லிம் களையே எதிரிகளாகக் காட்டி வருகின்றார்கள்.

இந்த இயக்கம், நம் நாட்டிலுள்ள ஆர். எஸ்.எஸ். மற்றும் சங்கப்பரிவார அமைப்புகள் இவற்றிற்கு சற்றும் குறைந்ததல்ல.

இந்த அமைப்பைச் சார்ந்த பெண்களின் செயல்பாடுகளைப் பொறுத்தவரை, அவை நம் நாட்டிலுள்ள துர்கா வாகினி போன்ற

அமைப்புகளைவிடக் கொடுமையானது.

ரைக்கைன் பகுதியில் வாழும் முஸ்லிம்கள் மீது நடக்கும் தாக்குதல்கள் இந்த அமைப்பு களால் நன்கு திட்டமிடப்பட்டு இராணுவத்தின் உதவியுடன் நடத்தப்படுவதாகும்.

இந்தத் தாக்குதல்கள் நீண்ட நாட்களாகவே நடந்து வருகின்றன. ஒரு கட்டத்தில் (2012 ஆம் ஆண்டில்) ரோகிங்யா முஸ்லிம்கள் 1,29,000 ஒரு லட்சத்து இருபத்து ஒன்பதாயிரம் பேர், மியான்மரின் மேற்கு பகுதியில் அகதிகள் முகாமிலிருந்தார்கள்.

அதாவது தங்கள் சொந்த நாட்டிலேயே அகதிகள் முகாமிலிருந்தார்கள். அவர்கள் அகதிகள் முகாமிலிருந்தார்கள் என்பதை விட சிறையிலிருந்தார்கள் என்பதே உண்மை. சிறை வைத்திருந்தவர்கள் பௌவுத்த மத தீவிர வாதிகள்.

அவர்கள் வெளியே சென்று வேலை செய்ய அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் இயல்பாகவே கடினமாக உழைப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அகதிகள் முகாமிலிருந்த அவர்களுக்கு உணவு மியான்மரில் இருந்த அரசு தரவில்லை. மாறாக, உலகிலுள்ள நிவாரணம் வழங்கும் நிவாரணங்களை நம்பியே வாழ்ந்து கொண்டி ருந்தார்கள். அவர்கள் தங்கள் சொந்த நாட்டி லேயே, அகதிகள் முகாமிலிருந்து வெளியே செல்ல வேண்டும் என்றால் அனுமதி சீட்டைப் பெற்றே செல்ல வேண்டும். இந்த அனுமதிச் சீட்டு நோய்வாய்ப்பட்டு மருத்துவமனைக்குச் செல்லும்போது மட்டுமே வழங்கப்பட்டது. அதுவும் நோய்வாய்ப்பட்டவர் ரொம்பவும் முடியாமல் சீரியஸாக இருந்தால் மட்டுமே வழங்கப்பட்டது. இப்படி அந்த முஸ்லிம்கள், அகதிகள் முகாம்களிலிருந்து செல்ல முடியாமல் ஆக்கியது பௌவுத்த தேசிய இயக்கத்தைச் சார்ந்த பெண்கள் தொடர்ந்து நடத்திய ஆர்ப்பாட்டங்கள்.

அதேபோல் வெளிநாட்டிலிருந்து வந்த நிவாரணப் பொருள்கள் அகதிகள் முகாம்களைச் சென்றடைந்துவிடாமல் தொடர்ந்து சாலை மறியல், ஆர்ப்பாட்டங்கள் இவற்றை நடத்திய தும், பௌவுத்த இயக்கத்தைச் சார்ந்த பெண்கள்.

(Source India, Bhuddist National Movement Publishde on 1st Feb 2018)

**கர்ப்பிணிப் பெண்களுக்கும் தடை**

ரோகிங்யா கர்ப்பிணி பெண்கள் மருத்துவ மனைக்குச் சென்றிட தடையாக இருந்தவர்களும் இந்த பௌவுத்த தேசிய இயக்கத்தைச் சார்ந்த பெண்களே!

ஐக்கிய நாடுகளின் நிவாரணக் குழுவைச் சார்ந்த ஒரு நிவாரண பணியாள் இந்தக் கள ஆய்வார்களிடம் இப்படிச் சொன்னார்.

“நான் உலகின் மிகவும் சிக்கலான பல பகுதிகளில் பணியாற்றி இருக்கின்றேன். ஆனால், மியான்மர்-இல் இருப்பதைப் போன்ற தொரு கீழான சூழ்நிலையைச் சந்தித்ததே இல்லை” “Sabrang India, 1st January 2018

**ARAKAN WOMEN’S NET WORK : அராக்கன் பெண்களின் இணையம்**

அகதிகள் முகாம்களில் அல்லலுறும் மக்களுக்கு - அதாவது ரக்கைன் பகுதியில் வாழ்ந்த ரோகிங்யா - முஸ்லிம்களுக்குக் கல்வி யும், சுகாதார வசதிகள், சுத்தமாக அவர்களின் முகாம்களை வைத்துக் கொள்வதற்கான வசதிகள், இவற்றையெல்லாம் ரோகிங்காய முஸ்லிம்களுக்குத் தந்துவிடாமல் தடுத்துக் கொண்டிருப்பது பௌவுத்த பெண்களின் அமைப்பு. அதன் பெயர் அராக்கன் பெண்களின் இணையம்.

இந்த இணையம் - அமைப்பு, அகதிகள் முகாம்களில் செய்து தரப்படும் அடிப்படை வசதிகளைக் கூட தடுத்து பல போராட்டங்களை நடத்தியுள்ளது.

பல நேரங்களில், மியான்மர் முழுவதும் சாலை மறியல், போராட்டங்களை நடத்தி அகதிகளுக்கு நாட்டையே ஸ்தம்பித்துப் போகச் செய்துள்ளது இந்தப் பெண்கள் அமைப்பு.

இப்படி அவர்கள் முகாம்களில் கூட அந்த மக்களை வாழ்ந்திட விடவில்லை. இந்தப் பெண்கள் அமைப்புகள். அவர்கள் ரோகிங்யா முஸ்லிம்களைப் பற்றிய கள ஆய்வு ஒன்றை நடத்திக் கொண்டிருந்த சர்வதேச பெண்கள் குழு ஒன்று ஏன் இப்படிச் செய்கின்றீர்கள் எனக் கேட்டபோது, இந்த முஸ்லிம்களுக்குச் செய்யப்

படும் எந்த உதவியும் "Simply Unacceptable" பொறுத்துக் கொள்ள இயலாது அவ்வளவுதான் எனத் திமிராகப் பதில் சொல்லி இருக்கின்றார்கள். (Source : Buddist National Movement, Sabrang, India)

இதே அமைப்பைச் சார்ந்த இன்னொரு பெண் இப்படிப் பதில் சொல்லி இருக்கின்றார்கள்.

"They have food, they have Shelter to live... We can't accept these kinds of excess things for them.

அதாவது, அவர்களுக்கு உணவு கிடைக்கின் றது. தங்குவதற்கு தலைக்கு மேலே ஒரு கூரைக் கிடைக்கின்றது. அங்கே அவர்களுக்கு உயிருட னிருக்கும் அவகாசம் கிடைக்கின்றது. இது போன்ற அதிக வசதிகளை எங்களால் ஒத்துக் கொள்ள இயலாது. (ஆதாரம் : Sabrang India) : Buddist Nationalist Movement

இதில் மிகப்பெரிய ஆபத்து என்னவெனில் இந்த புதிய பத்மிய புத்த தேசியத் (தீவிரவாத இயக்கம், மியான்மரில் அங்கிங்கெனாதபடி எங்கும் பரவி வருகின்றது.)

**முஸ்லிம்களை வெறுக்க வளர்த்த சித்தாந்தங்கள்**

இவர்கள் இந்த பர்மிய தேசிய (தீவிரவாத) இயக்கம், மக்களிடையே ஓர் சித்தாந்தத்தைப் பரப்பி வருகின்றது. அது "முஸ்லிம்களால் ஏற்படும் உள்நாட்டு, வெளிநாட்டுப் ஆபத்துகள்" என்பதை மையமாகக் கொண்டது.

முஸ்லிம்களுக்கெதிராக மக்களிடையே பீதியைக் கிளப்பிட இந்த பர்மிய புத்த தேசிய (தீவிரவாத) இயக்கத்தினர் (At the gross Roots) இன்னொரு இமாலயப் பொய்யையும் பரப்பி வருகின்றார்கள்.

அது, "புத்தர்களின் கடைசிப் புகலிடமாகப் பர்மாதான் இருந்து வருகின்றது. அதையும் முஸ்லிம்கள் தட்டிச் சென்று விடுவார்கள் போலிருக்கின்றது. ஆகவே முஸ்லிம்களைக் கொன்றொழித்தால்தான், பௌவுத்தத்தையும், பர்மாவையும் காப்பாற்றிட முடியும்" என்பதே அந்த இமாலயப் பொய்.

இதனை இமாலயப் பொய் என ஏன் சொல்லுகின்றோம் என்றால் மியான்மரின் மொத்த தொகை ஐந்து கோடியே நாற்பது லட்சம். இதில் 5 சதவிகிதம் மட்டுமே முஸ்லிம் கள். அதாவது 27 லட்சம் பேர் முஸ்லிம்கள்தாம் வாழுகின்றார்கள். இந்த ஐந்து சதவிகித்தனர் மீதமுள்ள 95 சதவிகிதத்தினரை விழுங்கி விடுவார்கள் என்பது ஓர் இமாலயப் பொய் என்பதுதான் உண்மை.

ஆனால் இவர்களின் இடைவிடாப்



பிரச்சாரம் மக்களைப் பெருவாரியாக நம்பிடச் செய்துள்ளன.

தங்களது பொய்களை மக்கள் நம்பிடச் செய்திட, இவர்கள் இன்னொரு தந்திரத்தைக் கையாண்டு வருகின்றார்கள். அது மியான்மரின் பக்கத்து நாடாம் பங்களாதேஷிலிருந்து இஸ்லாம் இங்கே வந்து புகுந்துவிடும் என்பதுதான். இதனால் "ரக்கைன்" மாநிலத்தை அதாவது ரோகிங்யா முஸ்லிம்கள் அதிகமாக வாழும் ரைக்கையின் மாநிலத்தை இஸ்லாத்தின் மேற்கு வாயில் (Wetern Gate of Islam) என அழைக்கின்றார்கள்.

தொடக்கக் காலத்தில் பங்களாதேஷ் நாடு அகதிகளாக வந்த ரோகிங்யா முஸ்லிம்களை ஏற்றுக் கொள்ளவில்லை. இப்போது ஆகஸ்ட்-25, 2017-இல் நடந்த சுத்திகரிப்பின்போது துருக்கியின் குடியரசு தலைவர் எர்துக்கான் அவர்கள் தலையிட்ட பின்னரே ரோகிங்யா முஸ்லிம்களை அகதிகள் முகாம்களில் அனுமதிக்கின்றார்கள்.

ஆக, பங்களாதேஷிலிருந்து இஸ்லாம், இங்கே வந்து பௌத்ததத்தை அழித்துவிடும் என்பது பொய்யே!

ஆனால் புத்தமத போதகர்கள் தொடர்ந்து ஒரு பெரும்போரை நடத்திக் கொண்டிருக் கின்றார்கள். அதில் "போர் காலங்களில் பௌ வுத்தர்கள் அல்லாதவர்கள் கொலை செய்வது அனுமதிக்கப்பட்டதே எனச் சொல்லி முஸ்லிம் களைக் கொலை செய்து கொண்டிருக்கின்றார்க்ள. காரணம், பௌவுத்தர்கள் அல்லாதவர்கள் முழுமையான மனிதப் பிறவிகள் அல்ல எனப் பிரச்சாரம் செய்கின்றார்கள்" (Source@cjwerlaman-Nov-2, 2017

### மா.பா.தா-ஸ் Ma Ba Tha's என்ற குழுமம்

இந்த அமைப்பை ஆங்கிலத்தில் இனம், மதம் இவற்றை பாதுகாப்பதற்கான குழுமம் (The Association for The protection of Race and Religion) இந்துக் குழுமம் 2013 ஆம் ஆண்டு முறையாக அமைக்கப்பட்டது.

இந்த அமைப்பு பல்வேறு சமுதாயப் பணிகளின் வழி மக்களைச் சென்றடைகின்றன. அந்த மக்களிடம் முஸ்லிம்களை அழிப்பதன் அவசியத்தைப் பிரச்சாரம் செய்கின்றன.

இந்த அமைப்பில் பெண்கள் தங்களை அதிகமாக இணைத்துக்கொண்டு அதீதமான ஈடுபாடுகளுடன் பணியாற்றி வருகின்றார்கள்.

இவர்கள் மியான்மர் அரசுக்குத் தந்த அழுத்தங்களின் அடிப்படையில், Race and Relegious Law என்றொரு சட்டத்தை இயற்றி யுள்ளது. 2015 ஆம் ஆண்டில் இயற்றப்பெற்ற இந்தச் சட்டம், முஸ்லிம் பெண்களை மைய மாகக் கொண்டது. இந்தச் சட்டம் முஸ்லிம் பெண்களின் திருமண வயது, குழந்தைகளைப் பெறுவது அனைத்தும் அரசின் அனுமதியோடு தான் நடக்க வேண்டும் என்கிறது.

அரசிடமிருந்து திருமணத் தகுதி சான்றிதழ் ஒன்றை பெற்ற பிறகே அவர்கள் திருமணம், செய்து கொள்ள முடியும்.

அதேபோல் பௌவுத்தர்கள் அல்லாதவர் களை பௌவுத்தப் பெண்கள், திருமணம்செய்து கொள்வதாக இருந்தால் அதற்கான அனுமதியை அரசிடம் பெற்ற பின்பே திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்கின்றது.

அந்த ஆண்மகனை புத்தமதத்திற்கு மாற்றய பின்பே திருமணம், செய்துகொள்ள முடியும் என இந்தச் சட்டம் கூறுகின்றது.

இந்த மா.பெ.தாஸ் குழுமத்திலுள்ள பெண்கள் தங்கள் ஓய்வு நேரத்தை முதியோர் கல்வி பாலர் பாடம் எனச் செலவிடுகின்றனர். இங்கெல்லாம் முஸ்லிம்களை வெறுக்கக் கற்றுக் கொடுக்கின்றார்கள்.

மியான்மரில் பல நூறு கிராமங்களில் இந்த அமைப்பினர் நடத்தும் கல்விக் கூடங்களே கல்வி பெற இருக்கும் ஒரே வாய்ப்பு. இந்தக் கல்வி கூடங்களையும் பெண்களே நடத்துகின் றார்கள்.

இந்த அமைப்பை ஆய்வு செய்தவர்கள் இது ஐரோப்பாவிலுள்ள White Supremacist என்ற வெள்ளையர்களே உயர்ந்தவர் என்ற அமைப் பையும் இந்தியாவிலிருக்கும் "Hindu Nationalist" இந்து தேசிய அமைப்பையும் போன்ற கொலைக்கார அமைப்பு என்கின்றார்கள்.

Source : Sabarang India, Feb, 2018

\- MGM

# டிரம்பின் ட்வீட்டுக்கு பாகிஸ்தான் பதில்



**தான் அதிபர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டது முதல் சர்ச்சையான கருத்துக்களையே கூறி ஊடகங்களை தன் பக்கம் திருப்பிடுவதில் வல்லவர் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப். முஸ்லிம் நாடுகள் மீதான தடை, ஜெருசலத்தை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்தது, இவற்றை தொடர்ந்து ஆங்கில புத்தாண்டு அன்று அதாவது 2018 ஜனவரி 1 ஆம் தேதி பாகிஸ்தான் பற்றிய தனது கருத்தை டிவிட்டரில் பதிவு செய்தது, ஆக அது அனைத்தும் கலவரம். பாகிஸ்தான் பற்றிய தனது கருத்தில்.**

*அமெரிக்கா கடந்த 15 வருடங்களாக முட்டாள் தனமாக பாகிஸ்தானுக்கு 33 மில்லியன் டாலர்களுக்கு மேல் வழங்கி வந்துள்ளது, ஆனால் அவர்களோ பொய்களையும் புரட்டுகளையும் தவிர வேறு எதையும் நமக்கு தரவில்லை. நமது தலைவர்களை முட்டாள்கள் என எண்ணிக்கொண்டிருக்கின்றார்கள் நாம் ஆப்கானிஸ்தானில் தேடும் தீவிரவாதிகளுக்கு அவர்கள் அடைக்கலம் அளித்து வருகிறார்கள் இனி உதவிகள் ஏதும் இல்லை என்று கூறினார்.*


Donald J. Trump
@realDonaldTrump
Following

The United States has foolishly given Pakistan more than 33 billion dollars in aid over the last 15 years, and they have given us nothing but lies & deceit, thinking of our leaders as fools. They give safe haven to the terrorists we hunt in Afghanistan, with little help. No more!

*டிரம்பின் கருத்து பாகிஸ்தானில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது, இதற்கு பதிலளித்த பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் காஜா ஆசிப்*

"You ask what we've done?... From our bases you carried out 57,800 attacks on Afghanistan... thousands of our civilians and soldiers became victims of the war initiated by you,"

நாங்கள் என்ன செய்தோம் என்று நீங்கள் கேட்கின்றீர்கள்? எங்களுடைய ராணுவ தளத்திலிருந்து தான் நீங்கள் ஆப்கானிஸ்தானின் மீது 57,800 முறை தாக்குதல்களை நடத்தியிருக்கின்றீர்கள் நீங்கள் தொடங்கிய யுத்தத்தில் எங்களது ஆயிரக்கணக்கான ராணுவ வீர்களும் பொதுமக்களும் இரையாகியிருக்கின்றனர்

அதாவது அமெரிக்க அதிபர் டிரம்பிற்கு பதிலளிக்கும் விதமாக தனது முதல் பதிவில் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் ஆப்கானிஸ்தான் மக்களுக்கு செய்த அநியாயங்களையும் அமெரிக்காவின் அபிலாசைகளுக்காக தனது சொந்த நாட்டு மக்களுக்கு செய்த துரோகத்தையும் அம்பலப்படுத்தியுள்ளனர். மேலும் தனது ஆவேசமான தொடர்பதிவுகளில்

“Our forces are fighting an unusual war, there is an unending saga of sacrifices. Now, history teaches us not to blindly trust the US. We are feeling sorry they are not happy, but we will not compromise on our dignity anymore,” said

"எங்களின் படைகள் வழக்கத்திற்கு மாறான ஒரு யுத்தத்தை தொடுத்து வருகிறார்கள் அது முடிவுறா தியாகங்களின் வீரக்காவியம் இப்போது வரலாறு கண்ணை மூடிக்கொண்டு அமெரிக்காவை நம்பிடக்கூடாது என்பதை எங்களுக்கு கற்பித்துள்ளது, நாங்கள் வருந்துகிறோம். அவர்கள் மகிழ்ச்சியாக இல்லை. ஆனால் எங்களுடைய கண்ணியத்தில் நாங்கள் ஒரு போதும் சமரசம் செய்யமாட்டோம்."

பாகிஸ்தான் அமைச்சர் ஆசிப் தனது தொடர்ச்சியான டிவீட்களில் நியூயார்க்கில் 9/11 தீவிரவாத தாக்குதல் நிகழ்ந்தபோது பாகிஸ்தானில் பொறுப்பிலிருந்த முஷரஃபை விமர்சித்தார் .

“A ruler surrendered in a single phone call, our country, we went through the worst bloodbath”

"ஓர் ஆட்சியாளர் ஒரே ஒரு போன் காலில் சரணடைந்துவிட்டார் அதனால் எங்கள் நாடும் நாட்டு மக்களும் மிக மோசமான ரத்தக்களரிக்கு ஆட்பட்டோம்" என்றுராணுவ சர்வாதிகாரி முஷரப்பை பற்றி கூறினார்

டிரம்ப் தனது முதல் பதிவில் பாகிஸ்தான் தலைவர்கள் நமது தலைவர்களை முட்டாள்கள் என எண்ணிக்கொண்டிருக்கின்றார்கள் என்று கூறியதற்கு பதிலளிக்கும் விதமாக ஆசிப் குறிப்பிடும் போது Asif implied that if anyone was a fool it was Pakistan for getting involved in the US’s war

"யாரேனும் முட்டாளாக இருக்கமுடியும் என்றால் அது அமெரிக்கா தொடுத்த யுத்தத்தில் தன்னை உட்படுத்திக்கொண்ட பாகிஸ்தானாகத் தான் இருக்க முடியும்" என்றார்

“We will let the world know the truth... (the) difference between facts & fiction”

“உலகம் உண்மையை புரிந்துக்கொள்ளட்டும் உண்மைக்கும் கட்டுக் கதைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை தெரிந்துக் கொள்ளட்டும்” என்று கூறிவிட்டு ஒன்றரை நாள் கழித்து தான் கூறுவது உண்மை என்பதை விளக்கும் விதமாக இப்படிவிரிவாக கூறினார்

“We stood by you, considered your enemy as our own. We filled Guantanamo Bay,” said Asif, talking about the detention camp which was opened on January 11, 2002.


காஜாஆசிப்

“நாங்கள் உங்களோடு தான் நின்றோம் உங்களின் எதிரியை எங்களின் சொந்த எதிரியாக கருதினோம் நாங்களே கவுண்டனமோ சிறையை நிரப்பினோம்” அதாவது ஆள் பிடித்துத் தந்துள்ளோம் என்று ஆசிப் 2002 ஜனவரி11ல் அமெரிக்காவால் கியூபாவில் திறக்கப்பட்ட சித்ரவதை கூடத்தை பற்றி பேசுகிறார். இந்த கவுண்டனமோ சிறையில் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த ஏராளமான முஸ்லிம்கள் கொடூரமான சித்ரவதைகளை அனுபவித்து வருகின்றனர் அதற்கு அதில் அடைப்பட்டு சித்ரவதைகளை அனுபவித்து மன நோயாளியாக மாற்றப்பட்ட டாக்டர்ஆபியா சித்திக்கா ஓர் எடுத்துக்காட்டு.

பல மாதங்களுக்கு முன்பே அவர் இறந்து விட்டதாக தகவல்கள் வெளியானது. ஆனால் அமெரிக்கா அதை மறுத்துவிட்டது. கவுண்டனமோ பற்றியும் அமெரிக்காவின் இதர சித்ர வதைகூடங்களைப் பற்றியும் நமது இதழில்"சி ஐ ஏ வின் சித்ரவதை கூடங்கள் "என்ற தலைப் பில் தொடராக வெளியிட்டிருக்கின்றோம் கூடுதல் தகவல்களுக்கு வாசகர்கள் அதை படிக்க வேண்டுகிறோம் .

As per a February 2017 report in The New York Times, Afghans were the largest group (29 percent) in Guantanamo, followed by Saudi Arabians (17 percent), Yemenis (15 percent) and Pakistanis (9 percent).

*2017 பிப்ரவரியில் நியூயார்க் டைம்ஸ் அளித்த அறிக்கையில் அதிகபட்சமாக 29 சதவீதம் ஆப்கானிஸ்தானை சார்ந்தவர்கள் தாம் கவுண்டனமோவில் அடைப்பட்டிருப்பவர்கள். அதற்கு அடுத்தப்படியாக சவுதி அரேபியாவை சார்ந்தவர்கள் 17 சதவீதம். யமன் நாட்டை சார்ந்தவர்கள் 15 சதவீதம். கடைசியாக பாகிஸ் தானை சார்ந்தவர்கள் 9 சதவீதம் என்கிறது*


பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

**கொடிய வட்டியில் இருந்து மீள!**

**தாங்கள் வங்கியில் அடகு வைத்திருக்கும் நகைகளை ஏலத்திற்கு செல்லாமல் மீட்டு நல்ல விலைக்கு விற்றுத் தரப்படும்.**

தொடர்புக்கு

**90955 40678**


ஆக இப்போது புரிந்துக்கொள்ளலாம் கவுண்டனமோ வெற்றைக் கிருஸ்தவ அமெரிக் காவின் மனமகிழ் மன்றம் இடம் என்பதை. அதாவது பல்வேறு நாடுகளை சேர்ந்த முஸ்லிம் களை ஓர் இடத்தில் அடைத்து சித்ரவதை செய்து மகிழ்கிறார்கள் நவீன சிலுவை யுத்தத்தை நடத்திக் கொண்டிருப்பவர்கள்.

இதை தான் பாகிஸ்தானின் வெளியுறவுத் துறை அமைச்சர் முன்னாள் அமெரிக்க அதிபர் புஷ் தலைமையில் நடந்த தீவிரவாதத்திற்கு எதிரான யுத்தத்தின் போது தீவிரவாதிகளையும் போர் குற்றவாளிகளையும் தேடுவதில் தனது நாடு உதவியதாக குறிப்பிடுகின்றார். தீவிரவாதி களை ஒழித்திடுவதற்கு ஒரு சர்வதேச ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது அதற்கு அனைத்து நாடுகளும் ஆதரவு அளித்தனர் என்றார்.

அமெரிக்காவின் அகராதியில் தீவிரவாதிகள் என்றவார்த்தைக்கு அர்த்தம் முஸ்லிம்கள் தான் என்பது ஏனோ அரியணையில் இருக்கும் இந்த மடையர்களுக்கு தெரியவில்லடி அமெரிக்கா விடம் பணம் வாங்கிக் கொண்டு, முஸ்லிம் இளைஞர்களை பிடித்துக் கொடுத்தவர்கள்தாம் பாகிஸ்தானைச் சார்ந்த ஈனப்பிரவிகள்.

Asif said not only did Pakistan find terrorists for the US, it also opened itself up for operatives of the now disgraced Blackwater, a firm of private military contractors.

பாகிஸ்தான் அமெரிக்காவிற்காக தீவிர வாதிகளை மட்டும் தேடவில்லை மாறாக கேடுகெட்ட பிளாக்வாட்டர் எனும் இராணுவ கூலியாட்களுக்கு (அடியாட்கள்) தனது அனைத்து வாசல்களையும் திறந்தது.

"We issued tens of thousands of visas as a result of which the networks of Black Water spread across our country. And for the past four years, we have been cleaning up (their) rubbish," said Asif.

நாங்கள் இவர்களுக்கு பத்தாயிரக்கணக்கான விசாக்களை வழங்கினோம் அதன் விளைவாக இராணுவ கூலியாட்களின் வலைப்பின்னல் நாடு முழுவதும் பரவியது கடந்த நான்கு வருடங்களாக நாங்கள் இவர்களின் அடைசல் களை சுத்தம் செய்து வருகிறோம்.

ஆதாரம்: Times Of India, New Delhi 05.01.2018

- மு. இஸ்தியாஸ் அஹமது

> **"Kill then make sure whether he was the enemy"**

"கொலை செய் பிறகு அவன் எதிரியா இல்லையா என்பதை உறுதி செய்துக்கொள்'' என்பதே பிளாக்வாட்டரின் தாரக மந்திரம். பிளாக்வாட்டர் என்பது கொலை செய்யும் கூலிப்படை. இது ஒரு தனியார் நிறுவனம். இதை 1997-இல் நிறுவியவர்கள் அமெரிக்க முன்னாள் கப்பற்படை அதிகாரிகளான எரிக் பிரின்ஸ் அல் கிளார்க் என்ற இருவர்கள்தாம். தன்னுடைய நிறுவனம் தேசத்தின் பாதுகாப்பு மற்றும் சேவைகளை நோக்கமாக கொண்டது என்றே கூறி வந்தார் எரிக் பிரின்ஸ். பின்னர்அவரின் முகத்திரை மெல்ல மெல்ல கிழிந்து முதாளித்துவ முகம் தெள்ளத்தெளிவாக தெரிந்தது அதாவது தனியார் ராணுவ நிறுவனத்தின் வழி கொள்ளை லாபத்தை சம்பாதிப்பதே இவரின் பிரதான நோக்கம் அதற்காக எத்தனை கொலைகளை வேண்டுமானாலும் செய்வார்கள் என்பதை அமெரிக்காவின் பத்திரிக்கைகளே பதிவு செய்தன.

### யூ எஸ் எஸ் கோல் குண்டுவெடிப்பும் பிளாக்வாட்டரின் முதல் ஒப்பந்தமும்

பிளாக்வாட்டர் தொடங்கியதிலிருந்து மூன்று ஆண்டுகள் வரை அமெரிக்க அரசின் சார்பாக எந்த வேலைக்காகவும் உடன்படிக்கை செய்யப் படவில்லை. அக்டோபர் 12 2000-ஆம் ஆண்டு யமன் நாட்டிலுள்ள அடன் என்ற ஹார்பரில் அமெரிக்காவின் கப்பற்படைக்கு சொந்தமான (யூ.எஸ்.எஸ். கோல் (DDG-67) என்ற ஏவுகணை தாக்குதலை தடுத்திடும்போர் கப்பல்) தாக்கப் பட்டது.




BLACKWATER

# பிளாக் வாட்டர் பயங்கரவாதம்

இந்த குண்டு வெடிப்பு தாக்குதலில் 13 அமெரிக்க கப்பலோட்டிகள் பலியானார்கள். 39 பேர் காயமடைந்தனர். பொதுவாகவே அமெரிக்காவின் சுரண்டல்களையும் ஆக்கிரமிப்பையும் எதிர்ப்பவர்களுக்கு அமெரிக்கா தரும் பட்டம் "தீவிரவாதிகள்" என்பதுதான். எனவே இந்த தாக்குதலுக்கு அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை எதிர்க்கும் அல்கொய்தா என்ற அமைப்பு பொறுபேற்றதாக பொய் கூறப்பட்டது.

ஆனால் ஒரு அமெரிக்க நீதிபதி இந்த தாக்குதலுக்கு சூடான் எனும் முஸ்லிம் நாடு தான் காரணம் என்றதோடு சூடான் மக்களுக்கு சொந்தமான 13 மில்லியன் டாலர் மதிப்பிலான சொத்துகளை அமெரிக்கா முடக்கி வைத்திருந்தது. இந்த சொத்துக்கள் அனைத்தையும் பாதிக்கப்பட்ட அமெரிக்க அதிகாரிகளின் குடும்பங்களுக்கு வழங்க உத்தரவிட்டார். இந்த சம்பவத்திற்கு பிறகு தான் முதல் முதலில் அமெரிக்க அரசால் பிளாக்வாட்டரிடம் ஒப்பந்தம் செய்யப்பட்டது இதன் பின்னணியில் தான் அதன் முக்கிய பொறுப்பாளரான ஜேமி ஸ்மித் ஒரு லட்சத்திற்கும் மேற்ப்பட்ட கப்பலோட்டிகளை பயிற்று வித்தார்.

Source : en.wikipedia.org/wiki/Academi

## ஈராக் யுத்தமும் பிளாக்வாட்டரும்

2001 செப்டம்பர்-11 இரட்டை கோபுர தாக்குதலுக்குப் பின் War on Terror தீவிரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற பெயரிலே ஆப்கானிஸ்தானில் புகுந்து தனது அடாவடித்தனங்களை கட்டவழித்துவிட்டார் அப்போதைய அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்.

அதன் தொடர்ச்சியாக 2003-இல் ஈராக்கின் மீது போர் தொடுத்து சதாம் உசேனின் தலைமையிலான அரசை தூக்கி எறிந்தது அமெரிக்காவின் தலைமையிலான கூட்டுப்படை. இந்தப் பின்னணியில் அப்போதைய புஷ் தலைமையிலான அமெரிக்க அரசு 2003 ஆகஸ்ட் மாதத்தில் பிளாக்வாட்டரிடம் 21 மில்லியன் டாலர் மதிப்பிலான ஈராக் உடன்படிக்கையை செய்து கொண்டது. அதாவது அமெரிக்காவின் ஈராக் ஆக்கிரமிப் பிற்கு தலைமை தாங்கிய தளபதி பவுல் பிரீமர் என்பவருக்கு பாதுகாப்பு வழங்குவதுதான் அந்த உடன்படிக்கையின் சாராம்சம்.

ஆனால் அனைத்து அதிகாரங்களையும் தனது கையில் எடுத்துக்கொண்டு தான்தோன்றித்தனமாக செயல்பட்டார்கள் பிளாக்வாட்டர் படைகள். தூதரகப் பாதுகாப்பு, தலைமை அதிகாரிகளின் பாதுகாப்பு என்ற பெயரிலேயே இவர்கள் செய்த அநியா யங்கள் ஏராளம்.

பொதுமக்கள் கூடுகின்ற இடத்திலே குண்டுகளை வைப்பதும், அதன் பழியை முஸ்லிம்களின் மீது போடுவதும் இவர்களுக்கு கைவந்த கலை. பாதுகாப்பு அச்சுறுத்தல் என்ற கூப்பாடைப் போட்டு அப்பாவி மக்களைச் சுட்டுத் தள்ளுவதில் வல்லவர்கள் பிளாக்வாட்டர் கூலிப் படைகள்.

இப்படி இவர்கள் 2005 முதல் 2007 வரை இரண்டு ஆண்டுகளில் 195 துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதை அமெரிக்காவின் நாடாளுமன்றமான 'காங்கிரஸின்' அறிக்கை கூறுகிறது. இது அனைத்தும் அமெரிக்கா குறைத்துக் கூறும் தகவல்தான்.

"செப்டம்பர்-12 2005 முதல் ஒரு வாரத்திற்கு சராசரியாக 1.4 தாக்குதல்களை நடத்தியிருக்கின்றார்கள், அதில் பாதிக்கப்பட்டவர்கள் 16 ஈராக்கியர்கள் என்றும் இதில் 162 வழக்குகள் சொத்துக்களை சேதப்படுத்திய வழக்குகள் என்றும் கூறுகிறது" கேலிபோர்னியா டெமாக்ரெட் எனும் அமெரிக்கா வாரஇதழ். ஆனாலும் இந்த புள்ளி விவரத்தில் உயிர்ச் சேதங்களைப் பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை.

ஈராக் யுத்தத்தின் விமர்சகர் வேக்ஸ்மேன் குறிப்பிடும்போது மொத்தம் 196 சம்பவங்களில் 32 சம்பவங்களில்தான் பிளாக்வாட்டர் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர். மீதம் 163 சமயங்களில் ஏற்பட்ட சம்பவங்களில் பிளாக்வாட்டரின் பணியாளர்கள்தான் முதலில் தாக்கியுள்ளனர் என்கின்றார். அதாவது 84 சதவிகித சம்பவங்கள் பிளாக்வாட்டர் வேண்டுமென்றே மக்கள் மீது நடத்தியுள்ள துப்பாக்கிச் சூடுகள்.

## நிசார் சதுக்கப் படுகொலைகள்

எரிக் பிரின்சுக்கு சொந்தமான தனியார் ராணுவ நிறுவனமாக பிளாக்வாட்டர் எத்தனையோ படுகொலைகளை செய்திருந்தாலும்

அதில் பிரதானமாக பேசப்படுவது ஈராக் தலை நகர் பாக்தாத்தில் நிசார் சதுக்கத்தில் செப்டம்பர் 16, 2007-ல் செய்த படுகொலைகள் தான்.

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் மூன்று இடங்களில் குண்டுகளை நிரப்பிய கார்களை வெடிக்கச் செய்தனர் பிளாக்வாட்டர் குண்டர்கள். இதைத் தொடர்ந்து அமெரிக்க தூதரகப் பாதுகாப்பு என்ற பெயரில் மக்களை நோக்கி சுட ஆரம்பித்தனர், இவர்களின் இந்தக் கண்மூடித் தனமான தாக்குதலில் 17 பேர் பலியானார்கள், 20 பேர் படுகாயமடைந்து உயிருக்கு போராடிய நிலையிலேயே மருத்துவ மனையிலே அனுமதிக்கப்பட்டனர். இந்த படு கொலைகள் உலகம் முழுவதும் ஊடகங்களால் பேசப்பட்டது.

நிராயுதபாணிகளாக வீதியில் நடந்து செல்லும் மக்களை நோக்கி கண் மூடித்தனமாக சுடும் காட்சிகள் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த படுகொலை தொடர்பான வழக்கில் 2014-ல் ஸ்லெட்டன் என்ற பிளாக் வாட்டர் பணியாளரும் இன்னும் 3 பணியாளர் களும் அமெரிக்காவின் நீதிமன்றத்தால் ஆயுள் தண்டனை வழங்கி தண்டிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்ற போதே தனது நிறுவனத்தின் பெயரை எக்ஸ்-ஈ சர்வீசஸ் (Xe-Ser vices) என்று மாற்றினார். பிறகு சாமர்த்தியமாக சில தனியார் முதலாளி களிடம் விற்று விட்டார்.

காரணம் அப்போது பிளாக்வாட்டரை தடை செய்திட வேண்டுமென்று கோரிக்கைகள் வலுப்பெற்றன. ஆனாலும் தனது தனியார் ராணுவ சேவையை எரிக்பிரின்ஸ் நிறுத்திட வில்லை. Academi என்ற பெயரிலும் இன்னும் பல்வேறு நாடுகளில் வெவ்வேறு பெயர்களிலும் தொடர்கிறார் தனது சேவையை அமெரிக்கா வின் ஓர் சிலுவைப் போர் தளபதியாக.

Source : en.wikipedia.org/wiki/Nisour_Square_massacre

## தொடரும் சிலுவை யுத்தங்கள் போர்த்தளபதி எரிக் பிரின்ஸ்

உலகம் முழுவதும் ஈவிரக்கமின்றி முஸ்லிம் களை தனது கூலிப்படைகளின் வழி கொலை செய்து வருபவர்தான் எரிக் பிரின்ஸ். இவர் களின் படை செய்யும் கூட்டுக் கொலைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பிளாக் வாட்ரையோ அதன் நிறுவனர் எரிக் பிரின் ஸையோ பணத்திற்காக ராணுவ நடவடிக்கை யில் ஈடுபடும் ஒரு சராசரியான தனியார் பண முதலையாக பார்த்திட முடியாது. காரணம் 9/11 தாக்குதலுக்குப் பிறகு மூன்றாவது நாள் புஷ் கூறினார்.







"The Modern Crusade has Started" நவீன சிலுவை யுத்தங்கள் தொடங்கிவிட்டன என்றார். வரலாற்றில் முஸ்லிம்களை வேரோடும், வேரடி மண்ணோடும் ஒழித்திட வேண்டும் என்பதற்காக கிறிஸ்தவ உலகத்தால் தொடுக்கப்பட்ட யுத்தத்தின் பெயர்தான் சிலுவை யுத்தங்கள்.

எனவே சிலுவை யுத்தம் என்று புஷ் கூறியதற்கு பல நாடுகளிலிருந்தும் எதிர்ப்புகள் வந்தது. ஆகவே அதை War on Terror தீவிரவாதத்திற்கு எதிரான யுத்தம் என மாற்றிக் கூறினார்.

நவீன சிலுவை யுத்தத்தை தொடங்கிய ஜார்ஜ் புஷ்தான் எரிக் பிரின்ஸின் பிளாக்வாட்டருக்கு முதன் முதலில் அரசு சார்பாக ஒரு உடன்படிக்கையை செய்தார்.

பிறகு 2003-ல் அமெரிக்க அரசு சார்பாக பல்வேறு ஒப்பந்தங்களை பிளாக்வாட்டருக்குத் தந்தார். இதன்பின்தான் பிளாக்வாட்டார் என்ற கூலிப்படை படர்ந்து வளர்ந்து அதன் விழுதுகள் பல நாடுகளின் நிலத்தைத் தொட்டு நிற்கின்றது.

எனவே நவீன சிலுவை யுத்தத்தின் தளபதியாகவே எரிக் பிரின்ஸைப் பார்க்க வேண்டும் என்பது யூகத்தின் அடிப்படையில் அல்ல, மாறாக அமெரிக்காவின் விர்ஜினியா நீதிமன்றத்தில் பிளாக்வாட்டரின் முன்னாள் ஊழியர்கள் தாக்கல் செய்த அஃபிடவிட்டில் எரிக் பிரின்ஸ் முஸ்லிம்களுக்கு எதிரான சிலுவை யுத்தத்தையே தொடங்க விரும்புகிறார் என குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும் அதில் Mr Prince "views himself as a Christian crusader tasked with eliminating Muslims and the Islamic faith from the globe."

"பிரின்ஸ் தன்னை இஸ்லாமிய நம்பிக்கையையும் முஸ்லிம்களையும் உலகிலிருந்து அகற்றிடும் பணி கொடுக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவ சிலுவை யுத்த வீரனாகவேப் பார்க்கின்றார்" என்று ஆரம்பிக்கும் அஃபிடவிட் இப்படி தொடர்கின்றது...

To that end, Mr. Prince intentionally deployed to Iraq certain men who shared his vision of Christian supremacy, knowing and wanting these men to take every available opportunity to murder Iraqis. Many of these men used call signs based on the Knights of the Templar, the warriors who fought the Crusades.

Mr. Prince operated his companies in a manner that encouraged and rewarded the destruction of Iraqi life. For example, Mr. Prince's executives would openly speak about going over to Iraq to "lay Hajiis out on cardboard." Going to Iraq to shoot and kill Iraqis was viewed as a sport or game. Mr. Prince's employees openly and consistently used racist and derogatory terms for Iraqis and other Arabs, such as "ragheads" or "hajiis."

"இறுதிவரை, பிரின்ஸ் வேண்டுமென்றே ஈராக்கிற்கு தனது ஆட்களை அனுப்பி வைத்தார். பிரின்ஸின் கிறிஸ்தவ மேலாதிக்கப் பார்வையை அவரின் சில ஆட்களே பகிர்ந்து கொண்டனர். கிடைக்கின்ற ஒவ்வொரு வாய்ப்பையும் அறிந்து அதில் ஈராக்கியர்களை கொலை செய்திட வேண்டுமென்று விரும்பினார். அவரின் ஆட்களில் பலரும் சிலுவை யுத்தத்தில் சண்டையிட்ட 'டெம்ப்ளர்ஸ்' மற்றும் 'நைட்ஸ்' படையின் அடையாளக் குறிகளையே பயன்படுத்தினர்.

பிரின்ஸ் ஈராக்கியர்களின் வாழ்வை அழித்

திடுவதை ஊக்குவித்து வெகுமதி வழங்கும் பாங்கில்தான் தனது நிறுவனங்களை இயக்கி னார். உதாரணமாக, பிரின்ஸின் செயல் வீரர் கள் தாங்கள் ஈராக்கிற்கு சென்று "ஹாஜிகளை வெட்டி அட்டைப் பெட்டியில் போடுவோம் என்பதை வெளிப்படையாகவே பேசுவார்கள். ஈராக்கிற்கு செல்வதையும் ஈராக்கியர்களை கொல்வதையும் ஒரு விளையாட்டாகவே அவர் கள் பார்த்தார்கள்." பிரின்ஸின் ஊழியர்கள் தொடர்ந்து வெளிப்படையாகவே வெட்டிட வேண்டிய தலைகள், ஹாஜிகள் போன்ற தரக் குறைவான இனவெறி வார்த்தைகளை ஈராக் கியர்களுக்கும் மற்ற அரபுக்களுக்கும் பயன் படுத்தினர்"

Source : Economics, Newyork, August-6,2009,

https://www.globalresearch.ca/from-blackwater-to-xe-the-templar-crusade/16878

## 2009 பெஷாவர் குண்டு வெடிப்பும் பிளாக்வாட்டரும்

2001-இல் அமெரிக்கா தீவிரவாத்திற்கு எதிரான யுத்தம் என்று பிரகடனப்படுத்தியது முதல் பாகிஸ்தானில் குண்டுவெடிப்புகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய் தொடர்கிறது. குண்டு வெடிப்பு நடந்த அடுத்த நிமிடமே அல்கொய்தா, தஹ்ரிகி தாலிபான் போன்ற அமைப்புகள்தான் காரணம் அவர்களே தாங்கள்தான் காரணம் என்று மின்னஞ்சலின் மூலம் பொறுப்பேற்றுள்ளார்கள் என்று ஊடகங் களின் வழி பரப்புவார்கள்.

2009-இல் மட்டும் 20-க்கும் மேற்பட்ட குண்டுவெடிப்புகள் பாகிஸ்தானில் நடந்துள் ளது. அதில் மிகவும் குரூரமானது அக்டோபர்-28, 2009-ல் பெஷாவரில் நடந்த குண்டு வெடிப்பு தான். காரில் குண்டுகளை நிரப்பி பெஷாவரில் உள்ள மினா பஜாரில் வெடிக்கச் செய்தார்கள். இந்த சக்தி வாய்ந்த குண்டு வெடிப்பில் பெண்கள், குழந்தைகள் உட்பட 137 பேர் பலியானார்கள். 200-க்கும் மேற்பட்டோர் படு காயமடைந்தனர். இந்த சம்பவத்திலும் தனது பயங்கரவாதிகள் பல்லவியையே பாடியது பாகிஸ்தான் அரசு. ஆனால் இந்த குண்டு வெடிப்பை நிகழ்த்தியது பிளாக்வாட்டர் எனும் அமெரிக்கக் கூலிப்படைதான் என்பதை பாகிஸ் தானிலுள்ள நடுநிலையாளர்களும் இஸ்லாமிய அமைப்புகளும் அம்பலப்படுத்தி னார்கள்.

## ஜமாஅத்தே இஸ்லாமியின் கண்டனம்

பாகிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் என்று நடப்பவைகள் அனைத் தும் அமெரிக்காவின் ஏவலின் பெயரில்தான் நடக்கின்றன. அவை அனைத்தும் நிறுத்தப்பட வேண்டுமென்றார் ஜமாஅத் இஸ்லாமியின் பிராந்திய தலைவர் சிராஜுல் ஹக், மேலும்



அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"Now, this is sure , that all the blasts either carried faizal mosque or khaibar bazaar are carried out by Blackwater"

"இப்போது உறுதியாகிவிட்டது, அனைத்து குண்டுவெடிப்புகளும், அது பைசல் மஸ்ஜீதில் நடந்தாலும், கைபர் பஜாரில் நடந்தாலும் அது பிளாக்வாட்டாரால்தான் நடத்தப்படுகிறது" என்றார்.

## பெஷாவர் குண்டு வெடிப்புகளுக்கு காரணம், பிளாக்வாட்டர்தான் முஜாஹிதீன்கள் அறிக்கை

அமெரிக்காவும் பாகிஸ்தான் அரசும் அல்கொய்தா, தாலிபான் போன்ற எந்தெந்த அமைப்புகளையெல்லாம் குற்றம் சாட்டினார்களோ அத்தனை அமைப்புகளும் இந்த குண்டு வெடிப்புகளைச் செய்தது நாங்களல்ல. பிளாக் வாட்டர் எனும் அமெரிக்க கூலிப்படைதான். என்று வெளியிட்ட அறிக்கைகள் முன்னணி செய்தி நிறுவனங்களான CNN, BBC போன்ற நிறுவனங்களே பதிவு செய்தன.

ஆனாலும் முஜாஹிதீன்கள் இதுபோன்ற குண்டு வெடிப்பு சம்பவங்களில் தாங்கள் ஈடு படுவதில்லை. இதற்கு காரணம் அமெரிக்காவும் அதன் கூலிப்படையுமான பிளாக்வாட்டர் எனும் அமைப்புதான் என்றும் இந்த குண்டு வெடிப்புகளில் தங்களின் நிலைப்பாட்டைக் குறித்தும் விரிவாகக் கூறும் அந்த அறிக்கையை சுருக்கிக் இரண்டே வரியில் முடித்துவிட்டன இந்த செய்தி நிறுவனங்கள்.

எனவே அல்கொய்தா என்று கூறப்படும் அமைப்பின் தலைவர் முஸ்தபா அபூ அல்யஜித் என்பவர் அனைத்து முஜாஹிதீன்களின் சார்பிலும் வெளியிட்ட அறிக்கையை இங்கே வாசகர்களுக்கு தருகின்றோம்.

Mustafa Abu-Al-Yazid Blames Blackwater for Peshawar Bombings November 12, 2009

[Please note: Images may have been removed from this document. Page numbers have been added.]

"In the name of God, the Merciful, the Compassionate... Praise be to God. Peace and prayers be upon the messenger of God, his family, companions, and those who were his allies.

"To the entire nation of Islam and the Muslim people in Pakistan specifically

"May the peace, mercy, and blessings of God be upon you.

"Today I will talk to you about the criminal bombings in Peshawar in the last few days, which targeted Muslim markets. The victims of these bombings were innocent children, women, elderly, and men (may God have mercy on them). This is our position on these criminal events:

"First: We condemn these bombings in the Muslim markets and among people, as we and our Mujahidin brothers have indicated on several occasions. We are innocent of these bombings.

The mujahidin only do jihad for the cause of God in order to raise His word high, implement His laws, and aid our oppressed Muslim people; not to kill them (we seek refuge in God). Let all Muslims know that it is impossible for the mujahidin to do such low work. They went out on jihad for the cause of God in order to protect the religion, land, honor, and blood of Muslims, which is being shed and violated by the Crusaders and apostates.

"Second: The mujahidin only target the army, security forces of the apostate state, and intelligence (agencies) that are responsible for shedding the blood the weak in Suhat,

Waziristan, Bajur, Mahmund, Khaibar, Urkaza'i, and elsewhere. However, many agent media outlets ignore this and publicize the American propaganda in order to tarnish the reputation of the mujahidin.

"Third: The mujahidin choose their targets very carefully, which are very far from places frequented by the public, such as the Pakistani Army Command Center, military intelligence headquarters (ISI), and barracks for training special forces to fight terrorism.

"Fourth: We believe that such bombings are the work of the Crusaders, the enemies of God, and their allies in th e government and intelligence. It is part of the dirty war that they practice. How could that not be when they are the ones who mean harm to Muslims? They do not have any consideration for any sanctity and Muslim bloo d is worthless to them. Today, everyone knows that Blackwater and other criminal groups have violated Pakistan with support from this corrupt

and criminal government and its security agencies. They commit these ugly actions and blame them on the mujahidin through their media outlets in order to tarnish the image of the mujahidin and Muslims.

“These clear indicators demonstrate that these bombings are their doing:

“A. This policy has been used repeatedly in Iraq and Afghanistan, and now the despicable Americans are carrying it over to Pakistan. They have repeatedly stated that they are carrying over their experiences, as you have seen.




“B. These criminal bombings coincide with visits by American officials (may God bring them shame) to Pakistan. T his is so they can say in their press conferences that those responsible for these acts are terrorists, ‘whose hideouts we are shelling in the tribal regions,’ as they say. They claim that America’s objective is to help the Pakistani government and people to defeat them.

“C. Weapons and explosives with Blackwater elements and Western diplomats were indeed seized in Pakistan, and this was reported in the Pakistani press. This happened by accident, and the matter was quickly brought to a close. The truth is that what was covered up was greater. They (may God bring them shame) have plans to assassinate and kill mujahidin supporters and sympathizers, including honorable scholars, preachers, opinion leaders, writers, journalists, and others.

“D. These bombings are carried out with car bombs parked in the markets. Intelligence agencies around the world are infamous for using these tactics. How often have they done this in Iraq and elsewhere?

“Muslim brothers, those who are behind such crimes are also those who are shelling the villages, houses, and mosques of the Muslims in the tribal regions and Afghanistan, with bombs weighing tons.

“Lastly, we call on the Pakistani Muslim people and Muslims everywhere to be aware of the size of the conspiracy on Islam and that the enemy respects no boundaries - religious or humane - in achieving his aims. (We call on them to be aware) that in war, criminals have the opportunity to commit their crimes. This is sedition and heretical innovation (ibtida). So trust in God, and know that with patience comes victory. Know the truth and its people, and support them. We especially call on the honorable journalists, intellectuals, writers, and people in media to stand by the truth and be fair. We call on them to strive to expose this conspiracy. Otherwise,

Blackwater, the crusader forces, and the apostates will target them next if, God forbid, the mujahidin are defeated. For their mujahidin brothers are the first line of defense for them and their nation of Islam.

“God is the guardian of the believers. Praise be to God, Lord of all creation. There is no aggression save for on the oppressors. May the peace, mercy, and blessings of God be upon you.

Source : "Al-Sahab (Establishment) for Media Production "1430 (corresponding to 2009)"

*அளவற்ற அருளாளன் நிரகற்ற அன்புடையோன் இறைவனின் திருப்பெயரால் அவனுக்குகே புகழ் அனைத்தும், சாந்தியும் சமாதானமும் இறைவனின் தூதுரின் (ஸல்) மீதும் அவர்களின் குடும்பத்தார்கள் மீதும், தோழர்கள் மீதும் உண்டாவதாக*

*ஒட்டுமொத்த இஸ்லாமிய சமூகத்திற்கும் குறிப்பாக பாகிஸ்தானில் வாழும் முஸ்லிம் களுக்கும் இறைவனின் கருணையும் அருளும் உண்டாகட்டுமாக*

*“இன்று நான் உங்களிடம் கடந்த சில நாட்களாக பெஷாவரிலுள்ள முஸ்லிம் சந்தை களை குறி வைத்து நடந்த குண்டு வெடிப்பு களைப் பற்றி பேசப்போகிறேன். இதில் பாதிக்கப்பட்டவர்கள் அப்பாவிக் குழந்தைகள், பெண்கள், முதியோர்கள், மற்றும் ஆண்கள் (இவர்களின் மீது இறைவன் தன் கருணையை புரிவானாக)*



**இந்த குற்ற நடவடிக்கைகள் பற்றிய எங்களின் நிலைப்பாடு இவைதான்.**

**முதலாவது :**

முஸ்லிம் மார்க்கெட்டுகளில் மக்களுக்கு மத்தியில் நடந்த இந்த குண்டுவெடிப்புகளை நாங்கள் கண்டிக்கிறோம். நாங்களும் எங்களின் முஜாஹிதீன் சகோதரர்களும் பல தருவாயிலும் இதை சுட்டிக் காட்டியதுபோல் இந்த குண்டு வெடிப்புகளில் நாங்கள் குற்றமற்றவர்கள்.

முஜாஹிதீன்கள் இறைவனின் வார்த்தைகளை மேலோங்கச் செய்வதற்கும் அவனுடைய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் ஒடுக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு உதவி செய்வதற்குந்தான் ஜிஹாத் செய்கிறார்கள்.

அவர்களைக் கொல்வதற்காக அல்ல (அல்லாஹ் பாதுகாக்க வேண்டும்)

முஜாஹீதின்கள் இதுபோன்ற தரக்குறைவான வேலைகள் செய்வது சாத்தியமற்றது என்பதை முஸ்லிம்கள் தெரிந்து கொள்ளட்டும்.

இறைவனின் பாதையில் நாங்கள் ஜிஹாத் செய்வது இந்த மண்ணையும் மார்க்கத்தையும் பாதுகாப்பதற்கும், சிலுவை யுத்தவான்களாலும் முர்ததுகளாலும் (மார்க்கத்தைவிட்டு வெளியேறிவர்கள்) ஓட்டப்படும் முஸ்லிம்களின் ரத்தத்தையும், குலைக்கப்படும் முஸ்லிம்களின் கண்ணியத்தையும் பாதுகாப்பதற்காகவும்தான்.

**இரண்டாவது :**

சூஹத், வஜ்ரிஸ்தான், பஜீர், மஹ்மூந்த், கைபர் மற்றும் வர்க்காஜாய் போன்ற பகுதிகளிலும் மற்ற இடங்களிலும் பலவீனர்களின் ரத்தத்தை ஓட்டுகின்ற ராணுவம், முர்ததுகளின் பாதுகாப்புப்படை மற்றும் உளவு நிறுவனங்கள் இவற்றை மட்டுமே முஜாஹிதீன்கள் குறி வைக்கின்றனர். எனினும் பல ஊடகங்கள் இதை தவிர்த்துவிட்டு முஜாஹிதீன்களின் நற்பெயரை களங்கப்படுத்தும் விதமாக அமெரிக்காவின் பரப்புரையை பிரச்சாரம் செய்கின்றார்கள்.

**மூன்றாவது :**

முஜாஹிதீன்கள் தங்களது இலக்கை மிகவும் கவனமாக தேர்வு செய்கின்றார்கள். அது பொது மக்கள் அடிக்கடி நடமாடுகின்ற இடங்களுக்கு மிகவும் தொலைவில் உள்ளதாகத்தான் இருக்கும். உதாரணமாக பாகிஸ்தான் ராணுவ மையம், ராணுவ உளவுத்துறை தலைமையகம் (ISI) தீவிரவாதத்தை எதிர்ப்பதற்காக சிறப்புப் படைக்கு பயிற்சிகள் வழங்கும் முகாம்கள் போன்ற இடங்களாகத்தான் அது இருக்கும்.

**நான்காவது :**

இறைவனின் எதிரியான சிலுவை யுத்தவான்களும், அரசாங்கத்திலுள்ள அவர்களின் கூட்டாளிகளும் உளவுத்துறையினரும் செய்கின்ற வேலைதான் இதுபோன்ற குண்டு வெடிப்புகள் என்று நாங்கள் நம்புகிறோம்.

இது அவர்கள் செய்யும் கீழ்த்தரமான போரின் ஓர் பகுதி. அவர்களின் நோக்கமே முஸ்லிம்களைத் துன்புறுத்துவது என்று இருக்கின்றபோது இதை எப்படி அவர்கள் செய்யாமல் இருப்பார்கள். எந்தப் புனிதத் தன்மையையும் அவர்கள் கருத்தில் கொள்வதே கிடையாது.

முஸ்லிம்களின் ரத்தம் அவர்களுக்கு மதிப்பற்றது. பிளாக்வாட்டரும் மற்ற குற்றவாளி கும்பலும் இந்த ஊழல் மயமான குற்றவாளி அரசாங்கத்தின் ஆதரவோடும் அதன் பாதுகாப்பு நிறுவனங்களின் உதவியோடும் பாகிஸ்தானை கபளீகரப்படுத்திவிட்டார்கள் என்பதை அனைவரும் அறிவோம்.

இதுபோன்ற கேவலமான செயல்களை அவர்களே செய்துவிட்டு தங்களது ஊடகங்களின் வழி முஜாஹிதீன்களின் மீது பழி சுமத்துகிறார்கள். முஸ்லிம்கள் மற்றும் முஜாஹிதீன்களின் மதிப்பை குலைத்திடவே இவ்வாறு அவர்கள் செய்கின்றனர்.

கீழ்வரும் அனைத்தும் இவர்கள்தான் குண்டு வெடிப்புகளை செய்தார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது:

*1)* இவர்களின் இந்த செயல்முறை மீண்டும் மீண்டும் ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் பயன்படுத்தப் பட்டுள்ளது. வெறுக்கத்தக்க அமெரிக்கர்கள் இப்போது இதை பாகிஸ்தானுக்கு பயன்படுத்துகிறார்கள்.

*2)* இதுபோன்ற குண்டு வெடிப்புகளும் அமெரிக்க அதிகாரிகளின் பாகிஸ்தான் வருகையும் ஒன்றுபோல் நடக்கின்றது.

எனவே அவர்களால் (அமெரிக்கர்கள்) ஊடக சந்திப்பில் இந்த செயல்களில் ஈடுபடுபவர்கள் தீவிரவாதிகள் என்று சொல்ல முடிகிறது.

*3)* பாகிஸ்தானில் ஆயுதங்களும் வெடிப்பொருட்களும் பிளாக்வாட்டர் மற்றும் மேற்கத்திய அதிகாரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டது உண்மைதான். இந்த செய்தி பாகிஸ்தான் ஊடகங்களாலும் வெளியிடப்பட்டுள்ளது. இது யதார்ச்சியாக நடந்த சம்பவம். இந்த விஷயத்தை விரைவாக அப்படியே மூடிவிட்டார்கள். ஆனால் உண்மையில் இவர்கள் மறைத்த செய்தி மிகப்பெரியது.

யாரிடமிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதோ அவர்கள் முஜாஹிதீன்களின் ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் ஏன்? கண்ணியமிக்க உலமாக்கள், பேச்சாளர்கள், தலைவர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் உட்பட அனைவரையும் கொலை செய்திட திட்டமிட்டிருந்தனர்.

*4)* இந்த குண்டு வெடிப்புகள் மார்க்கெட்டில் நிறுத்தப்பட்டிருந்த குண்டுகள் நிரப்பப்பட்ட கார்களால் நிகழ்த்தப்பட்டுள்ளது. இந்த யுக்தியை உலகம் முழுவதும் பயன்படுத்துவதில் பெயர்போனது உளவு நிறுவனங்கள்தான். இப்படிதான் இவர்கள் ஈராக்கிலும் மற்ற இடங்களிலும் செய்தார்கள்.

## முஸ்லிம் சகோதரர்களே!

யார் ஆப்கானிஸ்தானிலும் இதர பழங்குடிப் பகுதிகளிலும் உங்களின் கிராமங்களை தாக்குகிறார்களோ உங்களின் மேல் குண்டு மழைகளைப் பொழிகிறார்களோ அவர்கள்தான் இந்த குண்டு வெடிப்புகளுக்கு பின்புலத்திலிருப்பவர்கள்.

கடைசியாக, நாங்கள் பாகிஸ்தான் முஸ்லிம்களையும் இதர பகுதியில் வாழும் முஸ்லிம்களையும் கேட்டுக்கொள்வது இஸ்லாத்திற்கு எதிராக உள்ள சதிகளைப் பற்றி நீங்கள் விழிப்புணர்வோடு இருங்கள்.

எதிரிகளுக்கு மதத்திலோ மனித மாண்புகளிலோ தங்களின் நோக்கத்தை அடைவதற்கு எந்த எல்லைகளும் கிடையாது. அதுவும் போர்களின்போது குற்றவாளிகள் இதுபோன்ற குற்றச் செயல்களை செய்வதற்கு வாய்ப்புகள் ஏற்படும். இதுதான் தேசத்துரோகம்.

ஆகவே நீங்கள் இறைவனின் மீது நம்பிக்கை வையுங்கள். பொறுமையைக் கொண்டுதான் வெற்றி இருக்கின்றது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். நாங்கள் குறிப்பாக கண்ணியமிக்க பத்திரிகையாளர்கள், அறிவு ஜீவிகள், எழுத்தாளர்கள் இவர்களிடத்தில் கேட்டுக்கொள்வதெல்லாம் நீங்கள் உண்மையின் பக்கமும், நேர்மையின் பக்கமும் உறுதியோடு நில்லுங்கள். இவர்களின் சதிகளை அம்பலப்படுத்திடுவதற்காகப் போராடுங்கள்.

மற்றபடி, பிளாக்வாட்டரும் சிலுவை யுத்த வான்களும், முர்ததுகளும் அடுத்து உங்களைத் தான் குறி வைப்பார்கள். ஒருவேளை இறைவன் முஜாஹிதீன்கள் தோல்வியுறுவதைத் தடுத்தாள் உங்கள் முஜாகிஹிதீன் சகோதரர்களும் அவர் களின் இஸ்லாமிய தேசமும்தான் உங்களைக் காப்பதற்கு முன்னணியில் நிற்போம்.

இறைவனே நம்பிக்கையாளர்களின் பாது காவலன்! யாவற்றையும் படைத்த இறைவ னுக்கே புகழனைத்தும்

## பிளாக்வாட்டரின் கட்டுப்பாட்டில் ஐக்கிய அரபு அமீரகத்தின் இராணுவம்

எரிக் பிரின்ஸ் தனது சர்ச்சைக்குரிய பிளாட்வாட்டர் நிறுவனத்தை விற்று சில மாதங்களில் Reflex Responses Company (R2) என்ற பெயரில் புதியதொரு நிறுவனத்தை 2010-ல் அமெரிக்காவில் நிறுவினார். ஒருநாள் நடுநிசியில் டஜன் கணக்கான கொலம்பியர் களைக் கொண்ட ஒரு பிரகாசிக்கும் விமானம் கடற்கரைத் தலைநகரமான அபுதாபியில் வந் திறங்கியது. எமிராட்டி உளவுத்துறை அதிகாரி ஒருவர் அவர்களை வெளிநாட்டுத் தூதுவர்கள் வருகின்ற வாயிலின் வழியாக விமான நிலையத்திலிருந்து அழைத்துச் சென்றார்.



UAE Prince

பிறகு எண் பலகை இல்லாத ஒரு பேருந்தில் அவர்களை ஏற்றி பாலைவனத்தில் கடுமையாக காற்று வீசுகின்ற இடத்திலுள்ள இராணுவ வளாகத்தில் கொண்டு சேர்த்தார்கள். ஆம், அவர்கள் அனைவரும் கொலம்பியர்கள். கட்டி டத் தொழிலாளிகள் என்ற பெயரிலே அமீரகத் தினுள் நுழைந்திருக்கின்றார்கள். உண்மையில் அவர்கள் எரிக் பிரின்ஸின் அமெரிக்க தனியார் இராணுவத்தின் ரகசிய இராணுவ வீரர்கள். எரிக் பிரின்ஸின் பாதுகாப்பு வியாபாரம் சட்ட ரீதியான பலப் பிரச்சனைகளை அமெரிக் காவில் சந்தித்ததால் இப்போது அமீரகத்திற்கு குடிபெயர்ந்திருக்கின்றார்.

அபுதாபியின் இளவரசரோடு ஒரு ஒப்பந்தம் செய்திருக்கின்றார். அது 800 வீரர்களைக் கொண்ட ஒரு வெளிநாட்டுப் படைப்பிரிவை உருவாக்குவதுதான் என்று கூறப்பட்டாலும் ஐக்கிய அரபு அமீரகத்தின் அத்துனை இராணுவ விவகாரத்திலும் பிளாக்வாட்டர்தான் முடிவு களை எடுக்கின்றது என்பது அமீரகத்தின் ஆட்சி யாளர்கள் தருகின்ற வாக்குமூலங்களே பறை சாற்றுகிறது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஆட்சியாளர்கள் தனது இராணுவத்தை போதுமானதாக பார்க்க வில்லை. (எரிக் பிரின்ஸின்) இந்தப் படைகளே தனது எண்ணெய் வளம் நிறைந்த எல்லைகளை ஈரானிடமிருந்து பாதுகாக்க உதவும் என்று நம்புகின்றனர். இவர்களின் பயிற்சி முகாம்கள் “சையத் மிலிட்டரி சிட்டி” எனும் இராணுவ தளத்திற்கு பின்னுள்ள காங்கிரீட் சுவர்கள் எழுப்பப்பட்டு மூட்கம்பிகளால் மூடப் பட்டுள்ள முகாம்களில்தான் நடக்கிறது.

இதுபோன்று வெளிநாட்டுப் படை களுக்கு பயிற்சி அளிப்பதற்கான உரிமத்தை பிரின்ஸ் பெற்றிருப்பதாக இதுவரை உறுதியாகவில்லை. அதற்கு அமெரிக்க அரசின் அங்கீகாரம் இருக் கின்றதா என்பதும் தெரியவில்லை என்கிறார் அமெரிக்க அரசின் செய்தி தொடர்பாளர்.

மேலும் அவர் குறிப்பிடும்போது சென்ற வருடம் வெளிநாட்டுப் படை களுக்கு பயிற்சி வழங்கியதற்காக “42 மில்லியன் டாலர்கள்” அபராதமாக ஜோர்டானிலும் மற்ற நாடுகளிலும் செலுத்தி யிருக்கின்றார்கள் என்றார்.

Source : https://www.alaraby.co.uk/english/news/2017/7/7/the-uae-is-employing-blackwater-to-run-its-army
Newyork Times 2011, January

## எமன் யுத்தத்தில் பிளாக்வாட்டரின் பங்களிப்பு

சவுதி தன் தேசத்திற்கு எமனில் இருக்கும் தீவிரவாதிகளால் ஆபத்து என்ற பெயரிலே 2015 முதல் எமன் நாட்டில் குண்டு மழைகள் பொழிந்து வருகிறது. இதுவல்லாமல் சவுதியின் படைகள் எமனில் தனக்கென்று ஒரு இராணுவத் தளத்தை ஏற்படுத்தி எமனை கபளீகரப்படுத்தி வருகிறார்கள்.


Yemen Children

சவுதி தொடுத்துவரும் யுத்தத்தில் இதுவரை யில் 9,245 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் ஐயாயிரம் பேர் குழந்தைகள். சமீபத்தில் சவுதி எமன் நாட்டுக்கு போகின்ற உணவுகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை தடை செய்த தால் நூற்றுக்கணக்கான குழந்தைகள் உணவின்றி ஊட்டச்சத்துக் குறைபாட்டால் வயிறு வீங்கி உயிரிழந்துள்ளனர். ஒரு நாளைக்கு இப்படி 130 குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைவால் உயிரிழக்கின்றனர்.

இந்த வருட இறுதியில் கிட்டத்தட்ட 50 ஆயிரம் குழந்தைகள் உயிரிழக்க நேரிடும் என்றும் கூறுகின்றனர். இப்படி ஊட்டச்சத்துக் குறைவால் 4 லட்சம் குழந்தைகள் பாதிக்கப் பட்டுள்ளனர். அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்கிறார் குழந்தைகள் பாதுகாப்பு நிறுவனத்தின் இயக்குநர் டேமர் கிரோளோஸ்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க சவுதி தனது அண்டை நாடான எமன் நாட்டின் மீது யுத்தம் தொடுப்பதற்கு எரிக் பிரின்ஸின் பிளாக்வாட்ட ரிடம் ஒப்பந்தம் செய்துள்ளது என்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை 400 பிளாக்வாட்டரின் இராணுவ வீரர்கள் சவுதியோடு இணைந்து தாக்குதலை நடத்தி வருகின்றார்கள் என்பது உறுதி செய்யப் பட்டுள்ளது. ஆம் இப்போது பிளாக்வாட்டர் எமன் நாட்டிலும் தனது படுகொலைகளை தொடர்கிறது. சவுதி தாங்கள் நடத்தும் தாக்கு தல் கலகக் காரர்கள் மீதுதான் நடத்துகிறோம் என்று சப்பைக்கட்டு கட்டினாலும் ஆயிரக் கணக்கான அப்பாவி மக்களும் கொல்லப்பட் டுள்ளார்கள் என்பதும், அப்பாவிகளான குழந் தைகள் உணவின்றி உயிரிழக்கின்றனர் என்பதும் மறுத்திட முடியாத உண்மைகள்.

Source: Mintpress News, Alwaght News

## அமெரிக்காவில் நிழல் ஆட்சி எரிக்பிரின்ஸ்

அமெரிக்காவின் அதிபராக ட்ரம்ப் பொறுப் பேற்றதிலிருந்து அமெரிக்காவின் அத்துனை இராணுவ நடவடிக்கைகளும் பிரின்ஸின் மறை முகமான அறிவுரையின் அடிப்படையில்தான் நடக்கின்றது என்பதை அமெரிக்காவில் உள்ள பத்திரிகைகளே இப்பொழுது எழுத ஆரம்பித்து விட்டன.

டொனால்ட் ட்ரம்பின் கேபினட்டில் இருக்கும் அமெரிக்காவின் கல்வித்துறை செயலர் பெஸ்டி டிவோஸ் பிளாக்வாட்டரின் நிறுவனரான எரிக் பிரின்ஸின் சகோதரிதான் என்பதுதான் உலகமறிந்த உண்மை.

சென்ற வருடம் ஆப்கான், ஈராக் யுத்தம் தொடர்பான தனது அறிவுரையில் கடந்த 16 ஆண்டுகளாக 714 பில்லியன் டாலர்களை செலவழித்தும் ஆப்கான் யுத்தத்தில் அமெரிக்கா தோல்வியைச் சந்தித்துள்ளது. எனவே ஆப்கா னிஸ்தான் யுத்தத்தை தனியார் இராணுவத்திடம் தந்தால் செலவுகளும் குறையும் என்பதோடு தனியார் இராணுவ நிறுவனத்தால் மட்டுமே ஆப்கான் யுத்தத்தில் வெற்றிபெற முடியும் என்று எரிக்பிரின்ஸ் கூறியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. ஆக இது அனைத்துமே டிரம் பின் ஆட்சியில் எரிக் பிரின்ஸின் பங்களிப்பு இருப்பதை பறைசாற்றுகிறது என்கின்றனர் அமெரிக்க அரசியல் விமர்சகர்கள்.

Source: https://www.vox.com/world/2017/7/11/15953930/afghanistan-prince-blackwater-private-military-contractor

**- மு. இம்தியாஸ் அஹமத்**






# மாற்றத்தை நோக்கி...

சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இந்த நாட்டில் எந்தவிதமான முன்னேற்றமும் மக்கள் வாழ்வில் ஏற்பட்டபாடில்லை. ஒருபுறம் மதத்தின் பெயரால் மறுபுறம் சாதியின் பெயரால் மக்கள் அல்லோல கல்லோலப் பட்டு வருகின்றனர். எங்கே நம் வாழ்வில் விடிவு வராதா, நம் வாழ்க்கையில் மாற்றம் வந்திடாதா என எல்லா தரப்பு மக்களும் ஏங்கித் தவிக்கின்றனர்.

சில மக்கள் அந்த மாற்றத்திற்காக ஏதேனும் செய்திட வேண்டும். அதற்கு விலையாய் நம் உயிரினை தந்திட வேண் டும் என தியாகம் செய்ய தயாராக ஏதோ ஒரு பாதையில் பயணிப்போம் என முட்டி மோதி தோற்றுக் கொண்டிருக்கும் தருவாயில் அத்துணை தீர்வையும், 1400 ஆண்டின் பென்னம் பெரிய வரலாற்றை தன்னகத்தே கொண்டுள்ள இஸ்லாமிய சமூகமோ எது பாதை? எது பயணம் என்று அறிந்திராமல் பல்வேறு குழப்பங் களுக்கு ஆட்பட்டு சிக்கி சின்னாபின்ன மாக நின்று கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் தமிழ்கூறும் நல்லுல கிற்கு இஸ்லாத்தை தீர்வாய் சொல்லிட வேண்டிய கடமையை உணர்ந்த "நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்" மாற் றத்தை நோக்கி என்ற தலைப்பில் தொடர் பிரச்சாரத்தை முன்னெடுக்க திட்டம் தீட்டி அதனடிப்படையில் திருப்பூர், கோவை மாநகர்களை தொடர்ந்து நாகையில் கடந்த 17-12-2017 அன்று கருத்தரங்கை நடத்த ஏற்பாடு செய்தது.

கருத்தரங்கில் பலதரப்பட்ட கருத்து களும் இடம் பெற வேண்டும் என்ற நோக்கில் மனித உரிமை ஆர்வலர் மூத்த வழக்கறிஞர் பா.பா.மோகன், மனித உரிமை ஆர்வலரும் தலித் பண்பாட்டு பேரவையின் ஒருங்கிணைப்பாளரும் வழக்கறிஞருமான தை.கந்தசாமி, ஜமாத்தே இஸ்லாமிய பேரியக்கத்தின் தஞ்சை மண்டல இயக்க முன்னோடிகளில் ஒருவரான சகோதரர் முஹம்மது யூனுஸ் மற்றும் மூத்த பத்திரிகையாளர் நீதி அமைதிக்கான மக்கள் இயக்க தலைவர் மு. குலாம் முஹம்மது ஆகியோர் சிறப் புரையாற்ற அழைக்கப்பட்டிருந்தனர்.

இதில் நிகழ்வு நெருக்கத்தில் ஏற்பட்ட நீதிமன்ற அலுவல் காரணங்களால் பா. பா.மோகன் அவர்கள் வர இயலாத நிலை யில் புரட்சிகர சித்தாந்தத்தை அடிநாத மாக கொண்ட இயங்கும் பொதுநல மாணவர் எழுச்சி இயக்கத்தின் ஒருங் கிணைப்பாளர்களில் ஒருவரும் ஹைட்ரோ கார்பன் போன்ற பேரழிவு திட்டங்களை எதிர்த்து களமாடும் இயற்கை பாதுகாப்பு குழுவின் அங்கமும் சேலம் பெரியார் பல்கலைக் கழகத்தில் முதுகலை இதழியல் படிக்கும் மாணவியுமான தோழர் வளர்மதி அவர்கள் சிறப்புரையாற்ற அழைக்கப்பட்டார்கள்.

நிகழ்வின் தொடக்கமாக அல்-மதர ஸத்துல் ஹிதாயா பெண்கள் மதரஸாவின் ஆசிரியை சுல்தானி ஆலிமா அவர்கள் "முஃமின்களே நியாயத்தை நிலை நாட்டு வதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதி யான சாட்சியாக இருங்கள்" என்னும் திருக்குர்ஆனின் சூரத்து அல்மாயிதாவின் எட்டாவது வசனத்தை ஓதி நிகழ்வினை தொடங்கி வைத்தார்கள்,

பின்பு தொடக்க உரையை வைகறை வெளிச்சம் இதழின் எழுத்தாளர் இம்தியாஸ் அஹம்மது அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தமது உரையில் நாங்கள் அங்கே நடக்கும் பிரச்சனைகளுக்கு இஸ்லாத்தை தீர்வாக முன் மொழிந்து வருகின்றோம். வெறுமென தீர்வை முன்மொழிபவர்கள் அல்ல நாங்கள் தமிழகத்தில் 36 ஆண்டுகளாக இந்தத் தீர்வை நடை முறைப்படுத்தி காட்டி வருகின்றோம். இந்த நெடும் பயணத்தில் பல்வேறு கட்டங்களில் பல்வேறு ஒடுக்கு முறைகளை நாம் சந்தித்திருக் கின்றோம். அவை எல்லாவற்றையும் இஸ் லாத்தை கொண்டே நாம் வென்றிருக்கின்றோம். அந்த பயணத்திற்கு உங்களை அழைக்கின்றேன் என்றுக் கூறி தனது தொடக்க உரையை நிறைவு செய்தார்.

அடுத்ததாக உரையாற்றிய பொதுநல மாண வர் எழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் வளர்மதி அவர்கள் தனதுரையில் இந்த அரசானது என்றும் மக்களுக்காக செயல் பட்டதில்லை என்றும் இந்த அரசின் நீதித்துறை தீவிரவாத வன்மம் கொண்டது என்றும் அதற்கு உதாரணமாக ஹாதியா வழக்கில் ஹாதி யாவை பெற்றோருடன் அனுப்பி வைத்த இந்த நீதிமன்றம்தான் ஈஷா யோகாமைய வழக்கில் அந்த பெண்கள் மேஜர் எனவும் வாழ்வை முடிவு செய்வது அவர்கள் கையில் உள்ளது எனவும் ஈஷா யோகா மையத்திற்கு சார்பாக தீர்ப்பு கூறியது.

ஹாதியா இஸ்லாத்திற்கு மாறியதால் ஒரு நீதியும் ஈஷா யோகா மையம் இந்துத்துவம் சார்ந்து இயங்குவதால் ஒரு நீதியும் வழங்கி தனது தீவிரவாத வன்மத்தை காட்டுகின்றது, நீதிமன்றம் என்றார். மக்கள் புரட்சி மூலம் ஏற்படும் புரட்சிகர அரசே மக்கள் குறைகளை மாற்று சக்தி கொண்டது என அரசு இயந்தி ரத்தை தோலுரித்துக் காட்டினார்.

அடுத்ததாக உரையாற்றிய ஜமாத்தே இஸ்லாமிய இயக்கத்தின் முஹம்மது யூனுஸ் அவர்கள் சமூக வலைத் தளத்திலும் அறிவுசார் தளத்திலும் முஸ்லிம்கள் கருத்தியல் ரீதியாக தமது சிந்தனைகளை தெளிவுப்படுத்திக் கொண்டு இஸ்லாத்திற்கு எதிரான பொய்ப் பிரச்சாரங்களை முறியடிக்க வேண்டும் என்றார்.

அடுத்ததாக உரையாற்றிய "தலித் பண்பாட்டு பேரவையின் ஒருங்கிணைப்பாளர் வழ.தை.கந்தசாமி இந்துக்களை இராணுவ மய மாக்கும் முகத்தையும் அதன் அடிநாதமான பார்ப்பணியத்தையும் தோலுரித்துக்காட்டினார்.

இறுதியாக உரையாற்றிய நீதி அமைதிக்கான மக்கள் இயக்க தலைவர் மு. குலாம் முஹம்மது அவர்கள், இந்துத்துவ பயங்கரவாதத்தின் வெளியில் அறியப்படாத பல செய்திகளை வெளிப்படையாக தெரிவித்தார். மேலும் ஜன நாயகம் என்ற பெயரில் நாம் ஏமாறுவதையும் ஏமாற்றப்படுவதையும் விரிவாக கூறினார். ஜூனைதை, அஹ்லாக்கை அடித்தபோது உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் மற்ற பலிகள் தடுக்கப்பட்டிருக்கும். தற்காப்பு நடவடிக்கைகளுக்கு இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அங்கீகாரமிருக்கின்றது என்றார்.

முஸ்லிம்களைத்தான் சங்கப் பரிவாரத்தினர் பிரதான எதிரியாக கருதுகின்றார்கள். இதை முஸ்லிம்கள் புரிந்து அதை எதிர்கொள்ள தயா ராக இருக்க வேண்டும். அவர்கள் கொள்கை ரீதியாகத்தான் முஸ்லிம்களை எதிர்க்கிறார்கள். ஆகவே நாமும் கொள்கை ரீதியாக அவர்களை எதிர்க்க வேண்டும். இந்துத்துவாவிற்கு மாற்றாக இஸ்லாம்தான் இருக்க முடியும். உலகில் பல்வேறு மொழி, இன, மத, மக்களை ஒன்றாய்க்கொண்டு ஆட்சி நடத்திய வரலாறு இஸ்லாத்திற்கு மட்டுமே சொந்தம் இதற்கு அதன் நீண்ட நெடிய வரலாறு இஸ்லாத்திற்கு மட்டுமே சொந்தம் வரலாறு சாட்சி என்று வரலாற்றை நினைவூட்டினார்.

எதிரிகள் எந்த வடிவில் வருகிறார்களோ அந்த வடிவில்தான் நாம் எதிர்கொள்ள வேண் டும் என தீர்வை முன்மொழிந்தார். இஸ்லாத்தை பலதரப்பட்ட மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். இஸ்லாமிய ஆட்சியின் கீழ்தான் அனைவரும் நிம்மதியாக வாழ முடியும் என்பதை வரலாற்று ஆதாரத்தோடு விளக்கி னார். மேலும் மக்களுக்கான தத்துவங்களும் செயல்களும் இஸ்லாத்தில் தான் உள்ளன என் பதையும் அதைக்கொண்டு சேர்க்க வேண்டிய கடமை இஸ்லாமியர்களுக்கு உள்ளது என்றும் அது ஒன்றே மாற்றத்திற்கான வழி என்பதை தீர்க்கமாக முன் மொழிந்தார்.

இக்கருத்தரங்கின் பெருந்திரளான ஆண் களும் பெண்களும் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

## எது முதலில்?

# எந்த சூழலில் எந்த செயல்?

**எந்த சூழ்நிலையில் எந்தச் செயலை முன்னுரிமை தந்து நிறை வேற்ற வேண்டும் என்பதை சீர்தூக்கிப் பார்த்திடும் துலாக்கோல் முற்றாகப் பாழ்பட்டுக் கிடக்கிறது.**

அரசியல். பொருளாதாரம், சமூகம், கோட்பாடு இப்படி எந்தக் கோணத்தில் பார்த்தா லும் உலகியல் அடிப்படையில் சிந்தித்தாலும் ஆன்மிக அடிப்படையில் சிந்தித்தாலும் நம் நிலைமை இப்படித்தான் இருக்கிறது.

அரபு நாடுகள், இஸ்லாமிய நாடுகள் முழுவதிலும் வினோத மான பல பிளவுகளைப் பார்க்க முடிகிறது.

நம்மிடமுள்ள பழுதைப் போக்கும் கற்றல் கற்பித்தல் ஆகியவற்றைவிட பொழுது போக்கும் வீண் விளையாட்டு களுக்கே முன்னுரிமை தரப்படு கிறது. இது தொன்று தொட்டு இருந்து வருகிறது.

அறிவுப் பயிற்சியை விட உடற்பயிற்சிக்கே முன்னுரிமை தருகிறது நம் இளைய தலை முறை. 'இளமையைப் பரா மரித்தல் என்றாலே உடற் பரா மரிப்பு மட்டுமே' என்று தப்பிதமாக எண்ணுகின்றனர், மனிதன் என்றாலே உடல் மட்டும்தானா ஆத்மாவும் அறிவும் மனிதன் என்பதன் கீழ்வராதா? வருமல்லவா?

அபுல்பதஹ் அல்பஸ்த்தி என்பவரின் பிரபலக் கவிதை யொன்று நமக்கெல்லாம் நன்றாக மனதில் பதிந்துள்ளது.

"உடலுக்குச் சேவகம் செய்பவனே எவ்வளவு



இமாம் யூசுப் அல்கர்லாவி

முனைப்புக் காட்டுகிறாய் அந்த சேவகத்தில் இழப்பைத் தருவதிலா லாபத்தைத் தேடு கிறாய்?

"ஆத்மாவைக்கவனி. அதன் மேன்மைகளை நிறைவுபடுத்து ஆத்மாவைக் கொண்டே மனிதனாகிறாய் நீ."

"உடம்பை வைத்தல்ல."

சுஹைர்பின் அபீசல்மா என்பவரின் கவிதையும் நாம் அறிந்ததே.

"நாக்கு பாதி உள்ளம் பாதி என்பதே இளைஞன்."

"ஆனால். இப்போது ரத்தமும் சதையும் கொண்ட வடிவம் அன்றி வேறெதுவும் மிஞ்சவில்லை."

ஆனால். இன்றைய நிலை என்ன? மனிதன் என்றாலே உடலும் சதையும் தான் மற்ற வை எல்லாம் இதற்கு அப்பால் தான்.

*1993*-ம் ஆண்டின் கோடை காலத்தில் எங்கும் ஒரே பேச்சு. தன்னைத் தானே ஏலம் விட்ட ஒரு விளையாட்டு வீரன் பற்றித்தான் எகிப்து நாடே பேசியது. (Club) கிளப் களுக்கிடையே நடைபெற்ற பேரம் பேசும் போட்டியில் ஒரு வீரன் முக்கால் மில்லியன் வரை விலை பேசப்பட்டானாம்.

எல்லா வகையான விளை யாட்டுக்களையும் இவ்வளவு முக்கியத்துவம் தந்து பார்க்கி றார்களா? என்றால் இல்லை. மக்கள் அனைவரும் தம் அன் றாட வாழ்வில் பயனடையத் தக்க விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் தரப்படுவ தில்லை.

ஒரு சிலர் விளையாடிக் கொண்டிருக்க பலர் ஒய்யாரா மாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் விளை யாட்டுகளுக்கே முன்னுரிமை தரப்படுகின்றது. குறிப்பாக கால்பந்து விளையாட்டைச் சொல்லலாம்.

அறிஞர்களோ. மேதை களோ, சிந்தனையாளர்களோ, இஸ்லாமிய அழைப்பாளர் களோ பேரோடும் பெருமை யோடும் திகழும் நட்சத்திரங்

களாகப் பார்க்கப்படுவதில்லை. பொழுது போக்குத் துறையில் ஈடுபட்டுள்ள வீரர்களும் வீராங்கனைகளுமே புகழ்பெற்று விளங்குகின் றனர்.

ஏடுகளும் இதழ்களும் தொலைக்காட்சி களும் வானொலிகளும் விளையாட்டு வீரர் களின் செயல்களையும். சாகசங்களையும் அவர் களைப் பற்றி ஒன்றுக்கும் உதவாத தகவல்களை யும் பரப்புவதிலேயே குறியாக இருக்கின்றன.

மற்றத் துறைச்சார்ந்த வல்லுனர்களோ அடர்ந்த இருளில் அடைக்கப்படுகின்றனர், மறக்கப்படுகின்றனர் அவர்களின் சாதனை களைப் பற்றிப் பேசிட எவருமில்லை.

ஒரு விளையாட்டு வீரர் இறந்துவிட்டால் நாடே அல்லோல கல்லோலப்படுகின்றது, ஏடுகளெல்லாம் இந்தச் செய்தியால் நிரம்பி வழிகின்றது ஒரு அறிஞர் மொழி வல்லுனர் பெரிய பேராசிரியர் இறந்து போனால் எவருக் கும் அது தெரியாமலேயே போய் விடுகின்றது.

பொருளாதார அடிப்படையில் பார்த்தால் 'தேசப் பாதுகாப்பு' என்று போலியாகச் சொல்லிக் கொண்டு விளையாட்டுகளுக்காகவும் பொழுது போக்கு அம்சங்களுக்காகவும் ஏராளமாக பணம் செலவிடப்படுகிறது ஏன்? என்று கேள்வி கேட்க எவருமில்லை.

மறுபுறம் கல்வி சுகாதாரம் மார்க்க விவகாரம், அடிப்படை சேவைகள் ஆகியவற்றுக்கு போதிய நிதி ஒதுக்கப்படுவதில்லை. கேட்டால் அரசின் நிதியாதாரம் பலஹீனமாக இருப்பதாகக் கூறி எளிமையாக வாழ்ந்திடப் போதிக்கிறார்கள். ஒருபுறம் ஊதாரித் தனம் மறுபுறம் சிக்கனம். இப்னுல் முக்ஃபிஉ என்பவரின் பழமொழி ஒன்று உண்டு. "அனாவசியமான செலவுகளால் அவசியச் செலவு நின்றுபோகிறது" என்று.

இவ்வாறாக எதற்கு முன்னுரிமை தர வேண்டும் எதை முதலில் செய்ய வேண்டும் என்று சீர் தூக்கிப் பார்த்திடும் துலாக்கோல் சீரழிந்து கிடக்கிறது.

இந்தக் கோளாறு முஸ்லிம் பொதுமக்களி டமோ அல்லது நீக்குப் போக்கான முஸ்லிம் களிடமோ இருந்து வரவில்லை. "நாங்களே முஸ்லிம்கள்" என்று கூறிக் கொள்வோர் இத்தகைய கோளாறுடையவர்களாக இருக்கி றார்கள். சரியான மார்க்க அறிவும் முறையான சட்ட விளக்கமும் இல்லாத காரணத்தால் இந்தக் கோளாறு வருகின்றது.

ஆம், சுமாரானது எது, சிறப்பானது எது? ஏற்றமானது எது, ஏறுக்குமாறானது எது? சரியானது எது? குழப்பமானது எது? ஏற்கப்பட வேண்டியது எது? மறுக்கப்பட வேண்டியது எது? சுன்னா எது? பித்அத் எது? என்று சீர்தூக்கிப் பார்த்திடத் துணை செய்வது கல்வி ஒன்றுதான். மார்க்க அடிப்படையில் ஒவ்வொரு செயலையும் மதிப்பீடு செய்திடத் துணை நிற்கிறது கல்வி.

சட்ட விளக்கமும் கல்வியின் வெளிச்சமும் பெற்றிடாத பலர் பல தரப்பட்ட செயல்களுக்கு மத்தியிலுள்ள எல்லைக் கோட்டைஅழித்து ஒன்றுக்கொன்று வித்தியாசமில்லாமலாக்கி அவற்றின் தனித்தன்மைகளைச் சிதைத்து விட் டனர். மார்க்கம் சொல்லாதவற்றையெல்லாம் சொல்லிவிடுகின்றனர். நற்செயல்களுக்கிடை யிலான தராதரங்களை அழித்து மார்க்கத்தில் வரம்பு மீறிவிட்டனர். அல்லது குறை வைத்து விட்டனர்.

பெரும்பாலும் இவர்கள் நல்லுள்ளம் கொண்டவர்களாக இருந்துகொண்டே ஏற்ற மானதையும் சிறப்பானதையும் விட்டு விட்டு ஏறுக்கு மாறானதையும் சுமாரானதையும் செய்வதில் ஈடுபட்டு மூழ்கிவிடுகின்றனர்.

ஒரு சூழ்நிலையில் ஒரு செயலைச் செய்வது சிறப்பானதாக இருந்திருக்கும். மற்றொரு சூழ் நிலையில் அதைவிட வேறு ஒன்றைச் செய்வதே சிறப்பானது என்ற நிலையில். இரண்டு சூழ்நிலைகளையும் சந்தர்ப்பங்களையும் வேறு படுத்திப் பார்த்திடும் அளவுக்கு சட்டவிளக்கம் ஞானம் இல்லாதிருக்கின்றனர்.

நல்லுள்ளம் கொண்ட முஸ்லிம்கள் சிலரை நான் பார்த்திருக்கிறேன். ஏற்கனவே பல பள்ளி வாசல்கள் இருக்கும் ஊரில் மற்றொரு பள்ளி வாசலை கட்டி எழுப்பிட அரை மில்லியன். ஒரு மில்லியன், பல மில்லியன் என டாலர்களை வாரி இறைக்கின்றனர்.

இந்தச் செலவில் பாதியை அல்லது கால் பகுதியை இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்திடவும்

இறைமறுப்பை—குஃப்ரை எதிர்கொள்ளவும் இஸ்லாத்தை நிலைநாட்டவும் இஸ்லாமியப் பணிகளை நிறுவிடவும் தந்தாலென்ன? சில லட்சியங்களுக்காக உழைத்திட லட்சிய வீரர்கள் உள்ளனர். பணம்தான் இல்லை. எனவே நீங்கள் பொருளுதவி செய்தாலென்ன? என்று கேட்டால் அதைக் காது கொடுத்தே கேட்ப தில்லை அவர்கள். ஒரு தலைமுறையைக் கட்டி யெழுப்புவதை விட செங்கற்களாலான கட்டி டங்களை எழுப்புவதிலேயே குறியாக இருக் கிறார்கள்.



பெரும் செல்வந்தர்களான முஸ்லிம்களில் ஒரு கூட்டம் ஆண்டு தோறும் நஃபில் ஹஜ்ஜை நிறைவேற்றிடவும் ரமழான், உம்ராவை நிறை வேற்றிடவும் கூட்டம் கூட்டமாகக் கிளம்பி விடுகின்றனர்.

ஹஜ்ஜோ, உம்ராவோ கடமையாகாத ஏழைகளையும் தம் செலவில் தம்மோடு அங்கு அழைத்துச் செல்கின்றனர். இதற்காக தாராள மாக செலவு செய்கின்றனர்.

ஆண்டுதோறும் செலவிடும் இந்தத் தொகையை ஃபாலஸ்தீன் நாட்டில் யூதர்களை எதிர்த்துப் போராடிட செர்பியாவில், போஸ்னியா – ஹெர்சகோவினாவில் நடக்கும் ஜிஹாதுக்காக இந்தோனேஷியா, பங்களா தேஷ் இன்னபிற ஆசிய, ஆப்பிரிக்க தேசங்களில் நடைபெற்றுவரும் கிறிஸ்தவ மதமாற்றத்தை எதிர்கொள்ளவதற்காகத் தரலாமே...?

இஸ்லாமிய அழைப்பு மையங்களை நிறுவிடவும் தஃவாவை முழுநேரப்பணியாகச் செய்திடும் அழைப்பாளர்களை உருவாக்கவும் பயனுள்ள இஸ்லாமிய நூல்களை வெளியிடவும் குர்ஆன் மொழி பெயர்ப்புக்களையும் இதர வெளியீடுகளைக் கொண்டு வந்திடவும் நிதி உதவி செய்யலாமே...? என்று கூறினால் 'வெடுக்'கென்று தலையைத் திருப்பிக் கொண்டு ஆணவமாகச் செல்வதைப் பார்க்க முடிகிறது.

ஆனால், ஹஜ் தொடர்பான செயல்களை விட ஜிஹாத் தொடர்பான செயல்களே ஏற்ற மானவை என்று தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளது திருக்குர்ஆன்.

ஹாஜிகளுக்குத் தண்ணீர் புகட்டுவோரையும் (கஅபா எனும்) புனித ஆலயத்தை நிர்வாகம் செய்வோரையும் அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொண்டு அல்லாஹ் வின் பாதையில் அறப்போர் புரிந்தோருக்குச் சமமாக ஆக்கிவிட்டீர்களா? அல்லாஹ்விடத்தில் இவர்கள் (இருவரும்) சமமாக மாட்டார்கள். அநியாயக்காரர்களை அல்லாஹ் நேர்வழியில் செலுத்த மாட்டான்.

யார் ஓரிறை நம்பிக்கை கொண்டு தம் நாட்டை விட்டும் வெளியேறி செல்வங்களையும் உயிர்களையும் தியாகம் செய்து அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் செய்தார்களோ அவர்கள் அல்லாஹ்விடம் மகத்தான பதவி பெறுவார்கள். அவர்கள் வெற்றியாளர்கள்.

அவர்களுக்கு அவர்களின் இறைவன் தன் அன்பையும் திருப்தியையும் சுவனபதிகளையும் தருவதாக நல்வாழ்த்துக் கூறுகிறான். அங்கு அவர்களுக்கு நிரந்தரமான பாக்கியங்கள் உண்டு. *(9;19,20,21)*

இவ்வாறு அல்லாஹ் தெள்ளத் தெளிவாக எது சிறந்தது என்று கூறியுள்ளான்.

ஆனால், நம்முடைய செல்வந்தர்கள் நஃபிலான ஹஜ்ஜை நிறைவேற்றிக் கொண்டே போகிறார்கள். எனினும் மதச் சார்பின்மை, பிரிவினை வாதம், இறை மறுப்பு, மனமுரண்டு உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வரும் எதிர்ப்புக்கள் ஆகியவற்றை எதிர்கொள்வது காலத்தின் கட்டாயம் அன்றாடக் கடமை. இந்தக் கடமையைச் செய்வதில்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு வார இதழில் பிரபல எழுத்தாளர் நண்பர் பேராசிரியர் ஃபஹ்மி ஹதிவைதி அவர்கள் எழுதிய கட்டுரை

யில் கடமையான ஹஜ்ஜை விட போஸ்னியாவைக் காப்பதே முதன்மையானது என்று ஹஜ்ஜின் காலக் கட்டத்தில் எழுதியிருந்தார்.

"அவரின் இக்கருத்து ஷரீஅத் அடிப்படையில் சரிதானா?" என்று பலரும் என்னிடம் கேட்டனர்.

"ஒரு கோணத்தில் பார்த்தால் இது சரியானதே சட்ட அடிப்படையில் பார்த்தால் கூட எந்தக் கடமைகளைத் தாமதமாகக் கூட செய்திட முடியுமோ, அதைவிட எதை உடனடியாக நிறைவேற்றியே தீர வேண்டுமோ அதைத்தான் முதலில் செய்ய வேண்டும் என்பது ஷரீஅத் ஏற்றுக் கொண்ட விஷயம்தான்."

கடமையான ஹஜ்ஜை தாமதமாகக் கூட செய்யலாம். சில அறிஞர்கள் நிதானமாகவே செய்ய வேண்டும் என்கின்றனர்.

ஒருபுறம் பசி, பிணி, குளிர் ஆகியவற்றால் அழிந்து கொண்டும், மறுபுறம் கூட்டுப் படுகொலைக்கு ஆளாகியும் நிற்கும் போஸ்னியா முஸ்லிம்களைக் காப்பது அவசிய, அவசரக் கடமையல்லவா? இதைத் தாமதப்படுத்த முடியுமா? முஸ்லிம் சமுதாயம் உடனடிக் கவனம் செலுத்த வேண்டிய பிரச்சனை அல்லவா இது?

ஹஜ்ஜில் உள்ள புனிதச் சின்னங்களை (ஷஆயிர்) மதிப்பதும் கண்ணியப்படுத்துவதும் கடமை என்பதில் இன்னொரு கருத்து இருக்கவே முடியாது. எனினும் ஏராளமான பணச் செலவுகளின்றி மக்கா, மதீனா ஆகிய புனித நகரவாசிகளும் அவற்றின் சுற்றுப்புற ஊர்வாசிகளுமே ஹஜ்ஜின் புனிதச் சின்னங்கள் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழியும் அளவுக்கு அங்கு குவிந்து விடுகின்றனர்.

முஸ்லிம் செல்வந்தர்கள் தமது நஃபில் ஹஜ்ஜை நிறுத்தி விட்டு அந்தப் பணத்தை இஸ்லாத்தை நிலைநாட்டிடும் அறப்பணிக்கும், ஜிஹாதுக்கும் தருவதால் ஹஜ்ஜிலும், உம்ராவிலும் கூட்டம் குறைந்து அல்லாஹ்வின் புனிதச் சின்னங்கள் களையிழந்து போய்விடும் நிலைமை ஏற்பட்டுவிடப் போவதில்லை. அதன் சுற்றுப்புறத்திலிருப்பவர்களே குறைந்த பொருட்செலவில் வந்து, போதுமான அளவுக்கு அல்லாஹ்வின் சின்னங்களை கண்ணியப் படுத்திக் கொண்டுதானிருக்கின்றனர்.

என்னைப் பொருத்தவரை "கடமையான ஹஜ்ஜைவிட போஸ்னியாவைக் காப்பதே முதன்மையானது" என்ற பேராசிரியர் ஹதிவைதி அவர்களின் கருத்தை சற்று நெகிழ்த்தி விடலாம்.

ஏற்கனவே தமது கடமையான ஹஜ்ஜை முடித்து விட்டவர்கள் திரும்பத் திரும்ப வருவதுதான் ஆண்டுதோறும் ஹஜ்ஜில் கூட்டம் கூடிக் கொண்டே போவதற்குக் காரணம். வருடந்தோறும் இவர்கள் நஃபில் ஹஜ்ஜதிக்கு வந்துவிடுகின்றனர். இருபது லட்சம் பேர் ஆண்டுதோறும் ஹஜ்ஜதிக்கு வருகின்றார்கள் என்றால் இதில் 15% தான் புதிய ஹாஜிகள். அதாவது கடமையான முதல் ஹஜ்ஜை நிறைவேற்ற வருபவர்கள். மீதியுள்ளவர்கள் பழைய ஹாஜிகள் நஃபில் ஹஜ்ஜை நிறைவேற்ற வருபவர்கள்.

என் ஆசை என்னவென்றால் இப்படி ரமழான் உம்ராவையும் ஆண்டுதோறும் நஃபில் ஹஜ்ஜையும் ஆண்டு முழுவதும் உம்ராவையும் பெரும் பொருள் செலவில் நிறைவேற்றிக் கொண்டிருப்பவர்கள் அந்தப் பணத்தை அல்லாஹ்வின் பாதையில் செலவிட வேண்டும் என்பதுதான்.

இன்றைய உலகில் முஸ்லிம்கள் இருந்தும் இல்லாமலிருக்கின்றனர். அவர்கள் உணர்வும் உடலும் அழிவின் முன்னே நிற்கின்றன. அவர்களின் புனிதங்கள் பங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. முஸ்லிம்களை தடந்தெரியாமல் துடைத்தெறிந்திடவும் கண்மண் தெரியாமல் அவர்கள் மீது அநீதிகளை அரங்கேற்றவும் எதிரிகள் தயார் நிலையில் உள்ளனர். முன்னேறிய நாடுகளோ இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன. அநீதிக்கு எதிராக அசைந்து கொடுக்கக்கூட அவை தயாரில்லை.

'வெற்றி என்பது வலிமையின் நியாயத்துக்கேயன்றி நியாயத்தின் வலிமைக்கு அல்ல' என்றாகிவிட்டது. இதை எதிர்கொள்ள அந்தப் பணங்கள் செலவிடப்பட வேண்டும் என்பது என் அவா!

**(இந்நூல் 1994 செப்டம்பரில் வெளியானது. கர்ளாவி அவர்களின் கருத்துக்களை அக்கால நிகழ்வுகளை மனதில் கொண்டு வாசிக்கவும்)**

**– அடுத்த இதழில் தொடரும்**

# இஸ்லாமிய வங்கி முறை!

**பாகம் 4**

**சென்ற இதழில் இஸ்லாமிய வங்கி முறையின் ஒரு பிரிவான முஸராகா பற்றி பார்த்தோம். இப்போது முதரபா பற்றி பார்க்கலாம்.**

முதரபா - இதுவும் ஒரு கூட்டு வணிக முயற்சியே, ஆனால் அதன் செயல் வடிவத்தில் முஷாரகாவை விட சற்று மாறுபடுகிறது.

வங்கதேச நாட்டை சேர்ந்த முகமது யூனுஸ் அமெரிக்க பல்கழைக் கழகத்தில் பொருளியல் முனைவர் பட்டம் பெற்றவராவார். 1976-ல் அவர் அவருடைய கிராமத்தில் மூங்கில் வாங்கி நாற்காலி செய்து விற்கும் ஒரு பெண்ணின் மூலம் அவர்களின் வாழ்க்கையில் எந்த அளவிற்கு வட்டி உழைப்பை உறிஞ்சுகிறது என்று உணர்ந்து கொண்டார்.

அவர்கள் சம்பாதித்த பணத்தின் பெரும் தொகையை கடன் கொடுத்தவருக்கே வட்டியாக செலுத்தினர். மூங்கில் கூட வாங்க முடியாத அந்த மக்களின் வறுமையை அங்கு இருந்த செல்வந்தர்கள் அவர்களின் உழைப்பை வட்டியால் தினமும் உறிஞ்சி கொண்டிருந்தனர்

பின்பு, அங்கு ஒரு ஆய்வு செய்த போது அது போல் 42 கூடை செய்யும் தொழிலாளர்கள் இருப்பதும் அவர்களின் உழைப்பு மற்றும் லாபம் அனைத்துமே கடன் கொடுத்தவர்க்கே வட்டியாக செல்கிறது என்றுணர்ந்து அம்மக்களுக்கு அவருடைய சொந்த பணத்தை கடனாக கொடுத்தார்.

தொகையும் பெரிய தொகை இல்லை, மொத்தமாக கொடுக்கப் பட்டதே $27 டாலர்தான், நமது நாட்டின் ரூபாய் மதிப்பில் பார்த்தால் சுமார் 280 ரூபாய் ஆகும் (1970ல்). மக்களின் முதலீடு இல்லாத காரணத்தாலும் ஏழை என்ற காரணத்தாலும் வங்கிகள் இவர்களை புறக்கணிப்பு செய்தன,

இதுவே அவர்களை வட்டியின் கொடுமையில் தள்ளியது. இதற்கு மாற்றமாக தொழில் தெரிந்தவர்களிடம் தனது சொந்த பணத்தை கொடுத்து அவர்களின் உழைப்பிற்கு ஏற்ற கூலி கிடைக்க வழி செய்தார்.

இந்த புதிய முயற்சி மக்களை வெகுவாக கவர்ந்தது. மக்களும் பெற்ற கடனை விரைவில் திருப்பி அடைத்தார்கள், இதுவே பின்னாளில் கிராமீன் வங்கியின் தொடக்கமாக அமைந்தது. கிராமீன் வங்கியில் இன்றளவிலும் ஏழைகளுக்கு கடன் கொடுப்பதற்கு ஜாமின் கிடையாது என்பது அவர்களின் கொள்கை. இதுவே மகளிர் சுய உதவிக்குழு செயல் திட்டத்தின் அடிவருடியாக உள்ளது.









மேற்சொன்ன உதாரணம் நிச்சியமாக முதராபா -விற்கு பொருந்தும்.

**முதராபா - செயல் வடிவம்:**

தொழிலின் நிபுணத்துவம் உள்ளது ஆனால் தொடங்குவதற்கு முதலீடு இல்லை என்பவர்கள் வங்கியை அணுகுவார்கள். வங்கி அதனை ஆராய்ந்த பின்னர் நம்பிக்கையின் அடிப்படையில் முதலீடு செய்யும். உழைப்பவர் தன் வேலையை தொடங்குவார், தொழிலில் அடையும் லாபத்தை ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரித்து கொள்வார்கள்.

ஒரு வேலை தொழிலில் நஷ்டம் ஏற்பட்டால் அது முழுமையாக வங்கியே ஏற்று கொள்ளும். ஏனென்றால், நஷ்ட காலங்களில் உழைத்தவர் உழைப்பு வீணடைகிறது. மேலும் லாப/நஷ்டத்தில் பங்கு என்பது வங்கிகளுக்கு அடிப்படை விதியாகிறது இஸ்லாமிய வங்கி முறையில். நஷ்டத்தில் பங்கு பெற்றால் தான் வங்கியும் கம்பீரமாக லாபத்திலும் பங்கு கொள்ளமுடியும்.

**நிபந்தனைகள்:**

முதலீடு தொகை, கால அளவு, லாப விகிதாச்சாரம் தெளிவாக குறிப்பிட்டு கொள்ள வேண்டும். கடன் வாங்கியவர் தொழிலை பார்த்துக் கொள்ள வேண்டும்.

தொழிலில் கிடைக்கும் லாபத்தை வங்கியும்/வாடிக்கையாளரும் பிரித்து கொள்ளவேண்டும். தொழிலை கவனிப்பதற்காக தனி சம்பளம் தரத்தேவையில்லை.

கடன் வங்கியவர், இவ்வளவு லாபம் கிடைக்கும் என்று உறுதிமொழி குடுக்க தேவையில்ல. ஆனால் அவரின் அஜாக்கிரதையின் காரணமாக தொழிலில் நஷ்டம் ஏற்பட்டால் எவ்வளவு நஷ்ட ஈடு தருவார் என்று ஒப்பந்தத்தில் குறித்து கொள்ளலாம்.

மக்களிடம் சிறந்த தொழில் ஞானம் உள்ளது ஆனால் முதலீடு எட்டாக்கனியாக இருக்கும் பட்சத்தில் இஸ்லாமிய வங்கியின் முதாரபா திட்டம் நிச்சயம் ஒரு வரப்பிரசாதம் என்பது மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

தொடரும்..

**-அபுதாஹிர்**

**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரூ. 30 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**
52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்புக்கு : 8148129887

# தமிழக முதலமைச்சருடனும் எதிர்கட்சித் தலைவருடனும் தமிழ்நாடு அனைத்து இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு தலைவர்கள் சந்திப்பு



**மோடி அரசு கொண்டு வந்த முத்தலாக் சட்டம் என்று அழைக்கப்படுகின்ற முஸ்லிம் பெண்கள் திருமண உரிமை பாதுகாப்புச் சட்டம் 2017-ஐ தமிழகத்தில் ஆளும் கட்சியும் எதிர்கட்சியும் கடுமையாக எதிர்த்து அரசியலமைப்புச் சட்டம் சிறுபான்மையி னருக்கு அளித்துள்ள உரிமைகளை நசுக்கும் முயற்சியை முறியடித்துள்ளன.**

முத்தலாக் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தமைக்காக தமிழ்நாடு அனைத்து இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கூட்ட மைப்பின் சார்பாக நேற்று (ஜனவரி 24 2018) தமிழக முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்களை யும், தமிழக சட்டமன்ற எதிர்கட்சித் தலைவரும் திமுக செயல் தலைவரு மான திரு. மு.க. ஸ்டாலின் அவர் களையும் சந்தித்து நன்றி தெரிவித் தோம்.

தமிழக முதலமைச்சரை தலைமைச் செயல கத்திலும், எதிர்கட்சித் தலைவரை அண்ணா அறிவாலயத்திலும் சந்தித்தோம்.

தமிழக முதலமைச்சரிடம் கூட்டமைப்பின் சார்பாக இரண்டு கோரிக்கை மனுக்களையும் அளித்தோம்.

தமிழக சிறைகளில் *10* ஆண்டுகளுக்கு





அதனை முஸ்லிம்கள் பயன்படுத்துவதில்லை என்பதை மற்றொரு மனுவில் சுட்டிக்காட்டினோம். மிக குறைந்த விகித வட்டியாக இருப்பினும் வட்டி தடுக்கப் பட்டுள்ளதால் முஸ்லிம்கள் டாம்கோவின் திட்டங்களை பயன்படுத்த முனைவதில்லை.

எனவே டாம்கோ வட்டி யில்லாத கடன்களை வழங்க வேண்டுமென்றும் தனது நிர்வாக செலவிற்காக வேண்டுமெனில் பயனாளிகளிடம் சேவைக் கட்ட ணத்தை வசூல் செய்துக் கொள் ளட்டும். மேற்கு வங்கமாநிலம் இதற்கு முன் மாதிரியாக உள்ளது என்று முதலமைச்சரிடம் கோரிக்கை மனு அளித்தோம்.

மேலாக வாழ்நாள் சிறைவாசம் அனுபவித்து வரும் முஸ்லிம் சிறைவாசிகள் உட்பட அனைத்து சிறைவாசிகளையும் பாரபட்சமில் லாமல் விடுதலைச் செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தோம். அரசியலமைப்புச் சட்டத்தின் 161-ஆம் பிரிவின் அடிப்படையில் சிறைவாசிகளின் தண்டனை காலத்தை குறைத்து அவர்களை விடுதலைச் செய்ய மாநில அரசுக்கு முழு உரிமை உண்டு என்பதை இச்சந்திப்பின் போது சுட்டிக்காட்டி னோம்.

அரசியல் சாசன சட்டத்தின் 161-ஆம் பிரிவு மாநில அரசுக்கு அளித்துள்ள இந்த உரிமையில் தலையிட யாருக்கும் அதிகாரமில்லை என்பதை பல்வேறு உச்சநீதிமன்ற தீர்ப்புகள் உறுதி செய்திருப்பதையும் நாம் சுட்டிக்காட்டினோம். ஏழு தமிழர்கள், முஸ்லிம் சிறைவாசிகள் உட்பட அனைவரையும் அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 161ன் படி தமிழக அரசு உடனடியாக விடுதலைச் செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தோம். சட்ட நிபுணர்களுடன் கலந்து பேசி கோரிக்கையை நிறைவேற்ற ஆவணச் செய்வதாக முதலமைச்சர் கூட்டமைப்பு தலைவர்களிடம் உறுதி அளித்தார்.

தமிழ்நாடு சிறுபான்மை பொருளாதார முன்னேற்றக் கழகம் (டாம்கோ) அளிக்கும் கடன்களுக்கு வட்டி வசூலிக்கப் படுவதால்

தமிழக எதிர்கட்சித் தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களிடம் முத்தலாக் மசோதா மாநிலங்களவையில் கொண்டு வரப் பட்ட போது அதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து அதனை நிறைவேற்ற விடாமல் தடுத்ததற்காக கூட்டமைப்பின் சார்பில் நன்றி தெரிவிக்கப் பட்டது. தொடர்ந்து இம்மசோதாவை மோடி அரசு நிறைவேற்ற எடுக்கும் முயற்சிகளை திமுக தடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக் கப்பட்டது. இது குறித்து தகுந்த நடவடிக்கை களை எடுப்பதாக எதிர்கட்சித் தலைவர் உறுதி அளித்தார்.

கூட்டமைப்பின் தலைவரும் தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபையின் தலைவருமான மவ்வலி பி.ஏ.காஜா முயீனுத்தீன் பாகவி அவர்கள் தலைமையில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமுமுக, ம ம க,ஜமாஅத்தே இஸ்லாமி, இந்திய தவ்ஹீத் ஜமாஅத், வெல்பேர் பார்ட்டி, தாருல் இஸ்லாம் (நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்), இந்திய தேசிய லீக், தேசிய லீக், ஜம்மிய்யதுல் உலமா, இஸ்லாமிய இலக் கிய கழகம், தமிழ்நாடு தொண்டு இயக்கம், உள்ளிட்ட 24 அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.



# பெல்லட் குண்டுகளும் கஷ்மீர் மாணவிகளும்...?

கஷ்மீரில் ஓர் இன சுத்திகரிப்பு நடந்து கொண்டிருக்கின்றது. இந்த உண்மையை இப்போது எல்லோரும் ஒத்துக்கொள்ளத் தொடங்கியுள்ளார்கள். காலம் தாழ்ந்த ஒப்புதல்தான்.

ஆமாம், அது முஸ்லிம்கள் இல்லாத ஒரு கஷ்மீரை உருவாக்கிடும் திட்டம். இந்தச் சதி திட்டம் வெகு நாட்களாகவே செயல்படுத்தப் பட்டு வருகின்றது.

இதனால் நாட்டு நலனில் அக்கறை உள்ளவர்கள் அத்தனை பேரும். அந்த மக்களை அந்நியப்படுத்திடும், அக்கிரமங்களையும், அநியாயங்களையும் அரசு உடனேயே நிறுத்திவிட வேண்டும். அத்தோடு மக்கள் தங்களுக்கு நடக்கும் அநியாயங்களுக்கு நமது இந்திய நீதிமன்றங்களில்தான் நீதி கேட்கின்றார் கள். அவர்களுக்கு நீதியும் நியாயமும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என அறிவுறுத்தி வருகின்றார்கள்.

அதாவது நாமும் “வைகறை வெளிச்சம்“ இதழ் அதன் வாசகர் வட்டம், தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம், அனைத்தும் வெளியிட்ட நூல்கள், பிரசுரங்கள், தொடர்ந்து வெளியிடப் படும் கட்டுரைகள் இவற்றின் வழி கஷ்மீர் மக்களுக்கு நீதி கிடைக்க ஒரு பெரும் போரைத் தொடுத்து வருகின்றோம்.

ஆனால் நமது மத்திய அரசும், மாநில அரசும் மக்களை நித்தம், நித்தம் அதிகமான கொடுமைகளுக்கு உட்படுத்தி வருகின்றன.

அரசு கட்டவிழ்த்திடும் குரூம் நிறைந்த கொடுமைகளையெல்லாம் மறைத்திட அந்த மக்களை அதாவது கஷ்மீர் மக்களை உலகமகா தீவிரவாதிகளாகச் சித்தரித்து செய்திகளை இடைவிடாமல் தந்து கொண்டே இருக்கின் றார்கள். இதன்மூலம் நாட்டிலுள்ள ஏனைய மக்களின் கண்களிலிருந்து அரசு கட்டவிழ்த்து விடும் கொடுமைகளை மறைத்தே விடுகின்றார் கள். அந்த மக்கள் மீது வெறுப்பை உண்டாக்கி விடுகின்றார்கள்.

இஃதோர் நல்ல அரசியல் உத்தியாக அரசுகள் கருதலாம். ஆனால், இது நிச்சயமாக கஷ்மீர் மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்காது.

அந்த மக்களின் கொந்தளிப்புகளை அடக்காது. அந்த மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் கொடுமைகளும், கொலைகளும், கற்பழிப்புகளும் அந்த மக்களை நம்மிடமிருந்து அந்நியப் படுத்திக் கொண்டேதான் இருக்கும்.

இப்போது இந்தியாவை ஆளும் மத்திய அரசு இந்திய பிரச்சனையை - கஷ்மீர் மக்களின் பிரச்சனையை தீர்ப்பதற்கு பதிலாக கொடுமைகளின் குரூரங்களை அதிகப்படுத்தியே வருகின்றது. இது இந்த ஆட்சியாளர்களின் நீண்டநாள் ஆசை. திட்டம் - சதி!

இவர்கள் இந்தியாவையே முஸ்லிம்கள் இல்லாத இந்தியாவாக உருவாக்கிட வேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்டவர்கள். இவர்கள் எப்படி கஷ்மீர் மக்களை - முஸ்லிம்களை விட்டு வைப்பார்கள்.

இவர்கள் ஆட்சியில் அமர்ந்த பின்தான் "பெல்லட் குண்டுகள்" என்ற குண்டுகளை கஷ்மீர் மக்கள் மீது ஈரவிக்கமில்லாமல் பாய்ச்சிடும் வன்மத்தை கட்டவிழ்த்துவிட்டார்கள்.

இந்தக் குண்டுகளை அதிவேகத்துடன் "Spray" ஸ்பிரே போன்று அந்த மக்களின் முகங்களை நோக்கிப் பாய்ச்சினார்கள். இந்தக் குண்டுகள் முகத்தில் பாய்ந்து பார்வையைப் பறித்துவிடும். இந்தக் குண்டுகளை அதிக அளவில் எந்தக் கட்டுப்பாடுமின்றிப் பயன்படுத்தினார்கள். 10,000 மேற்பட்ட கஷ்மீர் இளைஞர்கள் ஆண்களும், பெண்களும், பார்வையை இழந்தார்கள், முடமானார்கள். இவர்கள் வாழ்நாள் முழுவதும் இன்னொருவரின் உதவியின்றி வாழ்ந்திட இயலாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். பலர் மருத்துவ மனைகளில் நீண்ட நெடும் நாட்களாக சிகிச்சைப் பெற்று வருகின்றார்கள்.

(மேலும் விரிவான விபரங்களுக்கு படியுங்கள் வைகறை வெளிச்சம் ஆகஸ்ட்-2016)

ஈவிரக்கமின்றி இந்தக் குண்டு வீச்சுக்கள் வீழ்த்திய பிணங்களைக் கண்டு பதறிய பலர் நீதிமன்றங்களின் படிகட்டுகளில் ஏறினார்கள் நீதி கேட்டு. நீதிக் கிடைக்கவில்லை. நமது உச்ச நீதிமன்றத்திற்கே சென்றார்கள். வேண்டா வெறுப்பாக உச்ச நீதிமன்றம் வழக்கை விசாரணைக்கு எடுத்தார்கள்.

உச்ச நீதிமன்றத்தில் அரசு தரப்பில் ஒரு பெரும் அதிர்ச்சி தகவலைத் தந்தார்கள். அது இந்த பெல்லட் குண்டுகளைப் பாய்ச்சியவர்கள் நமது இராணுவத்திலிருக்கும் பயிற்சியற்றப் படை வீரர்கள். அதனால் சில தவறுகள் நடந்து விட்டன என்றார்கள். பயிற்சியற்றவர்களை ஏன் பட்டாளத்தில் வைத்திருக்கின்றார்கள்? என்ற கேள்விக்கு இன்றளவும் பதிலில்லை.

இந்தப் பதில் அரசு வேண்டுமென்றேதான் பெல்லட் குண்டுகளைப் பயன்படுத்தியது என்பதை உறுதி செய்தது.

நம் உச்ச நீதிமன்றம் தன் பங்கில் இனி பயிற்சியற்ற படைகளை பெல்லட் குண்டுகளைப் பயன்படுத்திட அனுமதிக்காதீர்கள் என்பதை வெள்ளரிக்காவில் வெண்ணைத் தடவியதைப்போல் சொல்லி வைத்தது.

இப்படி எல்லா இடமும் எல்லா நிலையிலும் அந்த மக்களுக்கு அநீதியே இழைக்கப்பட்டது. ஆனால் உச்ச நீதிமன்றம் சென்றவர்கள் பெல்லட் குண்டுகளை குடிமக்கள் மீது பாய்ச்சுவது நம் நாட்டுச் சட்டங்கள் படியும், சர்வதேச சட்டங்களுக்கும் எதிரானது.

ஆகவே பெல்லட் குண்டுகளைப் பயன்படுத்திடக்கூடாது என உத்தரவிட வேண்டும் எனக் கோரினார்கள்.

அடுக்கடுக்கான ஆதாரங்களை தந்தும், உச்ச நீதிமன்றம் பெல்லட் குண்டுகளைப் பயன்படுத்திடக்கூடாது என உத்தரவிட மறுத்து விட்டது. இதனால் கஷ்மீரில் வாழும் மக்கள் பெல்லட் குண்டுகள் தங்கள் வாழ்க்கையில் ஒரு பகுதி என வாழ்ந்திட தலைப்பட்டுவிட்டார்கள்.

இப்படி வாழ்க்கையை இழந்தவர்கள் அல்லாமல் நித்தம் நித்தம் தீவிரவாதிகள் ஊடுருவி வந்தவர்கள் என்ற போர்வைகளில் அப்பாவி மக்களைக் கொலை செய்து வருகின்றார்கள்.

ஒருநாள் இர்ஷா என்ற பெண்மணி தன் வீட்டினுள் இருந்தாள். வெளியே துப்பாக்கிக் குண்டுகளின் சத்தம், பூட்டியே கிடந்த தன் வீட்டு ஜன்னல் கதவுகளைத் திறந்து வெளியே சற்றே உற்றுப் பார்த்தாள். நிமிடத்தில் அவள் முகத்தைத் துழைத்தன பெல்லட் குண்டுகள் என்ற கொத்துக் குண்டுகள்.

ஒரு குண்டு அவள் வாயிலும் நுழைந்தது. பார்வை பாதி பறிக்கப்பட்டது. மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றார்கள். அங்கே



கொத்துக் குண்டுகளால் துழைக்கப்பட்டுக் கிடந்த பிணங்களின் வரிசை, பார்வையை முழுமையாக இழந்தவர்களின் ஓலம். இதனால் இதனால் பாதிப்பார்வை போக மீதி உள்ள பார்வையைப் பெற்றிருக்கும் “இர்ஷா” முழுப் பார்வையும் இழந்த ஊரில் பாதிப் பார்வை உள்ளவள்தான் என்றாகிவிட்டது. வேதனையும் வலியும் நிரந்தரமானது. அதையும் கடந்து தனது லட்சியமாம் தன் படிப்பைத் தொடர்ந்திட விரும்பினாள், படிப்பைத் தொடர்ந்தாள்.

இப்போது அவள் பள்ளிப் படிப்பில் 10 ஆம் வகுப்பில் இருந்தாள். இப்போது பள்ளி தேர்வின் 10 ஆம் வகுப்பின் முடிவுகள் வெளி வந்துள்ளன. இர்ஷா அதிக மதிப்பெண்கள் பெற்று வெற்றிப் பெற்றுள்ளாள். மருத்துவக் கல்வியைக் கற்று மருத்துவர் ஆவார் என்பது கணிப்பு. அனைத்து ஊடகங்களும் அவளது ஆர்வத்தையும் சாதனைகளையும் பராட்டியுள்ளன.

இர்ஷா அன்று குண்டுகளால் அடிபட்ட போது அஃதோர் அதிர்ச்சியான செய்தியானது. காரணம், அவள் இருட்டும் நேரம் மட்டுமே தன் வீட்டு ஜன்னலைத் திறந்தாள். அதற்குள் அத்தனைக் குண்டுகளைப் பாய்ச்சினார்கள் என்றால் பாதுகாப்புப் படையினர் எவ்வளவு பயங்கரமான தாக்குதலை கஷ்மீர் அப்பாவிகள் மீது தொடுக்கின்றார்கள் என்பதற்கான எடுத்துக் காட்டாய் ஆனாள். அதனால் ஊடகங்களின் கவனத்தை அதிகமாப் பெற்றாள்.

இப்போது சாதனை பெண்ணாக வலம் வந்துக் கொண்டிருக்கின்றாள். அதனால் அனைத்து ஊடகங்களும் அவளைச் சுற்றியே வருகின்றன. நாமும் ஆகஸ்ட் 2016 இதழில் வெளியிட்டுள்ளோம்.

இப்படி பாதுகாப்புப் படையின் குரூரமான தாக்குதல்களுக்கிடையேயும், சாதனைகளைப் படைக்க கற்றுக் கொண்டுள் ளார்கள் கஷ்மீர் மக்கள்.

இவர்களைத் தீவிரவாதிகள் என்றும், பாகிஸ்தானிலிருந்து ஊடுருவியவர்கள் என்றும் மக்கள் மன்றத்தில் காட்டிடத் துடிக்கும் அரசுகளையும், அரசு தரும் செய்திகளை அப்படியே வாந்தி யெடுக்கும் ஊடகங்களை யும் வென்று காட்டி இருக்கின்றனர் என்றே சொல்ல வேண்டும்.

கஷ்மீர் மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தந்து அந்த மக்களை நம்மிடமிருந்து அந்நியமாக் கிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது இந்திய குடிமக்களின் தலையாயக் கடமை.

ஆதாரம் Sabrang Communicaiton News better : Feb-1, 2018


**குறிப்பு : கஷ்மீரில் என்ன நடந்துகொண்டிருக்கின்றது என்பதை முழு அளவில் தெரிந்துகொள்ள படியுங்கள் “கஷ்மீரில் பாதி விதவைகள்” தொகுப்பு மு. குலாம் முஹம்மது.**

**வேர்கள் பதிப்பகம்**

**மலிவு விலை ரூபாய் 76/-**

**தொடர்புக்கு : 8148129887**

☛ கஷ்மீர் - மோடி அரசின், இனப்படுகொலைகள் (வைகறை வெளிச்சம் ஆகஸ்ட்-2016)

☛ கஷ்மீர் - பார்வையைப் பறிக்கும் குண்டுகள் (வைகறை வெளிச்சம் ஆகஸ்ட்-2016)

☛ கஷ்மீருக்கு வெளியே, இந்தியாவுக்குள் தாக்கப்படும் கஷ்மீர் மாணவர்கள் (வைகறை வெளிச்சம் ஆகஸ்ட்-2016)

**வைகறை வெளிச்சம் செப்டம்பர்-2016**

கஷ்மீர்

☛ பிரச்சனை முழு வரலாறு...

☛ ஆறாக ஓடும் நமது கஷ்மீர் மக்களின் இரத்தம்.

☛ கஷ்மீரில் மோடி மோசடி

☛ சிரி, சிரி ரவிசங்கருடன் முசபர்வாணி.

☛ கஷ்மீரில் நித்தம் நடக்கும் படுகொலைகள்

☛ பெல்லட் குண்டுகள்

☛ இராணுவ வீரர்கள் இறந்தது எங்களுக்கு மகிழ்ச்சி யைத் தந்திடவில்லை. (வைகறை வெளிச்சம்-2016)

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் | ரூ. 60.00 |
| 8. | மால்கம் X - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 202 | ரூ. 110.00 |
| 17. | தீண்டாமைக்குத் தீர்வு | ரூ. 30.00 |
| 18. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மத் பக்கம்-163 | ரூ. 110.00 |
| 19. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 | ரூ. 90.00 |
| 20. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 21. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 22. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 23. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 24. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 25. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 | ரூ. 30.00 |
| 26. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் - செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 27. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 28. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 29. | இஸ்லாமும் விஞ்ஞானமும்- பக்கம் :48 | ரூ. 30.00 |
| 30. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 50.00 |
| 31. | இஸ்லாமும் பெண்களும் - பக்கம் : 112 | ரூ. 60.00 |
| 32. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 | ரூ. 70.00 |
| 33. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் | ரூ. 30.00 |
| 34. | திருக்குர் ஆன் கூறும் பொறுமை - டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 80.00 |
| 35. | 26/11 - விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 36. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் - அ. மார்க்ஸ் | ரூ. 20.00 |

37. முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்-
வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 16 ரூ. 10.00

38. நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? -
திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் - பக்கம் :8 ரூ. 10.00

39. குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? -
சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் - பக்கம் : 36 ரூ. 25.00

40. இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 ரூ. 20.00

41. கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் ரூ.25.00

42. கூரியூர் ஜின்னா ஷஹீத் - மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 ரூ. 60.00

43. முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 ரூ. 20.00

44. இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 ரூ. 30.00

45. சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 ரூ. 30.00

## எமது விற்பனையில். . .

01. கோவை கலவரத்தில் எனது சாட்சியம்-
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் ரூ. 100.00

02. மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்-
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு ரூ. 100.00

03. குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் -
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் ரூ. 170.00

### BOOKS IN ENGLISH

01. END OF CASTEISM - T.M. Umar Farooq,
English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam Rs. 50.00

02. THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media Rs. 695.00

03. MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong Rs. 325.00

04. KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi Rs. 350.00

05. WHO KILLED KARKARE -
The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition Rs. 300.00

06. 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif Rs. 275.00

07. ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed Rs. 60.00

08. MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media Rs. 280.00

09. PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)
- Syed Naseer Ahamed Rs. 25.00

10. IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy Rs. 150.00

### BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

### BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது - டி.எம். உமர் பாரூக் ரூ. 50.00

02. நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி - கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ரூ. 30.00

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.